
வைகுண்டர் ஞான மொழிகள்



புலவர்-கு. பச்சைமால்

வைகுண்டர்

ஞான மொழிகள்

★

தொகுப்பு:

திருமதி. நா. பன்னீர்மால்

உரை:

புலவர் கு. பச்சைமால்,
M.A., M.A., A.M.A.

★

பூவாணி பதிப்பகம்
சாமிதோப்பு - 629 704,
குமரி மாவட்டம்.

பிரகடனம்

- வைகுண்டர்
  ஞான மொழிகள்
  —'அறநூல்' - தொகுப்பு
- திருமதி. நா. பன்னீர்மால்
  புலவர் கு. பச்சைமால்
- முதற்பதிப்பு: 1987 டிசம்பர்
- உரிமை - வெளியீடு:
  பூவாணி பதிப்பகம்
  சாமிதோப்பு - 629 704
  குமரி மாவட்டம்

- VAIHUNDAR
  GNANA MOZHIGAL
  —Teachings of Bagavan
  Vaihunda Samigal
- Mrs N. Panneermal
  Pulavar K. Patchaimal
- First Edition: 1987 Dec.
- Copy Right & Published:
  Poovani Pathippagam,
  Samithopu - 629 704,
  Tamil Nadu, India.

படையல்

திருமேனி தொழுதகையால்
மறுமேனி தொழாமல்
குருவடி நிழல்வாழ்ந்து
குன்றாப் புகழ்படைத்துத்
தெருவெல்லாம் அய்யா
திருநெறி பரப்பிநின்ற
'தருமசீடர்' சிவணுண்டியார்
தாள்மலர்க்கே படைக்கின்றோம்....

நன்றி!

அச்சுப்பணி:
ஸ்ரீ பரந்தாமன் அச்சகம்,
செட்டிகுளம் சந்திப்பு,
நாகர்கோவில்.

அட்டைப்பணி:
திரு: கி. சுப்பிரமணியம்
வி. எஸ். கிராப்ட்ஸ்,
வடிவை, நாகர்கோவில்-1.

விலை: ரூ. 10/-

நூல்முகம்

பகவான் வைகுண்டசாமி வள்ளலாருக்கும் நாராயண குருவுக்கும் காலத்தால் முற்பட்டவர்.

தவமுனிவராகவும் - சமயக்காவலராகவும் - தீர்க்கதரிசியாகவும் வாழ்ந்தவர்.

1809-ல் தோன்றி 1833-ல் ஞானம் பெற்று 42 ஆண்டுகள் வாழ்ந்து 1851-ல் நிறைவுகண்ட அவதார புருஷர்.

தென்திருவிதாங்கூரின் தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சியின் சின்னமாக வாழ்ந்து - அரசப் பகையும் அயல் மதப் பகையும் ஏற்று அருள் உரைகள் பல வழங்கி 'அய்யா' என்ற தகைமை பெற்றவர்.

அவர் வரலாறும் - பெருமையும் அறிந்தவர்களெல்லாம் கேட்கும் முதற்கேள்வி 'அவர் போதனைகள் என்ன?' என்பதாகும்; அக்கேள்விக்கு விடையளிக்கவே 'வைகுண்டர் ஞான மொழிகள்' வெளி வருகிறது.

அய்யாவின் 275 'அருள்வாக்கு'கள் 'அகிலத்திரட்டு' என்ற அவர் வரலாற்றுக்காவியத்திலிருந்தும், 'அருள்நூல்' என்ற தனிப்பாடல் தொகுப்பிலிருந்தும் வாய்மொழிகளிலிருந்தும் தொகுக்கப்பட்டு 4 இயல்களில் 55 அதிகாரங்களாக இந்நூலில் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றை அரும்பாடுபட்டுத் தொகுத்தமைத்தவர் 'தர்மசீடர்' பரம்பரைக்கொழுந்தாகிய என் வாழ்க்கைத் துணைவி திருமதி. நா. பன்னீர்செல்வம் ஆவார். இது அவர் குலவிச்சை.

அய்யாவின் அருள்வாக்குகளின் வன்மையை ஒப்பீட்டு முறையில் விளக்க எளிய உரையும் சேர்க்கப்பட்டுள்ளது.

படிப்பாளிகள் - பக்தர்கள் - அக - புறச் சமயவாதிகள் மத்தியில் இருந்த ஒரு பெருந்தேவையை இத்தொகுப்பு நூல் நிறைவு செய்யும் என்று நம்புகின்றேன்.

வைகுண்டர் பொன்னடிகளை வணங்கி
வாசகர் கரங்களில் படைக்கின்றேன்.

அன்புடன்,

சாமிதோப்பு,

27—12—1987.

ரு. பச்சைமால்.

உள்ளுறை

அருள் வேண்டல் 1

அ. பாயிரவியல்

1. வைகுண்டர் 2-3
2. குரு 4-5
3. ஞானமொழி 6-7
4. நாராயணர் 8-9
5. சிவன் 10-11
6. இறைவன் 12-13
7. தத்துவமசி 14-15

ஆ. கல்வியியல்

8. கல்வி 16-17
9. அறிவு 18-19
10. பேச்சு 20-21
11. உண்மை 22-23
12. வீரம் 24-25
13. பெண் 26-27
14. இல்லறம் 28-29
15. நல்வாழ்வு 30-31
16. அறம் 32-33
17. குடி 34-35
18. நற்பழக்கம் 36-37
19. சாதி 38-39
20. நீதி 40-41
21. நன்றி 42-43
22. பெரியோர் 44-45
23. ஆட்சி 46-47

இ. கர்மவியல்

24. அன்பு 48-49
25. ஒற்றுமை 50-51
26. பகைமை 52-53
27. தீநெறி 54-55
28. கோபம் 56-57
29. கயமை 58-59
30. ஏழ்மை 60-61
31. செல்வம் 62-63
32. அநியாயம் 64-65
33. கேடு 66-67
34. ஆசை 68-70
35. அழிவு 71-72
36. கலி 73-74
37. பேய் 75-76
38. பலி 77-78
39. ஈகை 79-80

ஈ. ஞானவியல்

40. பக்தி 81-82
41. பணிவு 83-84
42. பொறுமை 85-86
43. அடக்கம் 87-88
44. வேதம் 89-90
45. வழிபாடு 91-92
46. இறைப்பணி 93-94
47. சான்றோர் 95-96
48. மானம் 97-98
49. தொண்டு 99-100
50. தர்மம் 101-102
51. மெய்யுணர்வு 103-104
52. முனிவர் 105-106
53. தவம் 107-108
54. யோகம் 109-110
55. வீடு 111-112

வாழ்த்து 113

அய்யா வைகுண்டசாமி

ஞானமொழிகள்

அருள் வேண்டல்

தெய்வ அருளே மனித வாழ்வில் இருள் அகற்றும் ஒளி தாயின் அருளால் பிள்ளைகள் வாழ்வது போல இறைவ அருளால் வாழ்கிறது மனுக்குலம். எனவே வைகுண்டர் இதிகாசமாகிய அகிலத்திரட்டு அவன் அருள் வேண்டித் துதிக்கிறது.

ஆறு பிறப்பில் அரியேஉன்னைப் போற்றாமல்
தூறு மிகப்பேசித் தொழாதே போனாலும்
ஏழாம் பிறப்பில் உம்மை எள் அளவு நினைத்தாலும்
வாழலாம் என்று அவர்க்கு வைகுண்டம் ஈந்தோனே
கல்வித் தமிழாய்க் கனபொருளாய் நின்றோனே
நல்லருள் புரிக நிதம். -அகிலத்திரட்டு. பக்கம்.43.

மானிடர்க்குப் பிறவி ஏழு. முதல் ஆறுபிறவிகளில் ஒருவன் திருமாலைப் போற்றாமல்-தொழாமல் அவதூறு பேசித்திரிந்தாலும் ஏழாம் பிறப்பிலாவது-என்அளவாவது திருமாலை நினைக்க வேண்டும். அப்படி நினைப்பவனுக்கு வைகுண்டபதவி அளித்து வாழ வைக்கிறார் திருமால், கல்வி அறிவாகவும் தமிழ்ச்சுவையாகவும் செல்வக்குவியலாகவும் திகழ்கின்ற திருமாலே! எங்களுக்கு நல்லருள் புரிக! என்று வேண்டுகிறது அகிலத்திரட்டு.

'அரகர' என்பது வைகுண்டர் திருமந்திரம்.

"அரகர என்ன அரியதொன்று இல்லை
அரகர என்ன அறும்பிறப்பு"
என்கிறார் திருமூலர்.

வைகுண்டபதவி பெறுவதே வாழ்வின் இறுதி இலட்சியம். அதற்கு அரியை நினைப்பதே உபாயம் என்று அறிவுறுத்துகிறார் வைகுண்டசாமி.

வைகுண்டர் ஞான மொழிகள்

அ. பாயிரவியல்

1. வைகுண்டர்

வைகுண்டர் இறை அவதாரம். திருமந்திரம் கூறுவது போலத் ''தானே உலகுக்கோர் தத்துவமாய் நிற்கும்'' தனிப் பெரும் கருணை வடிவம். அவர் 'தத்துவமசி'யாய்ப் பொலி யும்திறம் இங்கே போற்றப்படுகிறது.

1. மும்மூர்த்தி யெல்லாம்
ஒருமூர்த்தியாய் இருக்கும்
எம்மூர்த்தி யெல்லாம்
இயல்மூர்த்தியாய் இருக்கும்
வைகுண்டப் பெம்மான். -அகிலம். ப.223.

வைகுண்டப் பெருமான் மும்மூர்த்தியும் ஒரு மூர்த்தியான முழுமூர்த்தி, உலகின் எல்லா மூர்த்திகளும் இம்மூர்த்தியாய் இயன்று அமைந்துள்ளார்.

''தான் அவன் ஆவதே சமாதி'' என்பார் திருமூலர். எல்லாம் தானேயான இப்பேரவதாரத்தின் அருள் பெற வணங்குக.

2. உங்களுக்கு வேலைசெய்ய நான்
உலகில் வந்தேன் கண்ணுமக்காள். -அருள். ப 37

கண்போன்ற என் மக்களே உங்களுக்காக வேலை செய்யவே நான் உலகில் வந்தேன்.

''எப்பொழுதெல்லாம் தர்மம் அழிந்து போய் அதர்மம் எழுச்சி பெறுமோ அப்பொழுது நான் என்னைப் பிறப்பித்துக் கொள்கிறேன்'' என்றான் கண்ணன். தென்தமிழகத்தில் மக்கள் துயர் துடைப்பு வேலை செய்ய பகவான் வைகுண்டர் வந்து அவதரித்தார்.

3. தொண்டர் தனக்கு
என்றுயரும் வைகுண்டர். -அகிலம். ப. 224.

வைகுண்ட சாமி தொண்டர்களுக்கெல்லாம் ஒரு முன் உதாரணம் என்று சொல்லும் அளவில் அவதரித்து வந்தார்

அவதாரங்கள் தொண்டுக்கு அர்ப்பணம் ஆனவை. ''என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்பார் அப்பர் அடிகள். வைகுண்டர் தொண்டுக்காகவும் தொண்டர்க்குத் துணையாகவும் தோன்றினர்.

4. நீங்கள் என்ன குற்றம்
நிலையில்லாச் செய்தாலும்
தாங்கிப் பொறுப்பேன்
தருவேன் நான் நல்லறிவு. -அகிலம்-ப. 140

நிலையில்லாத அறிவால் நீங்கள் என்ன குற்றங்களைச் செய்தாலும் நான் தாங்கிப் பொறுப்பேன் நிலையான நல்ல அறிவை உங்களுக்குத் தருவேன் என்று உறுதியளித்துள்ளார் வைகுண்டர்.

''பிழைத்தவர் பொறுக்கை யெல்லாம்
பெரியவர் கடமை''

என்றார் மாணிக்கவாசகர். மக்கள் அறிவற்று என்ன குற்றங்களைச் செய்தாலும் அவற்றைப் பொறுப்பதோடு அவர்களுக்கு நல்ல அறிவையும் வழங்குகிறார் வைகுண்டர்.

5. நாரணர் வைகுண்டமாகி
நாட்டினில் வந்த அன்றே
காரணம் எல்லாம் ஆச்சுக்
கலியுகம் அழிந்து போச்சு. -அகிலம். ப. 5.

ஸ்ரீமந் நாராயணரே இந்த நாட்டில் வைகுண்ட சாமியாக அவதரித்து வந்தார். அவர் வருகைக்கு முன்பே கலியுகம் அழிவதற்கான காரணங்கள் எல்லாம் நிறைவேறிவிட்டன. அவர் வருகையோடு கலியுகம் அழிந்து போய் விட்டது. 1008 மாசி 20-ல் தர்மயுகம் தோன்றிவிட்டது.

''தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்''
என்பார் திருமூலர்.

வைகுண்டர் கலிமுடிச்சை அவிழ்த்தார். அவர் தோன்றியதால் கலியுகம் அழிந்து தர்மயுகம் தோன்றியது. கலியழிக்க வந்த கடவுள் அவதாரம் வைகுண்டர்.

O

2. குரு

குரு உயர் இலட்சியங்களின்கரு, அவர்மரத்துக்குவேர் போன்றவர், மகவுக்குத் தாய் போன்றவர், ''குருபக்தி உடைய ஒருவன் கல்லாமலே ஞானி ஆவான்!'' என்று விவேகானந்தர் முழங்குவார். விவிலியத்திருமறை ''குருவுக்குச் சீடன் மேற்பட்டவன் அல்லன்'' என்று விளக்குகிறது. குருவைப்பற்றிய வைகுண்டர் ஞானமொழிகள் அற்புதமானவை.

1. அரி நன்றாகக்
   குருவே துணை.

-அருள். ப. 2

திருமால் பக்தி நன்றாக வளரக் குருவே துணையாக இருக்கமுடியும்.

அரிச்சுவடி கற்பது அரியை அறிவதற்கே, கடவுளை உணர்வதே மெய்யுணர்வு, மெய்யுணர்வு குருவின் கொடை,

சித்தர் பத்ரகிரியார் ''ஆதிமுதல் ஆகிநின்ற அரி என்ற அச்சரம்' என்பார் ஆதிப்பரம்பொருளை 'அரி' என்ற அச்சரம் குறிக்கிறது, அதை உணரக் குருவின் துணை இன்றியமையாதது.

2. குலைய விடாதிருங்கோ
   குரு நினைவை.

-அகிலம். ப. 228

மனதில் குருபக்தியைக் குலையவிட்டு விடாதீர்கள்.

நீங்காத நினைவே பக்தியாகும். குருபக்தியில் வாழ்வோரின் ஞான அரும்புகளே மலர்ந்து-காய்த்து-கனியும். மற்றவை அரும்பிலேயே கரியும்.

''குருவே சிவம் எனக் கூறினன் நந்தி''என்பது திருமூலர் தவமொழி, குருவை மறப்பது இறைவனை மறப்பதாகும்.

3. உபதேசம் செய்யும் கூலி
   உடன் கையில் கொடுத்திடுங்கோ.

அருள். ப. 42

உபதேசம் செய்வதற்குக் கூலி (தட்சணை) அளிக்க வேண்டும். அதை உடனே கையில் கொடுத்து விடுங்கள்.

'வாத்தியான் கூலியை வைத்திருக்க வேண்டாம்' என்று உலகநீதி கூறுகின்றது.

4. கூறிய வாசகத்தை
உள்ளம் கொண்டவர்
குருவைக் காண்பார் -அகிலம். ப. 179.

குரு கூறிய வார்த்தைகளை மனதில் கொண்டவர் அவ் வார்த்தைகளில் குருவையே காண்பார்கள்.

குருவின் வார்த்தைகள் அவர் ஞான உடல். 'உய்ப்பானே ஆசான உயர்கதிக்கு' என்பது சிறுபஞ்ச மூலம். எனவே குருவின் வாசகங்களையே வழிகாட்டியாகக் கொண்டு வாழ்வில் உயர்வு பெற வேண்டும்.

5. குருவைக் கண்டு
வாழ்ந்திருப்பீர் -அகிலம். 189.

நல்ல குருவை வாழ்வில் கண்டடைந்து அவர் காட்டும் வழியில் வாழ்ந்திருங்கள்.

''கொள்ளினும் நல்ல குருவைக் கொள்ளுக
உள்ளம் பொருள் உடல் ஆவியுடன் ஈக''
என்பது திருமந்திரம்.

நல்ல குருவைக் கண்டடைவதில் தான் ஓர் உயர்வாழ்வு தொடங்குகிறது. எனவே ஞான குருவான வைகுண்டரை மெய்க்குருவாக ஏற்று வாழ்வை நெறிப்படுத்தலாம். ஞால குருவாகிய வைகுண்டரை ஞான குருவாக ஏற்போர் ஞானத்தின் களஞ்சியம் ஆவர்.

O

3. ஞான மொழி

வானத்தின் கீழே பூமியின் மேலே தோன்றுபவைகளில் ஞான மொழிகளே அழியா வரம் பெற்றவை. அவை நிறை மொழி மாந்தர் நினைவில் பூப்பவை. மறைமொழியாக வாழ் பவை. வைகுண்டர் ஞான மொழிகள் மறைமொழிகள்.

1. மானுவ தர்ம
   வரம்பு தவருமல்
   நான் உபதேசம்
   நவின்றது போல்நில்லும். -அகிலம்.ப. 362.

மானிடர்க்கு தர்ம வரம்புகள் உள்ளன. அவற்றில் தவரு மல் இருக்கவே நான் உபதேசம் செய்கிறேன். நீங்கள் என உபதேசப்படி வாழுங்கள்.

தர்ம வரம்புக்குள் வாழ்பவனே தலைசிறந்த மனிதன். அந்த வரம்புகளைச் சுட்டிக் காட்டுபவை ஞான மொழிகள்.

'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்'

என்கிறது கொன்றைவேந்தன். இந்த அமிர்தம் கொண்டு அமர வாழ்வு வாழ வேண்டும்.

2 தினம்ஒரு நேரம் எந்தன்
  திருமொழி யதனைக்கேட்டால்
  பனிவெள்ளம் போலப்
  பாவம் பறந்திடும். -அகிலம்.ப.182.

என் திருமொழிகளைத் தினம் ஒருமுறையாவது கேளுங் கள். பனிவெள்ளம் போன்று உங்கள் பாவம் பறந்துவிடும்.

பாவம் பனித்துளி. வைகுண்டர் ஞான மொழி கதிர் ஒளி. இந்த ஒளிபட்டால அந்தத் துளி பறந்துவிடும்.

''பாவத்தை ஞானத் தோணியால் கடக்கலாம்''

என்று கீதை கூறுகிறது. பாவத்தைப் பறக்கவைக்க வழி கூறுகிருர் வைகுண்டர்.

3. தேசம் மயம் ஏகம்
   திட்டித்த இந்திர நாராயணர்
   நிச்சயித்த படி அல்லாது
   மனிதர் நிச்சயித்தபடி அல்ல. -அருள். ப. 3.

நாராயணர் தேசங்களையும்உயிர்களையும்பிரபஞ்சத்தையும் படைத்தார். இந்திரனும் அவரே. பிரபஞ்சம்அவர் நிச்சயித்த படியே நடக்கிறது.

'திருமேனி தொழுத கையால்
மறு மேனி தொழுவது இல்லை''

என்ற வைராக்கியம் உடைய பக்தர்கள் மனிதர் நிச்சயித்தபடி ஒன்றும் இல்லை என்பது உணர்ந்து வைகுண்டர்க்கே பதறி வாழ்வார்கள். பொய் கொண்ட மற்றோர்க்குப்புத்தி அயர்ந்து அஞ்சுவதும் இல்லை.

4. பக்தி உள்ள மக்களுக்கும்
புத்தி உள்ள மக்களுக்கும்
பயங்கள் தெளித்து வைப்பேன்
பதறாதே என் மகனே. -அருள். ப. 23.

பக்தியும் புத்தியும் உள்ளவர்களே நல்ல மக்கள். அச்சம் அவர்கள் வாழ்வை அழித்துவிடாமல் நான் பயத்தைத் தெளித்து வைப்பேன். மக்களே நீங்கள் பயப்பட வேண்டாம்.

புத்தி உலக வாழ்வுக்கு உறுதி. பக்தி வைகுண்ட வாழ்வுக்கு ஆதாரம். இரண்டும் உடையவர்கள் வாழ்வில் அஞ்ச வேண்டாம் என்கிறது அகிலத்திரட்டு.

5. ஒருபுத்தி ஆகி
உள்என்னைக் கொண்டோர்க்கு
புதுப்புத்தி ஆகிப்
பூலோகம் ஆளவைப்பேன். -அகிலம். ப. 117.

ஒரு புத்தியாக என்னை உள்ளத்தில் கொள்பவர்களே வாழத் தெரிந்தவர்கள். அவர்களுக்குத் தேவையான புதுப்புது அறிவுகளை நான்வழங்கி பூவுலகை ஆளவைப்பேன்.

''பரம்பரையாகக் கிடைத்த ஞான யோகத்தை
ரிஷிகள் அறிந்திருந்தனர்.
அந்த யோகம் இவ்வுலகத்தில்
காலமிகுதியால் இழக்கப்பட்டது!''

என்று பகவான் வியாசர் கீதையில் கூறியுள்ளார்.

இதனால்தான் காலந்தோறும் வேதங்கள் தோன்றுகின்றன. கலியுகத்தில் தோன்றிய வேதம் வைகுண்டர் ஞான மொழிகள். அவைகளைக் கற்று வழிநடப்போர் பாக்கிய சாலிகள்.

O

4. நாராயணர்

நாவுக்கு இனிய மந்திரம் நாராயணாய. மந்திரத்தலைவர் நாராயணர். 'மலை தான் அருவிக் கையால் கடலையே தொட்டு விடுவது போல' இந்த மந்திரத்தால் நாராயணனையே தொட்டுவிடலாம். நாராயணரே வைகுண்டர்.

1. ஆதியாய் சூச்சம்
அளவெடுக்கக் கூடாத
நாதியாய் நின்ற
நாராயணப் பொருள்.

-அகிலம். ப. 11.

நாராயணர் உலகின் ஆதி மறை பொருள். அளவிட முடியாத சக்தி. அநாதியான அவரே எல்லாருக்கும் நாதியாய் நிற்கிறார்.

ஆழ்வார்கள் நாராயணக் கடலில் கரைந்தவர்கள். 'ஆதிமூலம்' என்று அறிந்தவர்கள். அவர்கள் நெறியையே அகிலத்திரட்டு போற்றித் தொடர்கிறது.

2. எங்கெங்கு மாகி
எவ்வுயிர்க்கும் தானாகி
அங்கங்கு மாகி
அளவுக்கு அளவாகி
நிரந்தரமாய் எங்கும்
நிறைந்த சொரூபமதாய்
பரப்பரயாய் நிற்பார்
பார அரி

-அகிலம். 357.

உலகப் பாரத்தையே தாங்கி நிற்கிறார் அரி என்ற நாராயணர். பிரபஞ்சம் எங்கும் காட்சி தருவது அவர் வடிவமே. எல்லா உயிராகவும் நிற்பது அவரே. என்றும் எங்கும் நிரந்தரமானவர் நாராயணர்.

இயற்கையே இறைவனின் உடல். எங்கும் நிறைந்த அழகில் நாராயணனைத் தரிசிக்கலாம் என்ற சித்தாந்தத்தை இவ்வரிகள் வெளியிடுகின்றன.

3. நல்லார் மனதில்

நாரணா என்று உரைப்பார் -அகிலம். ப. 204.

நல்லவர்கள் எப்போதும் மனதில் 'நாரணா' என்று உரைத்த வண்ணமே இருப்பார்கள்.

இறைவன் எங்கே இருக்கிறான்? என்ற வினாவுக்கு

''மாசற்றார் மனத்து உள்ளான்''

என்றார் தொண்டர் அடிப்பொடி ஆழ்வார். இவரே திருமாலின் நாமச் சிறப்புகளைக் கூறும் போது

''நரகமே சொர்க்கமாகும்

நாமங்கள் உடைய நம்பி''

என்று கூறியுள்ளார். எனவே நல்லோர்கள் நாராயண மந்திரத்தை மனதில்செபிக்கத் தவறலாகாது.

4. வல்ல நடுநாயம்

வாய்த்த வைகுண்டர். -அகிலம். 197.

அவதாரங்கள் நடுத்தீர்ப்பின் நாயகர்கள். வல்லமை வாய்ந்தவர்கள். நடுநிலையில் நிற்பவர்கள் வைகுண்டர் இத்தன்மை யெல்லாம் பொருந்தியவர். அதனால்தான் ''திருமாலுக்கு அடிமை செய்'' என்று ஔவை கூறினாள்.

5. வைகுண்டம் என்று

வையத்தோர் வாழும். -அகிலம். ப. 101.

வையத்தில் உள்ளவர்களே நீங்கள் நல்வாழ்வு வாழ வேண்டுமானால் 'வைகுண்டா' என்று கூறுங்கள்.

உபநிடதம் என்பது என்ன? நாராயணனின் பெயர் கூறுவதே என்பது ஆழ்வார்கள் முடிவு. அதனால்தான்

''மாதவன் பேர் சொல்லுவதே ஓத்தின் சுருக்கு''

என்றார் பூதத்தாழ்வார். திருமங்கை ஆழ்வாரும்.

''கண்ணன் கழலிணை நண்ணும் மனம் உடையீர்

எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே''

என்று பாடினார். நாமும் வைகுண்டா எனத் துதித்து வையத்தில் வாழ்வோம்.

O

5. சிவன்

அன்பும் சிவமும் ஒன்று என்று கண்டவர்நம் முன்னோர் திணைநிலத் தெய்வத்துள் சிவனை அடக்காது 'கடவுள்' ஆகவே கருத்தில் இருத்தினர் பழந்தமிழர். அந்த சிவச் சிந்தனையில் சித்தம் கரைந்தவர் வைகுண்டர். சிவன் பற்றிய அவர் ஞான மொழிகள் சிந்தனைக்குப் பெருவிருந்து ஆகும்.

1. காலமே நின்ற
   கடவுளே தஞ்சம். -அகிலம். ப. 32.

படைப்பின் முதல் சுழற்சி காலமே. அந்த காலமாக நின்ற கடவுள் சிவமே, அவரே நமக்குத் தஞ்சம்.

முக்காலம் உணர்ந்தவர்கள் சித்தர்கள். அவர்கள் கண்ட பரம் பொருள் வடிவம் சிவம். அதனால் தான் திருமந்திரம் 'சித்தர் சிவத்தைக் கண்டவர்' என்று துல்லியப்படுத்துகிறது. காலமாகவும் காலத்துக்குக் காரணமாகவும் இருப்பது சிவம். அதனைத் தஞ்சம் அடைவதே வாழ்வின் இலக்கு என்கிறார் வைகுண்டர்.

2. சிவனே சிவனே என்று
   சிவகருத்தாய் நில். -அகிலம். ப. 6

சித்தத்தைச் சிவன் பால் திருப்பு. சிவனே சிவனே என்று சிவனைக் கருத்தில் வைத்து நிலையான வாழ்வு பெறு.

ஔவை மூதாட்டி.
'சிவாய நமவென்று சிந்திப் பார்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை'
என்றார். எனவே சீவன உள்ளவர் சிவகருத்தாய் நிற்பாராக.

3. அல்லல் மிகத்தீரும்
   அவ்வரை நினைத்தவர்க்கு -அகிலம். ப. 241

சிவனை நினைத்து வாழ்பவர்களுக்குத் துன்பம் மிக இருந்தாலும் அவையெல்லாம் தீர்ந்துவிடும்.

மனிதர்க்குத் துன்பம் எல்லாம் பாசத்தால் தான் வருகின்றது. மணிவாசகர் சிவத்தைப் ''பாசவலை அறுக்கும் பழம் பொருள்'' என்பார். அந்தப் பழம் பொருளைப் பற்றிப் பாசப்பற்றை விடுக.

4. ஆதியான லிங்கமதை
அனுதினமும் போற்றிடுங்கோ -அருள். ப. 38

சிவலிங்கமே மனிதன் படைத்த இறை வடிவங்களில் ஆதியானது. அதை அனுதினமும் போற்றி வழிபடுங்கள்.

'சுத்த அறிவே சிவம்' என்றார் தாயுமானவர்.

'ஞானத்திரளாய் நின்ற பெருமான்' என்றார் சம்பந்தர்.

அந்த அறிவுக்குப் படைத்த வடிவம் சிவலிங்கம். அந்த வடிவம் எது?

'மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்'

என்று திருமூலர் உறுதிசெய்கிறார். எனவே அறிவு வடிவான அன்பு வடிவான இறைவனைத் தினமும் போற்றுவோம்.

5. சிந்தைமகிழ்ந்து முறைநடந்தால்
சிவனும் உனக்குள் வசம் ஆமே.
-அகிலம். ப. 207.

சிவனைச்சிந்தையில் இடையறாது நினைந்தால் சிந்தையுள் மகிழ்ச்சி பிறக்கும். வாழ்வில் ஒழுங்கு முறை அமையும். அத்தகையவனுக்குச் சிவன் உள்ளத்தில் வசமாவான்.

'அவன் அருளால் அவன்தாள் வணங்கி'

வாழ்பவர்கள் நாம். எனவே 'சிவகதியே கதி மற்றுள எல்லாம் பவகதி' என்று உணர வேண்டும் கொன்றை வேந்தன் கூறுவது போல 'சிவத்தைப்பேணின் தவத்துக்கு அழகு' என்பதை உணர வேண்டும். அன்பில் விளைந்த ஆரமுதாகிய சிவன் 'பக்திவலையுள் படுவோன்' என்பதை உணர்ந்து சிவனை மறவாது பக்தி செய்ய வேண்டும். அப்போது சிவம் வசமாகும். 'முப்புரமாவது மும்மலகாரியம்' தான். ஆகவே மும்மலத்தையும் அறுக்கலாம்.

O

6. இறைவன்

கல்வியின் பயன் கடவுளைத் தொழுவதே. இறைஞானமே நிறை ஞானம். மெய்யான இறையியல்பை மாந்தர்க்கு இவ்வியலில் உணர்த்துகிறார் வைகுண்டசாமி.

1. ஏகமதாய் நின்றபரன்
 இருந்து உலகை ஆள்கின்றார். -அருள். 35.

இறைவன் ஏகமாய் எங்கும் நிறைந்து இருந்து இந்த உலகை ஆள்கின்றான்.

"அழிவற்ற பரம் பொருளே பிரமம்
அதன் இயல்பை அறிதலே ஆத்ம ஞானம்"

என்பது உபநிடத உண்மை. பரம்பொருளே உலகை ஆள்கிறது என்பதை வைகுண்டர் விளக்கியுள்ளார்.

2. உண்டாக்கி வைப்பதும்நான் - உலகில்
 அழிப்பதும் நான் மகனே -அருள். ப. 35

உலகை உலகின் செல்வங்களை உருவாக்கி வைப்பதும் நானே. நானே அவற்றை அழிக்கவும் செய்கின்றேன்.

"உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டு உடையான்"

என்று கம்பர் கூறுவார். உலகைப் படைப்பதும் அழிப்பதும் திருமாலுக்குத் திருவிளையாடல் ஆகும்.

3. பொய்யனுக்குப் பொய்யாய்ப்
 பொருந்தி இருப்போனே
 மெய்யனுக்கு மெய்யாய்
 மேவி இருப்போனே. -அகிலம். ப. 44.

இறைவன் பொய்யனுக்குப் பொய்யாய்த் தோன்றுகிறான் மெய்யனுக்கு மெய்யாய் அவனோடே இருக்கிறான்.

ஆத்திகனே மெய்யன். நாத்திகன் பொய்யன் என்று அறுதியிருக்கிறது இத்திருமொழி. நம்மாழ்வாரும்

''பொய்யர்தம் பொய்யனை மெய்யர்தம் மெய்யனை'

என்று இவ்வுண்மையை விளக்கியுள்ளார்.

4. அன்பாகி வந்தவரை
அலைச்சல் செய்து ஏற்பதுண்டு
வம்பான மாற்றுரை
வளர்த்தே அறுப்பதுண்டு -அகிலம். ப. 171.

இறைவன் அன்பு நிறைந்த பக்தர்களை-அவர்கள் பக்தி யினைச் சோதிப்பதற்காக வருத்தம் கொடுத்துப்பின் ஏற்கிறான். வம்பர்கள் இறைவனுக்கு எதிரிகள் அவர்களுக்கு நன்மை செய்வது போல் முதலில் வளர்த்துப் பின்னர் அவர்களை முற்றிலும் அழித்து விடுகிறான்.

'ஆர்வம் உடையவர் காண்பார் அரன்தன்னை'

என்பது திருமந்திரம். அவர்களே இறையருள் பெறுகிறார்கள்.

5. எட்டாப் பொருளே
எளியோர்க்கு எளியோனே. அகிலம். ப. 40.

இறைவன் பக்தர்கள் அடைவதற்கு எளியவனாக இருக்கி றான். பக்தியற்றவர்களுக்கு எட்டாப் பொருளாவிளங்குகிறான்.

மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படும்.

என்றார் திருமூலர். மனமாயை மறைய இறைவன் எளிய பொருளாகி வருகிறான்.

எனவே ஆசாரக்கோவை கூறுவது போல ஒவ்வொரு வரும்

''தெய்வத்தைத்
தான் அறியுமாற்றால் தொழுது எழுக.''

O

7. தத்துவமசி

'தத்துவமசி' என்பது அத்வைதத்தின் சூத்திரம். 'தானே அவன்' என்பது இதன் எளிய விளக்கம். தன்னில் இறைவனைக் காணும் தகுதி பெற்றோர் இறைஞானத்தில் உயரிய படியில நிற்பவர்கள் ஆவர். பகவான் வைகுண்டர் இக்கொள்கையின் அடிப்படையிலேயே தன்னைக் குறிப்பிடுகின்றார்.

1. நான் நீயே அல்லால்
நடப்பது வேறில்லை. அகிலம். பக். 200.

நான் நீயே. இதைத் தவிர உலகில் வேறெதுவும் நடக்கவில்லை.

உலகில் ஒவ்வொரு பொருளும் இறைவனின் அமிசமே. இங்கு நடப்பவை யெல்லாம் அவன் நடப்புகளே.

''என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்''
என்பார் திருமூலர்.

வைகுண்டர் தன்னை அறிந்தபின் கூறிய சூத்திரம் இது.

2. இனத்துக்கு இனங்கள்
நான் இருப்பேன் சுவாமியென்று
அகிலம். ப. 203.

உலகில் உள்ள இனங்கள் தோறும் 'சாமி' என்று இருப்பவன் நானே.

உலகில் அவதாரங்கள்பல. யாவும் இறைவனின் அம்சங்களே.

'தத்துவம் எங்குண்டு தத்துவன் அங்குண்டு'
என்றார் திருமூலர்.

'தத்துவமசி' தத்துவப்படி இறை அவதாரங்கள் யாவும்தானே என்கிறார் பகவான் வைகுண்டர்

3. தான் ஆனாய் நீயும் தலைவனும் நீ.
அகிலம். ப. 200.

நீ இறைவன் தானாக ஆனாய். எனவே உலகின் தலைவனும் நீயே ஆகிவிட்டாய்.

இறைவனைப் பெரியாழ்வார்,

''வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கு''
என்று விளக்குவார். வேதாந்த விழுப்பொருளின் விளக்கமே வைகுண்டரின் இந்த சூத்திரம்.

4. சிவசிவா தான்ஆனேம்
தான்ஆனேம் தான்ஆனேம்
சிவசிவா நான்ஆனேம்
நான்ஆனேம் நான்ஆனேம். அருள். ப. 2.

தன்னில் என்னை ஐக்கியப் படுத்தி சிவம் அருளியதால் சிவமாகத் தான் ஆனேம். என்னில் சிவம் நிறைந்ததால் நாம் சிவமாக ஆனேம்.

விறகில் தீயைப் போலவும் பாலில் நெய்யைப் போலவும் இறைவன் எங்கும் மறைந்து நிற்கிறர், என்றர் அப்பர் அடிகள். உடலில் உயிர் போல எங்கும் மறைந்தும் நிறைந்தும் இருக்கிறன், என்றர் நம்மாழ்வார்.

இத்தகைய இறைவனைத் தன்னில் கண்டு 'நான் இறைவன்' என்று உணர்வதே வேதாந்த ரகசியம். வைகுண்டர் இக்கோட்பாட்டை ஏற்று சிவசிவா நான் ஆனேம் என்கிறர்.

5 தன்னை அறிந்ததுண்டால்
தலைவனை நீஅறிவாய் -அருள். ப. 36

நீ உன்னை முதலில் அறிய வேண்டும். அந்த அறிவு கைகூடினல் தலைவனுகிய இறைவனை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

தன்னை அறிவதே தலையாய அறிவு பின்னைய அறிவுகள் அதற்கு பின்னுனதே. தன்னை அறிபவன் தன்னில் இறைவன் மிளிர்வதை அறிவான். தான் நடமாடும் கோவில் என்பதை உணர்வான். பரிசுத்தமாவான்.

"சிவன் அருளால் சிலர் தெய்வத்தோ டொப்பர்"
என்று திருமூலரும் கூறுகின்றர்.

வைகுண்டர் தன்னை அறிந்து தலைவன் ஆனவர்.

தெய்வத்தோடு ஒத்தவர். தெய்வம் ஆனவர்.

O

ஆ. கல்வி இயல்

8. கல்வி

மனிதன் கல்வியால் ஆக்கப்படுகிருன். கல்வி இல்லாத வர்களை விலங்கு-மரம்-பூதம்-சதுப்பு நிலம் என்றெல்லாம் தமிழ்க் கல்வியாளர்கள் பழித்துள்ளனர். ஞானத்தின் வாய்க் கால் கல்வி. கல்வி பற்றிய வைகுண்டர் வாக்குகள் அழுத்தமானவை.

1. நாவிந்தையாக நால் வேதம் படி

அகிலம். ப. 7.

நாட்டிலுள்ள நாலாவித (பல) வேதங்களையும் படி. அக்கல்வி ஆச்சரியப்படும் படியான நாக்கு வன்மையை உனக்குத் தரும்.

'நாவினுள் நின்று மலரும் ஞானக் கலைகள் வேதங்கள். அவற்றுக்கு உயிரும் உடலும் அளிப்பவன் இறைவன்'.

என்பார் பெரியாழ்வார். நால்வேதம் படிப்பதால் ஆன்மீக அறிவு வளர்கிறது. எனவே மக்கள் வேதம் கற்க வேண்டுகிருர் வைகுண்டர்.

2. கல்லாரை எல்லாம் கசக்கி அறுப்பேன்.

அகிலம். ப. 268.

உயர்வளிக்கும் கல்வியைக் கற்காதவர்களைக் கசக்கி அறுப்பேன். அவர்கள் பயனற்று அழிவார்கள்.

'தனக்குப் பாழ் கற்று அறிவில்லா உடம்பு'

என்பது நான் மணிக்கடிகை. கற்றவர்கள் இறை உணர்வில் பொலிந்து மேற்கதி அடைவர். கல்லாதவர் உடம்பு வாழ்க்கை வாழ்ந்து அழிவர்.

3. விஞ்சைஎல்லாம் அறிந்துஅறிந்து நட.

அகிலம். ப. 207.

மெய் நூல்கள் கூறுகின்ற வித்தைகளை கற்றும் குருமூலம் கேட்டும் அறிந்து அதன்படி நடந்து கொள்க.

கல்விதான் வாழ்வில் மயக்கம் தீர்க்கும் மருந்து என்பது திரிகடுகம். மயக்கம் நீங்கியவர் வித்தையில் தெளிவர். அவர்கள்உண்மையான அறிவை அறிவார்கள். மெய்ப்பொருள் காண்பது அறிவு என்று திருவள்ளுவம் எல்லாம் அறிந்தபின் பெற்ற அறிவின்படி வாழ்வில் நடக்க வேண்டும். திருவள்ளுவரும் 'கற்றபின் நிற்க அதற்குத் தக'என்றே ஆணையிட்டார். வைகுண்டமும் அதே கருத்தை மக்களுக்கு அறிவுறுத்துகிறார்.

4. ஆசு மதுரம் சித்திரம்
   வித்தாரம் என்றசொல்
   அழிக்கவிடை த்ந்தாய் அருள். ப. 17.

கல்வியில்-கவிதையில் கற்போர்க்கு மயக்கம் தரும் ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் ஆகியவைகளை அழிக்க இறைவன் விடை தந்து விட்டார்.

தமிழ் இலக்கியத்தில் வடமொழி நெறிகளின் ஆதிக்கம் புகுந்தபின் மேற்கூறிய நான்கு வகையான கவிதைகள் தோன்றின. இவை சொல்லணிகள். தமிழ் மரபில் பொருள் அணிகளே போற்றப்படுகின்றன. சொல்லணிகள் பொருள் விளக்கநெறியல்ல. 'புலமைவிளையாட்டு'ப்போக்குடையவை. எனவே அவை அழிந்துவிடும என்றார் வைகுண்டர். இன்று அவை வழக்கிழந்து விட்டன.

5. தெளியார்க்கு உபதேசம்-நீ
   செப்பியிடு என் மகனே. அருள். ப. 41.

மகனே நீ கல்வி அறிவில் தெளியாதவர்களுக்கு அதைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

''எழுத்தினை உணரா ஏழை, பிறந்தும் பிறவாதவர்''

என்பது திரிகடுகம். எனவே மக்கள் பிறந்த பயன் அடையக் கல்வி வேண்டும். கற்றோர் கடமை கற்பிப்பதாகும். எனவே கற்றவர்கள் கற்பிப்பவர்களாக மாறவேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார் பகவான் வைகுண்டர்.

O

9. அறிவு

சமூக வாழ்வை சமத்துவப் படுத்த அறிவு வளர்ச்சியினுல் தான் முடியும். அறிவு கல்வியால் வருகிறது. இறை அருளால் வசப்படுகிறது. எனவே கல்விபற்றிக் கூறிய வைகுண்டர் தொடர்ந்து அறிவு பற்றியும் விவரிக்கிருர். அறிவில் நிறை வடையாத சமூகம் நல்வாழ்வின் இலக்குகளை எட்ட முடியாது.

1. நல்ல புத்தியாய்
இருக்காவிட்டால்
பிழைகள் வரும்.

அருள். ப. 30.

வாழ்வில் நல்லபுத்தியாய் இருக்காவிட்டால் பெரும் பிழைகள் வந்துவிடும்.

பிழைகள் அழிவின் முளைகள். நல்லபுத்தி பிழைகளை முளை யிலே அழித்துவிடும். எனவே நல்லபுத்தி ஒவ்வொருவருக்கும் வேண்டும். பிழைகளை நீக்க வலிமை வேண்டும. அந்தவலிமை யாருக்கு உண்டு?

'புத்திமான் பலவான் ஆவான்'
என்பது விவேகசிந்தாமணி.

2. புத்தி விபரீதமாய்ப்
பின்னும் ஆராயாதே.

அகிலம். 206.

புத்தியில் விபரீதம் ஏற்பட்டபின் செய்யும் ஆராய்ச்சி யாவும் தவருகவே முடியும். எனவே தெளிந்த உண்மைகளை ஆராய வேண்டியது இல்லை.

'அறிவின் வலிமையே வலிமை'

என்பார் பாரதியார். அந்த வலிமையும் விபரீத ஆராய்ச்சியால் அழிந்துவிடும். எனவே கற்ற அறிவு உடையுவன் எச்சரிக்கை யாகவும் இருகக வேண்டும்.

3. பொல்லாப்பு ஒழியணுமே சுவாமி
புத்தி ஒன்ருய்க் குவியணுமே.

அகிலம்.ப.308.

வாழ்வில் புத்தி ஒன்ருகக் குவிய வேண்டும். அதனுல் பொல்லாப்புகள் யாவும் ஒழிய வேண்டும்.

புத்தி ஒன்ருய்க் குவிவது கண்ணுடியில் கதிரவன் ஒளி குவிவது போன்றதாகும். அதற்கு ஆற்றல் அதிகம். ஒன்ருய்க் குவியும் புத்தி பொல்லாப்புகளை எரித்துவிடும். ஒன்ருய்க் குவிதல் எனபது அறிவை ஒரு முகப்படுத்துதல். நினைவை ஒரு பணியில் செலுத்துதல் 'எண்ணம் திண்ணியர் ஆதல்' என்று திருவள்ளுவர் இதனைக் குறிப்பிடுவார்.

4. பத்தி மறவாமல்
பதருமல் நீ இருந்தால்
புத்தி சொல்ல
நான் வருவேன் -அருள். ப. 25.

மனிதன் இறைவன் மேல் உள்ள பக்தியை மறக்காமல் இருக்க வேண்டும். பயப்படாதவனுகவும் இருக்க வேண்டும். அப்படியானுல் அவனுக்குத் தேவையான புத்தியைச் சொல்ல நானே வருவேன்.

'பிரான் அருள் உண்டு எனில் உண்டு நன் ஞானம்'

என்பார் திருமூலர். புத்தி உறுதியாக வேண்டும் என்ருல் பக்தி மறக்காமல் இருக்க வேண்டும்.

அச்சம் அறிவை அழிக்கும் நஞ்சாகும். எனவே அச்சத்தை யும் விட வேண்டும். பக்தியுள்ள ஆண்மையுள்ள மக்களுக்கு வைகுண்டர் புத்தி அளிப்பார்.

5. கர்த்தாவை நோக்கிக்
கடுந்தவங்கள் நாம் செய்தால்
புத்தி வரும் திருப்தி வரும் -அருள். ப. 25.

நல்ல புத்தியும் வாழ்வில் திருப்தியும் மனிதர்க்கு வேண்டும். இவை கைகூட வேண்டுமானுல் இறைவனை நோக்கித் தவம் செய்ய வேண்டும்.

தவம் என்பது அகம் நோக்கும் ஞானம். புத்தியும் திருப் தியும் இதனுல் கைகூடும்.

''சாத்திரம் ஓதும் சதுர்களை விட்டு நீர்
மாத்திரைப் போது மறித்து உள்ளே நோக்குமின்''

என்பார் திருமூலர்.

தவம் மனதை ஒருமைப் படுத்தி அறிவைக் கூர்மையாக் கும். பேராசையைத் தவிர்த்துத் திருப்தியைத் தோற்றுவிக்கும்.

O

10. பேச்சு

பேச்சு என்பது ஞானத்தின் உடல். மனத்தின் ஒலி வடிவம். உள்ளத்தின் புறத்தோற்றம். பிறர் நம்மை முதலில் அறிவது பேச்சின் மூலமே. எனவே அறிவுடையவன் பேச்சுச் செம்மையாக வேண்டும். எவ்வாறு பேச வேண்டும்? என்பதை வைகுண்டர் இவ்வியலில் விளக்கி உரைக்கிறார்.

1. சாரம் அறிந்து தான்உரை நீ -அகிலம். ப. 201

நீ எதை உரைத்தாலும் சாரம் அறிந்து உரைக்க வேண்டும்.

சாரமற்ற பேச்சு சக்கை. சாரம் பொருள் நலம். அர்த்தம். சாரம் அறியாப் பேச்சுப் பயனற்றது.மட்டுமல்ல காலவிரயமும் கூட.

2. பாவத்தைக் காணாதே
பகட்டு மொழி பேசாதே -அகிலம். ப. 206

பகட்டு மொழி பேசக்கூடாது. அதனால் விளைவதுபாவமே. பேச்சினால் பாவத்தைக் காணக் கூடாது.

சொல் என்பது அறம் விளையும் பயிர். அதில் பாவம் விளைவது வயலில் களை விளைவது போன்றதாகும். பகட்டு மொழியால் பாவம் விளைவதால் பகட்டு மொழியை அறவே விட்டுவிட வேண்டும்.

3. செவ்வென்ற பேச்சு
செப்பியிரு என்மகனே -அகிலம். ப. 208.

மகனே! நீ செம்மையான பேச்சுகளையே பேசி வாழ வேண்டும்.

இனிய சொற்களை, தமக்கும் பிறர்க்கும் நன்மை தரும் சொற்களைச் செவ்வென்ற பேச்சு என்கிறார். இவை கனி போன்ற சொற்கள் என்பார் திருவள்ளுவர்.

பேசும் போது விரைந்து பேசக்கூடாது. பேசியவை களையே மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டிருக்கக் கூடாது.

தேவையில்லாமல் விரித்து விரித்துப் பேசக்கூடாது. பொய் உரைக்கக் கூடாது. எதையும் சில எழுத்துக்களாலேயே எண்ணிய கருத்து எல்லாம் அடங்கும் வண்ணம் காலம் அறிந்து சொல்ல வேண்டும் என்று ஆசாரக்கோவை கூறுகின்றது. இத்தகைய பேச்சையே

''செவ்வென்ற பேச்சு''

என்றார் பகவான் வைகுண்டசாமி.

4. மோதிப் பேசாதுங்கோ
மோகம் பாராட்டாதுங்கோ. அகிலம். ப. 224.

பேசும் போது பகட்டு மொழியில் மோகம் கொண்டு பேசக் கூடாது. வன்சொற்களையும் பேசக் கூடாது.

மோதிப் பேசுவதால் மோசமே விளையும். பகட்டு மொழி மோகம் பாதகமே ஆகும். பகட்டுமொழி பொய் ஆகும்.

''பொய்த்துரை என்னும் புகை இருள்''

என்று இதைத் திரிகடுகம் பழிக்கிறது. மோதிப் பேசும் பேச்சு கோணல் பேச்சு ஆகும்.

''நடை தனக்குக் கோடா மொழி வனப்பு''

என்கிறது சிறுபஞ்ச மூலம். எனவே மோதல் பேச்சையும் மோகப் பேச்சையும் விட்டொழிக்க வேண்டும்.

5. கூவென்று உரையாதுங்கோ
கொக்கரித்துப் பேசாதுங்கோ.
அகிலம். ப. 224.

கூக்குரலிட்டு எதையும் பேசாதீர்கள். கொக்கரித்தும் பேசாதீர்கள்.

கூக்குரலிடுவது ஊரைக்கூட்டும் பேச்சு,
கொக்கரிப்பது ஆணவப் பேச்சு.

இரண்டுமே நல்வாழ்வுக்கு ஆகாதவை என்று அறிவுறுத்துகிறார் பகவான் வைகுண்டர்.

O

11. உண்மை

உண்மை உள்ளத்தின் கனி, வாழ்வுக்கு ஒளி. உயர்வுக்கு ஏணி.

''நான் மெய்யாக ஆராய்ந்து கண்டதில்
உண்மையை விட உயர்ந்தது எதுவுமே இல்லை''

என்று திருவள்ளுவர் வாக்குமூலம் அளித்துள்ளார். உண்மையின் உயர்வினை வைகுண்டர் தம் வாழ்வாலும் வாக்காலும் விளக்கியுள்ளார்.

1. உண்மை நினைந்தோர்க்கு
உதவி கொடு.

-அகிலம். ப. 209.

உண்மையை நினைந்து-பேசி வாழ்பவர்களுக்கு மற்றவர்கள் உதவி கொடுக்க வேண்டும்.

உலகம் பொய் மூடிக்கிடக்கிறது. உண்மைக்கு மரியாதை இல்லை. உண்மை வெற்றிபெற கஷ்டப்படுகிறது. உண்மைக்குப் பரிசு கிடைக்கவில்லை. தண்டனையே கிடைக்கிறது. எனவே உண்மையாளர்க்கு மற்றவர்கள் உதவ வேண்டும் என்கிறார் வைகுண்டர்.

2. சத்தியமாய் இருக்க வேண்டும்.

-அருள். ப. 30.

ஒவ்வொருவரும் வாழ்வில் சத்தியமாய் இருக்க வேண்டும்.

உண்மை உள்ளம் தொடர்பானது. வாய்மை வாய் தொடர்பானது. மெய்மை உடல் வழியானது. இம்மூன்றிலும் அமைவது சத்தியம். இதைப் பேணிஒழுக வேண்டும் என்கிறார் வைகுண்டர்.

3. சத்தியம் தான் மறந்து
மத்திபத்தைச் செய்யாதே
மத்திபத்தைச் செய்தாயானால்
மனநாகம் தீண்டிவிடும்.

அருள். ப. 41.

மத்திபம் என்பது பொய்கலந்த உண்மை. இது பொய்யினும் தீமையானது. சத்தியம் மறந்து மத்திபத்தில் நிற்காதே. மத்திபம் செய்தால் மனம் என்ற நாகப்பாம்பு தீண்டிவிடும்.

மெய்யில் நிற்பவர் சிலர். பொய்யில் நிற்பவர் மிகப் பலர். மத்திபத்தில் நிற்பவர் சிலர். மத்திபம் செய்பவன் மனம் குழம்பியிருப்பான்.

தன்னெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்

என்பது குறள். தன்னைச்சுடுவதையே 'மனநாகம் தீண்டும்' என்கிறார் பகவான் வைகுண்டர்.

4. மாய நினைவு
மனதில் நினையாதுங்கோ -அகிலம். ப. 223.

பொய் என்ற நிலையற்ற நினைவை யாரும் மனதில் நினைக்காதீர்கள்.

பொய் ஒரு மாயம். அதை நம்பியவர்கள் மோசம் போவார்கள். நட்பு கூட பொய்யால் அழிந்துவிடும்.

''நட்பின் கொழுமுளை பொய் வழங்கின் இல்லாகும்'

என்பது நான்மணிக்கடிகை. எனவே பொய் மாயத்தை யாரும் போற்ற வேண்டாம் என்கிறார் வைகுண்டர்.

5. தரணியது அழிந்தாலும்
சத்தியம் அழியாதப்பா -அருள். ப. 42.

உலகமே அழிந்தாலும் சத்தியம் ஒரு நாளும் அழியாது. உலகில் அணையாத விளக்கு எது?

''சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு''

என்பது குறள்.

இந்த பொய்யா விளக்கை வாழ்வின்ஒளியை அணையாமல் ஒவ்வொருவரும் தம் வாழ்வில் எற்றி வாழவேண்டும்.

O

12. வீரம்

வீரம் என்பது உள்ளத்தின் உறுதிநிலை. எதற்கும் பின் வாங்கா வலிமை. மரணத்துக்கும் அஞ்சாத மன உறுதி. வீரம் போர்க்குணத்தின் பிறப்பிடம். போர்க்குணம் இல்லாத சமூகம் அழிந்துவிடும். எனவே வீரம் பற்றி உபதேசிக்கிறார் வைகுண்டர்.

1. விளக்குப் போலே
வீரத்தனமாக இருங்கள். -அகிலம். ப. 275.

விளக்கு எவ்வாறு வீரத்தனமாக விளங்குகிறதோ அது போல நீங்களும் இருங்கள்.

விளக்கு ஏற்றப்பட்டு விட்டால் வெளிச்சமளிக்கத் தொடங்கிவிடும். காற்றிலும் அசையும். அசைதல் பின் வாங்குதல் அல்ல. அணையலாம். அது மரணம் தான். ஆனால் தோல்வியல்ல. எண்ணெய்யே அதன் இரத்தம். ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரை வீரன் வீழமாட்டான். எனவே விளக்கை வீரத்துக்கு உவமையாக்கியுள்ளார் அய்யா வைகுண்டசாமி.

2. வலியாரைக் கண்டு மகிழாதே.
அகிலம். ப. 203.

செல்வ வலிமை உள்ளவர்களைக் கண்டு நீங்கள் மகிழ வேண்டாம்.

உலகில் வலிமைகள் பலவாக உள்ளன. அவற்றுள் பணம் ஒன்று. பணம் ஒரு மாய்மாலம். அதைக்கண்டு பெரு வீரர்கள் கூட மயங்கி-மகிழ்ந்து வீழ்ந்து போவதுண்டு. அரசியல் அரங்குகளில் இதற்குச் சான்றுகள் உண்டு. எனவே பணத்தைக் கண்டு மயங்காதே, மகிழாதே என்கிறார் அய்யா.

3. யாருக்கும் பதறாதே
அச்சமில்லை என்மகனே. அருள். ப. 29.

மகனே! எதற்கும் அச்சம் கொள்ளாதே. யாருக்கும் பயப் படத் தேவையில்லை.

'அச்சம் கீழ் மக்களின் ஆசாரர்'

என்பார். திருவள்ளுவர். அச்சமே அழிவின் தொடக்கநிலை ஆண்மையே புகழின் விதை. எனவே யாருக்கும் எதற்கும் அஞ்ச வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டது.

4. உறுதி மகனே உலகமதை ஆளுவது.

அகிலம். ப 206.

மகனே இந்த உலகத்தை மன உறுதியே ஆண்டு வருகிறது. எனவே உறுதி கொள்க

கோழை என்பவன் மன உறுதி இல்லாதவனே. ஆண்மை என்பது மன உறுதியே. ஒவ்வொருவனுடைய செய்கையிலும் இதைக் காணலாம்.

''சீருடை ஆண்மை செய்கையின் அறிய''

என்பது முதுமொழிக் காஞ்சி.

மகாத்மா காந்தியடிகள்,

''அஹிம்சைக்கு ஆண்மை தேவை,
அதுவே வீரத்தில் வீரம்''

என்பார். இந்த உள்ள உறுதியே உலகை ஆண்டு வருகிறது.

5. மரணம் வந்து ஜீவன்
மாண்டு போகும் போது
நன்மையது கூட நாடுமே அல்லாது
தீன்மை வாராது -அகிலம். ப. 22.

ஒவொரு ஜீவனுக்கும் மரணம் உண்டு. ஜீவன் மாண்டு போகும் போது மறு உலகுக்கு உடன் செல்வது நன்மையே. தீமை இம்மண்ணிலேயே தங்கிவிடும்.

மாவீரர்களுக்கும் இப்பாடல் எச்சரிக்கை விடுகிறது. வீரம் என்பது நன்மையின் தோட்டமாக அமைய வேண்டும். நெருஞ்சிக் காடாக ஆகிவிடக் கூடாது.

'உள்ளம் உடைமை உடைமை'

என்று ஊக்கம் உடைமைதான் ஒருவனுக்கும் செல்வம் என்பதை குறள் அறுதியிடுகிறது. அது தீமைக்குத் துணை போய் விடலாகாது. அதனால் நரகமே பெறுவர்.

O

13. பெண்

பெண் மண்ணின் கண். மானுடத்தின் பண். அவள் கன்னிமையின் காதலும் மணவாழ்வின் கற்பும் இல்லறத்தின் குழந்தை அன்புதான் இந்த மண்ணையே பாதுகாத்து வருகின்றன. பெண் பற்றிய வைகுண்டர் சிந்தனைகளை இவ்வியலில் காணலாம்.

1. கற்கதவு போலே கற்பு மனக்கதவு.

-அகிலம். ப. 9.

பெண்ணின் மனம் ஒரு கதவு. அதுவும் கல்கதவு. அதனால் கற்பைக் காக்கிறாள்.

கற்பைக், 'கடவுள் கற்பு' என்று அகநானூறு துதிக்கிறது.

'உலகம் தாங்கிய மேம்படு கற்பு'

என்று பதிற்றுப் பத்து போற்றுகிறது.

கற்பு என்பது மன ஒழுக்கம், மனக்கட்டுப்பாடு என்ற தாழ் அதைப் பாதுகாத்து நிற்கிறது. நளவெண்பாவில் புகழேந்திப்புலவர்

'கற்புத்தாழ் வீழ்ந்த கதவு' என்று கவிபுனைந்துள்ளார்.

2. நல்லோராய்ப் பெண்கள்
நாடிஎண்ணக் கூடாது. அகிலம். ப. 208.

பெண்கள் எல்லோரையும் நல்லோராக எண்ணி விடக் கூடாது. நல்லோரை ஆராய்ந்து தான் காண வேண்டும்.

'கற்புடைப் பெண் அமிர்தம்'

என்று சிறுபஞ்சமூலமும்.

'மங்கலம் என்ப மனைமாட்சி'

என்று திருக்குறளும் நலமுள்ள பெண்ணைப்புகழ்கின்றன. ஆனால் எல்லாப் பெண்களும நல்லோராய் இருப்பதில்லை. அதை ஆராய்ந்துதான் நல்ல பெண்ணைத் தேட வேண்டும் என்று அகிலத்திரட்டு அறிவுறுத்துகிறது.

3. மாமோகம் கொண்ட இடம் மன்று.

அகிலம். ப. 132.

உள்ளத்தில் பெரிய மோகத்தை ஏற்படுத்தும்

பெண்ணையே உயர்ந்த மன்றமாக மனிதர் எண்ணுகின்றனர். அடைய விரும்புகின்றனர்.

நல்ல பெண்ணை நாடித்தேட வேண்டும்.

மோகம் தோன்றிய இடத்தில் நாடுதல் நிகழாது. எனவே மோகத்துக்கு முன் நல்ல பெண்ணை நாடிக் காண வேண்டும் என்று எச்சரிக்கிறார் வைகுண்டர்.

தவறினால் மோகம் முப்பது நாளில் தீர்ந்துவிடும்.

4. பெண்பாவம் பாராதே பேணியிரு

அகிலம். ப. 209.

பெண் ஏதும் தெரியாதவன் என்று நினைத்து இருந்து விடாதே. அவளைப் பேணி இரு.

''வாழாமல் பெண்ணை வைத்துத் திரிய வேண்டாம்''

என்று உலகநீதி உணர்த்துகிறது. பெண்ணைப் பாவம் என்று வைத்துவிட்டால் கேடுஏற்படும்.

''மாதர் கெடுவதனால் வர்ணக் குழப்பம் உண்டாகிறது. என்பார். பகவான் கிருஷ்ணன்.

பெண்ணை நன்றாகப் பேணி உரிய காலத்தில் மணம் செய்விக்க வேண்டும் என்று பெற்றோர்க்கு அறிவுறுத்துகிறார் வைகுண்டர்.

5. உன்தன் பலம் குலைக்க உலகில் பெண்ணைப் படைத்து விட்டேன்

அருள். ப. 33

உலகில் ஆண்களின் மன உறுதியைக் குலைக்க பெண்ணைப் படைத்து விட்டேன்;

எதற்கும் குலையாத ஆணின் மன உறுதி ஒரு பெண்ணின் முன் குலைந்தோடிவிடும். அதையே நெறிப் படுத்தினால் பல மடங்கு உறுதியாக வளரும் அதற்குப் பெண் உதவுவாள்.

எனவே மன உறுதி குலையுமிடத்தில் உடனே இல்லறம் மேற்கொண்டு ஆண் தன்னைப் பேணிக்கொள்ள வேண்டும்.

O

14. இல்லறம்

'அறம்' என்று சொல்லப்படுவதே இல்லறத்தை மட்டும் தான். இருவர் இழுக்கும் ஒரு வண்டி அது.

'இல்லறம் அல்லது நல்லறம் அன்று'

என்று ஔவை மொழிவாள். அன்புடைக் காதலர் வாழ்வில இல்லமே கோவிலாகும். அன்பே தெய்வமாகும் பணிவிடையே வழிபாடாகும். அத்தகு ஒப்பற்ற இல்லறத்தை வைகுண்டர் வகுத்துரைக்கிறார்.

1. தேனும் பாலும் போலே
   தேசமதில் வாழ வேண்டும். அகிலம், ப. 309.

காதலர்கள் பாலும் தேனும் கலப்பது போலக் கலந்து தேசத்தில் வாழ வேண்டும்.

மலர் தோறும் தொகுத்த தேன் பெண் பால் ஆண், பாலில் தேன் கலந்தபின் பாலும் தேனும் வேறுவேறல்ல இருவர் இணைந்தபின் ஒருவரே அந்த உறவை.

'உயிர் கலந்து ஒன்றிய தொன்றுபடு நட்பு'
என்று அகநானூறு வர்ணிக்கிறது. ஒருவர் உயிர் ஒருவரில் கலந்து ஒன்றி வாழ வேண்டும்.

2. இல்லறத்தை விட்டுத் தவம் இல்லை.
   அகிலம். ப. 142.

தவங்களில் சிறந்த தவம் மனம் ஒன்றிய இருவர்நடத்தும் இல்லறமும் வேறு தவம ஏதும் இல்லை.

இல்லறம் உயர்ந்ததா? துறவறம் உயர்ந்ததா? என்ற வினவுக்குத் தவத்துறவி தன் பசி தாங்குவான். இல்லறந் தான் பிறர் பசி தீர்பான். எனவே தாங்கியவனை விடத தீர்ப்பவனே உயர்ந்தவன். அவன் அறமே உயர்ந்தது என்று வள்ளுவர் விடையளித்துள்ளார்.

எனவே தவத்தில் சிறந்தது இல்லறம். அதைவிட்டுத் தவம் வேறு தேவையில்லை என்கிறார் வைகுண்டர்.

3. ஆணும் பெண்ணும் கூடி
   ஆசாரம் செய்திடுங்கோ. -அருள். ப. 29.

இல்வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் கூடி முகத்தைக் காக்க வேண்டும்.

'ஆசாரம் என்பது கல்வி'

என்பது நான்மணிக்கடிகை. கற்பு என்பதும் கல்வியே. ஆணும் பெண்ணும் கற்புநெறியில் நிற்க வேண்டும். இல்லறம் என்பது ஒருவர் அறம் அல்ல, அதுபோல் கற்பு என்பதும் ஒருவர் ஒழுக்கம் அல்ல என்கிறார் வைகுண்டர்.

4. கணவன் மொழியக் கலவுமொழி
பேசாதாள் மனைவி. அகிலம். ப. 9 .

கணவன் மொழிக்கு எதிர் பேச்சுப் பேசாதவளே நல்ல மனைவி.

கலவுமொழி கலவரமொழி. எதிர்ப்பேச்சு. இல்லறத்தில் ஆணைவிட பெண்ணுக்கே பொறுப்பு அதிகம். அவள் பொறுமை அன்பு ஒழுக்கம் ஆகியவற்றில் அதிகம்பொறுப்பு உடையவள். கணவனை வழிபட்டு வாழ வேண்டும் அவள்,

'பெண் இனிது பேணி வழிபடின்'

என்பது நான் மணிக்கடிகை.

'தாரம் மாணுதது வாழ்க்கை அன்று'

என்பது முதுமொழிக் காஞ்சிப் எனவே பெண் கணவனுக்கு எதிர்ப்பேச்சுப் பேசுபவளாக இருக்கக் கூடாது எனகிறார் வைகுண்டர்.

5. சிறிது பெரிது என்றுமிகச் சீறுமல்
உறுதி பெரிது உடையோனே தஞ்சமென்று
கூடிக் குலா விகுணமாய் மகிழ்ந்திடுங்கோ.
-அகிலம். ப. 252.

வாழ்க்கையில் கணவனும் மனைவியும் வளம் வறுமை ஆகியவைகளைக் கண்டு சிறிது பெரிது என்று சீறக் கூடாது. மன உறுதிதான் பெரிதென்று மதிக்க வேண்டும் இறைவனே தஞ்சமென்று பரிபூரணமாக நம்பி நற்குணங்களோடு கூடிக் குலவி மகிழ்ந்து வாழ்க.

வாழ்வில் வளமும் வறுமையும் இயல்பானவை. அவற்றைக் கண்டு சீறவோ சிரிக்கவோ ஏதுமில்லை. எதையும் தாங்கும் மன உறுதிதான் வாழ்வுக்கு முதல் தேவை. பக்தி அதற்கு மேல் தேவை. இவை இருந்தால் வாழ்வு சொர்க்கமாகிவிடும்.

''பொற்புடை மகளிரொடு பொருந்தியே வாழ்தல்
இம்மையில் சொர்க்கம்''

என்பது விவேகசிந்தாமணிப் புலவர் கொள்கை.

O

15. நல்வாழ்வு

நன்மை என்பது அறம் ஒன்றே. நல்வாழ்வு அறவாழ்வே வேதங்களும் சமயங்களும் மானிட நல்வாழ்வை நோக்கமாகக் கொண்டுதான் எழுந்துள்ளன. நல்வாழ்வு ஏது? எவ்வாறு வாழ வேண்டும்? என்பதை வைகுண்டர் விளக்குகிறார்.

1. நாடும் பெரியோர்
நலமாக வாழ்ந்திருப்பார். -அகிலம். ப. 205.

நன்மையை நாடுபவர்களே பெரியோர்கள். அவர்கள் என்றும் நலமாக வாழ்ந்திருப்பார்கள்.

பிறர் நலம் நாடுபவர்கள் பெரியோர்கள். அவர்கள் முயற்சியால் பிறர் நலம் பெறுவர். அறம் அவர்களுக்கும் நலம் செய்யும்.

2 அறிவில் விநோதம்
அதிகநேர் உத்தமமாய்
குறியாய் மனதில்
குறித்து வாழ்ந்திடுங்கள் -அகிலம். ப. 276.

புதுமையான அறிவு பெற்று அதிக நேர்மையுள்ள உத்தமராகக் கடவுளை எப்போதும் மனதில் இருத்தி வாழ்ந்து வாருங்கள்.

காலங்கள் தோறும் தோன்றும் புதுமை அறிவு பெறுக. அறிவு புதுமை வாழ்வில் வெற்றியும் இன்பமும் அளிக்கும். இது இகவாழ்வு மார்க்கம். மனதில் கடவுளைக்குறித்து வாழ்க. அது பரவாழ்வு மார்க்கம்.

3. வண்ணமாய் நீதம் முன்றும்
வரம்பு அணு விலகிடாமல்
தண்ணமாய் இருந்து வாழும்
சனங்களே பதற வேண்டாம்
திண்ணமாய் தன்னந் தன்னால்
சிறப்புடன் இருந்து வாழ்வீர்.

அகிலம். ப. 366.

அறம்பொருள் இன்பநெறிகளில் நீதி தவறுதவண்ணமாய் வளமாக இருந்து வாழுங்கள். மக்களே நீங்கள் அஞ்சவே

வேண்டாம். இவ்வாறு வாழ்ந்தால் நீங்கள் தனித்தனியே சிறப்புடன் இருந்து வாழ்வீர்கள். இது திண்ணம்

அறம் பொருள் இன்ப வாழ்வில் வரம்பு தவறக் கூடாது என்று எச்சரிக்கிறார். வரம்பு தவறு வாழ்வு வளவாழ்வாக அமையும் என்று உறுதியும் அளிக்கிறார்.

4. உன்னிலும் பெரியோன் ஆக
ஒருவன் உள் உயர்த்தி கண்டால்
தன்னிலும் பெரியோன் ஆக
தழைத்து இனிது இருந்து வாழ்வீர்.

-அகிலம். ப. 366.

உன்னிலும் உயர்ந்த உள்ளம் உடையவனாக ஒருவனைக் கண்டால் பொறாமை கொள்ளாதே. அவனைப்போற்று, இப் பண்பு உனக்கு வந்தால் நீ அவனைக் காட்டிலும் பெரியோனாகத் தழைப்பாய். இனிய வாழ்வு பெறுவாய்.

"வாழ்வது வந்த போது மனந்தனில் மகிழ வேண்டாம்
தாழ்வது வந்த தானால் தளர்வரோ தக்கார்?"
என்று விவேகசிந்தாமணி கேட்கிறது.

தான் பெரியோன் என்று மகிழ வேண்டாம். தனக்குத் தாழ்வு வந்தால்தளரவும் வேண்டாம். பிறர் உயர்வை ஏற்றுப் போற்றினால், தான் அவரை விட உயரலாம் என்கிறார் வைகுண்டர்.

5. நல்லோர்க்குக் காலம் நலம் ஆகும்.

அகிலம். ப. 219.

காலம் எப்போதும் நல்லவர்களுக்கு நல்லதாகவே அமையும்.

கேடுகள் வரும் போது காலத்தின்மேல் பழிபோட வேண்டாம். நல்லவர்க்கு எல்லாக் காலமும் நல்ல காலமே.

O

16. அறம்

மரங்கள் எல்லாம் வேரில் நிலைகொண்டிருப்பது போ நற்காரியங்கள் எல்லாம் அறத்தில் நிலைகொண்டிருக்கின்றன அறம் என்பது தர்மம். அவதாரங்கள் அறம் காப்பதற் தோன்றியுள்ளன. வைகுண்டர் அறங்காக்கத தோன்றி அவதாரமே. அவருடைய அறக்கோட்பாடு இவ்வியலி விளக்கமாகிறது.

1. தாழக் கிடப்பாரைத்
   தற்காப்பதே தர்மம்

-அகிலம். ப. 202

கால தேசச் சூழ்நிலைகளால் தாழ்ந்து கிடக்கும் மக்களை காத்து அவர்கள் நிலையை உயர்த்துவதே அறமாகும்.

தாழ்த்தப் பட்டவர்கள் உயர்த்தப் படுவதற்காகத் தோன்றிய அவதார புருஷர் வைகுண்டர். அறம் பற்றிய இவ்வற்புத விளக்கத்தை ஏற்றுக் கவிமணியும்.

'தளர்ந்தவரைத் தாங்குவதே தர்மம் ஆகும்'

என்று பாடியுள்ளார்.

2. தர்மம் பெரிதப்பா சாற்றி இரு.

அகிலம், ப. 198.

உலகில் தர்மமேமற்ற எல்லா வற்றையும் விடச் சிறந்த தாகும் இதை அனைவரும் அறியச் செய்க.

''மனம் நெகிழ்ந்த 'அருளினால் ஆகும் அறம்''

எனபது சிறுபஞ்சமூலம். அருளில் தோன்றும் அறம் அனைத்திலும் உயர்ந்தது. இதை உலகமறியச் செய்ய ஆணையிடுகிறார் வைகுண்டர்.

3 தர்மம் பெரிதப்பா தாங்கி இரு.

அகிலம். ப. 204.

தர்மம் தான் வாழ்வில் மிகச் சிறப்பானது. அதை அனைவரும் தாங்கி வாழ வேண்டும்.

தர்மம் எது என்பதை மக்கள் அறியவில்லை. பசு பல நிறத்திலும் வடிவிலும் இருந்தாலும் பசு தருகின்ற பால்

ஒரே நிறமானது. ஒரே சுவையானது தான். ஒருமை அறமே உலகைக் காப்பது அதைச் சுமைதாங்கி போல ஒவ்வொருவரும் தாங்கி நிற்க வேண்டும்.

4. தர்மம் பெரிது அப்பா
தான் சொன்னேன். அருள். ப. 24.

நான் சொல்கிறேன் கேள் அப்பா! தர்மம் தான் இந்த யுகத்தில் மிகவும் சிறப்பானது.

'அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை'

என்று திருவள்ளுவரும் தெளிவுபடுத்தினர்.

வைகுண்டர் எதையும் எளிதில் உயர்த்திக் கூறுவது இல்லை. தாழ்ந்தவர்களை உயர்த்துவதே இந்த யுகத்தின் தர்மம் என்பதை வற்புறுத்துவதற்காகப் 'பெரிதப்பா' என்று மீண்டும் கூறியுள்ளார்.

5. பயந்து தர்மம் இட்டுப்
பரம் பொருளை நாடிடுங்கள். அருள். ப. 24.

ஒவ்வொருவரும் வாழ்வில் பயந்து அறம் செய்யுங்கள். இறைவனை நாடி இருங்கள்.

"அறம் செய்து அருள் உடையீர் ஆகுமின்"

என்று நாலடியார் கட்டளையிடுகிறது. அவ்வாறு ஆகாதவர்களை அறக்கடவுள் தண்டிப்பான். எனவே அதற்குப் பயப்பட்டு அறம் செய்யுங்கள். அதோடு மேற்கதிக்காகப் பரம்பொருளை எண்ணி வாழுங்கள் என்று வைகுண்டர் உபதேசித்துள்ளார்.

O

17. குடி

குடி என்றது குடிமக்களை. குடிமக்கள் தன்மை உயர்வு ஆகியவை இவ்வியலில் உள்ளன. உயர்ந்த குடிகளே உயர்ந்த மக்களை உற்பத்தி செய்கின்றன, எனவே சான்றோர்கள் தோன்றுவதற்கு முதலில் குடிகள் செம்மைப் படுத்தப்பட வேண்டும். குடிச்செம்மை முறைகளைவைகுண்டர் விளக்குகிறார்

1. பயந்து இருந்து நீ
பணிவிடைகள் செய்வாயானால்
உயர்ந்த குடியாவாய்
உயிர் பிழைப்பாய். -அருள். ப. 25.

இறைவனுக்குப் பயந்து மக்களுக்குப் பணிவிடைகள் செய்து அறவழியில் இருந்து வாழுபவனே உயர்ந்தகுடியினன் ஆவான். அவனே நல்வாழ்வு வாழ்வான்.

மனிதன் இறைவனுக்குப் பயந்து வாழ வேண்டும். மக்களுக்குப் பணிவிடைகள் செய்ய வேண்டும்.

'சால்பினால் தோன்றும் குடி'

என்பது திரிகடுகம். சால்பு சான்றாண்மை. சான்றாண்மை உடையவர்கள் குடிக்குத் தொண்டு செய்வார்கள். அவர் களுக்குத் தெய்வம் ஆடையை மடித்துக்கட்டிக் கொண்டு உதவிக்கு வரும்' என்பார் திருவள்ளுவர். இத்தகைய தன்மை உடையவன் உயர்ந்த குடிப்பிறப்பு உடையவன் என்கிறார். வைகுண்டர்.

2. குடிபொருந்தி வாழ்ந்து குடியிரு.

அகிலம். ப. 10.

மனிதன் தான் பிறந்த குடியோடு பொருந்தி வாழ வேண்டும். அவர்களோடேயே குடியிருக்க வேண்டும்.

குடிபொருந்தி வாழ்வது நற்குடியின் இயல்பு.
அவர்களோடேயே குடியிருப்பது பாதுகாப்பு.

3. புத்தியினால் கெட்டவரே
பிழைக்கவழி தேடுங்கள் -அருள். ப. 38.

புத்தியினால் கெட்டவர் புத்தியில்லாமல் கெட்டவர்கள். நீங்கள் பிழைக்கும் வழியைத் தேடிக் கொள்ளுங்கள்.

'குலனும் குடிமையும் கல்லாமையின் கீழ் சாம்'

என்பது நான்மணிக்கடிகை. கல்லாமையினுல் புத்திகெடுகிறது புத்தி கெடுவதனுல் பிழைக்கவழி தெரியாமல் போகிருர்கள். எனவே குடிமக்கள் புத்தி பெறுவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று வைகுண்டர் கற்பிக்கிருர்.

4. கொத்தைக் குறைக்காதே
குறைமரக்கால் வைக்காதே. அருள். ப. 42.

குடிவளம் ஓங்கி வாழவேண்டுமானுல் உழைப்போரின் கூலியைக் குறைக்கக் கூடாது. குறைமரக்கால் வைத்து அளக்கக் கூடாது.

கொத்து என்பது அறுவடைக்குக் கொடுக்கும் கூலிநெல். மரக்கால் நெல்அளக்கும் முகத்தலளவை.

உழவர் குடிமக்கள் பெருந்தன்மை உடையவர்களாக இருக்க வேண்டும்.

'கெடுமே கொடும்பாடு உடையான் குடி'

என்பது பழமொழி நாநூறு. கொடியவர்கள் குடி அழியும். உழைப்பவர் கூலியைக் குறைக்காமல் குறைமரக்கால் வைத்து கள்ள அளவு அளந்து ஏமாற்றுமல் நேர்மையாகவும் பெருந்தன்மையாகவும் இருக்கவேண்டும்.

5. நேருக்குக் காலம் நேர்ந்திருக்கும்
அகிலம். ப. 331

நேர்மையானவர்க்கு எப்போதும் நல்ல காலமே வாழ்வில் எதிர்ப்பட்டு வரும்.

நேருக்கு என்பது நேர்மையானவர்க்கு ஆகும். ஒழுக்கம் உடையவர்களே நேர்மையாளர்கள்.

'ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று'

என்பது நல்வழி. ஒழுக்கமானவர்களுக்கு எப்பேமதும் நற்காலமே அமைந்து வாழ்வு சிறப்படையும் என்கிருர் வைகுண்டர்.

O

18. நற்பழக்கம்

பழக்கம் என்பது ஒழுக்கத்தின் நடைமுறைக் கல்வி. நற்
பழக்கமே நல்லொழுக்கமாக வளர்கிறது.

'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை'

என்பார் திருவள்ளுவர். பழக்கம் தவருத வழக்கமாகிவாழ்வில்
பிரிக்க முடியாமல் ஒன்றி விடுவதே ஒழுக்கமாகும். நற்பழக்கம்
கற்பிப்பது சிறுநாற்றை நடுவது போன்றது. சான்ருேர்கள்
இதனைமிகவும் வற்புறுத்திக் கூறுவர்.

1. வடமேற்கும் மேற்கும்
வடக்கும்கால் நீட்டாதுங்கோ. அகிலம். ப. 1:

இருக்கும் போதும் படுக்கும் போதும் வடக்கு வடமேற்கு
மேற்கு ஆகிய முன்று திசைகளிலும் கால்நீட்டக் கூடாது.

சாதாரணமாகத் தென்தமிழ் நாட்டில் வடக்கு மேற்கு
ஆகிய இருதிசைகளிலும் கால்நீட்டக் கூடாது என்பர்
வைகுண்டசாமி வடமேற்குத் திசையையும் சேர்த்து
குறிப்பிட்டுள்ளார்.

இவை புவியீர்ப்பு விதிகளை ஒட்டிய விலக்கு.

2. கடலதிலே தீர்த்தமாடிக்
கனதவங்கள் செய்திடுங்கோ. அருள் ப. 39

தவம் மேற்கொள்பவர்கள் கடல் தீர்த்தமாடிப் பின்ன
தவத்தைச் செய்யுங்கள்.

கடலாடுதல் புனித நீராடுதல் ஆகும். அது உள்ளத்தி
நல்லுணர்வையும் உடலில் வலிமையையும் சேர்க்கிறது
கன்னித்தெய்வமான பகவதி கூட இப்படித்தான்.

'நீலத் திரைக்கடல் ஓரத்திலே நித்தம் தவம் செய்கிருள்
என்கிருர் பாரதி.

3. கடலதிலே தீர்த்தம் செய்து
கர்மவினை தீர்த்திடுங்கோ. -அருள். ப. 42

கடல்களில் தீர்த்தமாடி கர்மவினைகளைத் தீர்த்து
கொள்ளுங்கள்.

காமவினை தீவினைகள். செய்வதால் ஏற்படும் பாவம். தீர்த்தமாடுவதால் அது தீரும் என்பது இந்து சமய நம்பிக்கை. ஆடித்தீர்த்தம் இதற்கான சிறப்புப் பண்டிகை.

4. நல்லவரா இருக்காவிட்டால்
பிணிகள் வரும் உங்களுக்கு.

ஒழுக்கம் உள்ளவர்களாக இருக்காவிட்டால் உங்களுக்கு நோய்கள் வரும்.

'திரு ஒக்கும் தீதில் ஒழுக்கம்'
என்பது நான்மணிக்கடிகை.

'நோயில்லாத வாழ்வே குறைவில்லாத செல்வம்'
என்பது நாட்டுப்புறப் பழமொழி, ஒழுக்கம் உடையவராக இருந்தால் பிணிகள் வராது செல்வம் வளரும் என்கிறார் வைகுண்டர்.

'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை'
என்பார் திருவள்ளுவரும்.

5. சத்தியத்தில் குடியிருந்தால்
சாமி துணை வருவேன்.

சத்தியம் தவறாமல் வாழ்பவர்களுக்கு என் அருள் துணையாக வரும்.

சாமி துணையே துணைகளில் சிறந்தது. அது கிடைக்க வேண்டுமாயின் சத்தியத்தில் நிற்க வேண்டும் மனிதர். சத்தியம் ஒழுக்கங்களில் உயர்ந்தது. அது கல்வியைவிடச் சிறந்தது.

முதுமொழிக் காஞ்சி,
''ஓதலில் சிறந்தது ஒழுக்கம் உடைமை''
என்று வலியுறுத்துகிறது. சாமி சத்தியமாக இருக்கிறார். சத்தியவான்களோடு இருக்கிறார்.

O

19. சாதி

சாதி என்பது மனிதரை மனிதர் பிரிக்கும் மடமை. நீதியுள்ள மனிதர்க்குச் சாதி இல்லை. திருவள்ளுவர்.

'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்'

என்றார்.

பிறருக்கு இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தார் என்பது ஔவை நல்வழி.

கவிமணி கூட புத்தர் வரலாற்றில்

'நன்மை செய்பவர் மேற்குலத்தார். தீமை செய்பவர் கீழ்க் குலத்தார்' என்றார். சாதிக்கு எதிரான வைகுண்டர் கருத்துக் களை இவ்வியலில் காணலாம்.

1. சாதி பதினெட்டும்
   தன்னால் கேடாகும். -அகிலம். ப. 207

மனிதர் அறியாமையால் பிரிந்து விட்ட பதினெட்டு சாதி களும் தன்னாலேயே கெட்டழியும்.

பதினெட்டு என்பது சொல்மரபு. பல என்றே பொருள். நாட்டிலுள்ள பல சாதிகளும் தன்னாலே கேடு அடைந்து அழியும். சாதியில்லா சமூகம் தோன்றும் என்பது வைகுண்டர் தீர்க்கதரிசனம்.

2. எச்சாதி யாருக்கும்
   நல்லவர் எனவே
   அச்சாதி யெல்லாம்
   மிகமகிழ வாழ்ந்திருப்பீர் -அகிலம். ப. 189.

ஒவ்வொரு சாதியில் உள்ளவர்களும் மற்ற எந்த சாதியின ரோடும் நல்லவராகப் பழகி வாழ வேண்டும். அதனால் அச் சாதியிலுள்ளோரெல்லாம் மகிழ வேண்டும்.

சாதி அழிவதற்குக் காலமாகலாம். சாதி வெறியை உடனே மட்டுப்படுத்த வேண்டும். அதற்கு உபாயம் இது.

3. தாழ்மையதாய் வாழ்ந்த
   சாதியது நன்றாகும். -அகிலம். ப. 170.

எந்த சாதி பொறுமையாய் வாழ்ந்து வருகிறதோ அந்த சாதி நல்வாழ்வு பெறும்.

'நல்லாரை உழைப்போரைப் பறையர் என்ருர்
நயவஞ்ச முடையார் மேற்சாதியென்ருர்'
என்பார் தோழர் ப. ஜீவானந்தம்.

பறையரைத் 'திருக்குலத்தார்' என்றும் 'ஹரிஜனங்கள்' என்றும் 'ஆதி திராவிடர்' என்றும் காலந்தோறும் பெரியார்கள் போற்றி வருகின்ருர்கள். தாழ்த்தப் பட்ட அவர்கள் உயர்த்தப்பட்டு வருகிருர்கள். அவர்கள் பொறுமையின் பரிசு இது. தாழ்த்தப் பட்ட மக்களுக்கெல்லாம் இந்த உயர்வு வரும். அவர்கள் உயர்வார்கள்.

4. தன்னந் தன்ஞலே
சாதிக்குச் சாதி மாளும். -அகிலம். ப. 205.

வெறி கொண்ட சாதிகள் தன்னந் தன்ஞலே ஒன்றுக் கொன்று பகைமை கொண்டு அழியும்.

சாதி அழிவதற்குரிய மார்க்கங்களைச் சாதிகளே தாமே மேற் கொள்ளும். பொறுமை கடைபிடிக்கும் சாதிகள் நன்மை அடையும். வெறிகொண்ட சாதிகள் பகைமையால் மாயும்.

5 அறிந்து பலசாதி
அன்பொன்றுக் குள்ளாஞல்
பிரிந்து மிக வாழாமல்
பெரியோராய் வாழ்ந்திருப்பீர்.

அகிலம். ப. 118.

ஒவ்வொரு சாதியும் பிறசாதிகளின் பெருமைகளைஅறிந்து அன்பால் ஒன்றுபட்டு வாழுமாஞல் பின்னர் பிரிவினை ஏற்படாமல் பெரியோராய் வாழ்வர்.

சாதிகளுக்குள் ஏற்றதாழ்வு கற்பித்துப் பிரிவினைக்குள்ளாவது மற்றவர்களின் பெருமையை அறியாமையிஞலேயே ஆகும். அதை அறிந்தால் மரியாதையும அன்பும் ஏற்பட்டு விடும். ஒற்றுமையால் பெரியோராய் வாழ்ந்திருப்பார்.

சாதிக்கு மதமே புகலிடமாக உள்ளது. எனவே தான் இராமலிங்க சுவாமிகள்

'சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்'
என்ருர்.

O

20. நீதி

நீதியின் வெளிச்சத்தில் தான் மனிதன் நிலஉலகில் வாழமுடியும். நீதி இல்லாத பகலும் இரவே. நீதியை

'நெடுந்தரும நெறி'

என்பார் கம்பர். நீதியின் சிறப்பையும் வாழ்வில் அதன் பங்கையும் வைகுண்டர் வகுத்துரைக்கிறார்.

1. எளியோர் வலியோர் என்று
எண்ணிமிகப் பாராமல்
களிகூர நன்றாய்
கண்ட வழக்கே உரை.

-அகிலம். ப. 7.

வழக்குக்குத் தீர்ப்புரைக்கும் போது எளியோர் வலியோர் என்று எண்ணிப் பாராதே. நீதி என்று கண்டதையே கூறு. அதனால் வாழ்வில் மகிழ்ச்சிமிகும்.

'சமன் செய்து சீர்தூக்கும் தராசுக் கோல் போல் அமைந்து ஒரு பக்கம் சாராமல் இருப்பதே சான்றோர்க்கு அழகு. என்பார் திருவள்ளுவர். இம்முறையில் வாழ்ந்தால் உலகில் யாவரும் மகிழ்வில் திழைப்பர் என்கிறார்வைகுண்டர்.

2. வாரம் சொல்லாதே
வழக்கோரம் போகாதே.

-அகிலம். ப. 201.

வாரம் என்பது பொய்ச் சாட்சி. எந்த வழக்கிலும் நீ பொய்ச் சாட்சி சொல்லக் கூடாது. வழக்கில் ஒரு பக்கம் சாரவும் கூடாது.

'சொற் கோட்டம் இல்லது செப்பம்'

என்பார் திருவள்ளுவர். சொல்லில் கோட்டம் இல்லாததைக் கூறுவது. உண்மையைக் கூறுவதே நடுவு நிலைமை. அதுவே நீதி. எவ்வகையிலும் நீதி தவறக் கூடாது என்கிறார் வைண்குடர்.

3. வலியோர்க்கு ஒருவழக்கு
வைத்து நீ பேசாதே
மெலியோர்க்கு ஒரு வழக்கு
வீணாய்ப் பறையாதே

-அகிலம். ப. 206.

வலியவர்க்கு ஒரு விதமாகவும் மெலிந்தவர்களுக்கு ஒரு விதமாகவும் வழக்கில் பேசக்கூடாது.

பறைதல் பேசுதல். வலியவர்க்கு ஒரு நியாயமும் மெலியவர்க்கு ஒரு நியாயமும் பேசாதேஎன்கிறார்வைகுண்டர்.

4. நிலை அழியாது இருங்கோ
நீதியாய் நின்றிடுங்கோ. அகிலம். ப. 223.

வாழ்வில் கட்டுப்பாடாய் இருங்கள். நீதியாய் நின்று வாழுங்கள்.

நிலை அழிதல் நியாயத்தில் கட்டுப்படாமல் இருத்தல். நிலை அழிபவன் வாழ்வே அழியும். நீதியில் நிற்காதவன் அநீதிக்கு ஆட்படுவான்.

பிறர்க்குக் கேடு போல் தொடங்கித் தமக்கே கேடாய் முடிபவை இவை. இதனை உணர்ந்து மனிதர் நடக்க வேண்டும்.

5. உள்ளவனுக்கு ஒன்று
இல்லாதவனுக்கு ஒன்று-என்று
ஓரங்கள் சொல்லாதே. அகிலம். ப. 20.

'ஓர நியாயம்' பேசுபவன் உள்ளவனுக்கு ஒன்றும் இல்லாதவனுக்கு ஒன்றும் பேசுவான். அவ்வாறு பேசாதிருங்கள்.

சான்றோர்க்கு அழகு எது?
"நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி"
என்பார் திருவள்ளுவர்.

நெஞ்சத்தில் கோட்டம் உள்ளவனே ஓரம் சொல்வான். இதைத் தவிர்க்க வேண்டும் என்று வைகுண்டர் அறிவுறுத்துகிறார்.

O

21. நன்றி

உலகத்தை விடவும் பெரிய பண்பும் கடலை விட அகன்ற பண்பும் உலகில் உண்டா? உண்டு என்கிருர் திருவள்ளுவர்! அது என்ன? நன்றி.

நன்றி என்பது இதயப் பூவின் மணம், தேன். அதன் சிறப்பை வைகுண்டர் வகுத்துரைத்துள்ளார்.

1. நன்றி மறவாதே
நான் பெரிது என்று எண்ணாதே.

அகிலம். ப. 206.

யாரும் நன்றி மறப்பவர்களாக இருத்தலாகாது. நான் பெரியவன் என்ற ஆணவம் கூடாது.

ஆணவம் நன்றிக்குப் பகை. நான் பெரியவன் என்று எண்ணுபவன் தான் சிறியவனுக இருந்து உதவியை ஏற்றதை மறந்து விடுகிருன். அதன் விளைவு செய்நன்றி மறத்தல். இவை மனிதரை அழிக்கும்.

2. ஞாய முறைதப்பி
நன்றி மறவாதுங்கோ -அகிலம். ப. 223.

நன்றி மறவாதீர்கள். அது நியாய முறை தப்புவதாகி விடும்.

நியாயங்களில் பெரிய நியாயம் நன்றி மறவாமையாகும். நியாயமுறை தப்புபவர்கள் கயவர்கள். நாலடியார்,

'கீழ்களை நள்ளார் அறிவுடையார்'
என்று அவர்கள் உறவையே விலக்குகிறது.

3. நல்லவர் நல்லாவார்
நானுரைக்கக் கேள். -அகிலம். ப. 239.

மக்களே! நான் சொல்வதைக் கேளுங்கள். நல்லவர்களே மேலும் மேலும் நன்மை அடைவார்கள்,

'நல்லவர் என்பவர் நன்றி மறவாதவர்,

'உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு'
என்று வள்ளுவர் சாபமிட்டுள்ளார்.

நன்றி மறவாதவர்களே நல்ல நிலையடைவார்கள் என்று வைகுண்டர் மக்களுக்கு ஆணையிட்டுள்ளார்.

4. நல்ல நினைவோர்க்கு
நாள் எத்தனை ஆனாலும்
பொல்லாது வாராமல்
புவிமீது வாழ்ந்திருப்பார்.

அகிலம். ப. 205.

பிறர் செய்த நல்ல உதவியை மறவாத நினைவு உடையவர்கள் எவ்வளவு காலம் வாழ்கிறார்களோ அவ்வளவு காலமும் தீங்கு ஏதும் வராமல் பூமியில் வாழ்ந்திருப்பார்கள்.

'ஒரு நன்றி, செய்தவரை ஏழு பிறவியிலும் நினைக்க வேண்டும். என்பது வள்ளுவர் சிந்தாந்தம்.

5. பசுவை அடைத்துப்
பட்டினிகள் போடாதே. -அகிலம். ப. 206.

பசுவை அடைத்து வைத்துப் பட்டினி போடக் கூடாது.

பசு கோமாதா. அது தாயினைப் போல மக்களையும் காக்கிறது. அதை சுதந்திரமாக விட்டால் யாரும் காக்க வேண்டாம். தன் உதவிக்காகவே மனிதன் அதைவளர்க்கிறான்.

வளர்க்கும் பொறுப்பு அடைக்கலக் கடமை. கடமை மறந்து அதைப் பட்டினி போடுபவர்கள் நன்றியில்லாத கொடியவர்கள். அவர்கள் ஒரு நாளும் விளங்கமாட்டார்கள்.

O

22. பெரியோர்

வயதில் மூத்த சிறியாரும் உண்டு. வயதில் சிறிய பெரியாரும் உண்டு. அப்படியானல் பெரியார் யார்?

'செயற்கு அரிய செய்வார் பெரியார்'

என்ருர் திருவள்ளுவர். அவர் பெருமையும் தன்மையும் என்ன என்பதை வைகுண்டர் விளக்குகிருர்.

1. பெரியோர்க்கு வாழ்வு
பெருகச் சிறந்தாலும்
மரியாதியே இருக்கும். -அகிலம். ப. 205.

வாழ்வு நலமெல்லாம் பெருகிச் சிறந்தாலும் பெரியோர்கள் மரியாதை உடையவர்களாகவே இருப்பார்கள்.

'பணியுமாம் என்றும் பெருமை'

என்பது திருக்குறள். பெரியோர்களின் வாழ்வு பெருகப் பெருக அவர்களின் பணிவு அதிகமாகிக் கொண்டே வரும். பெரியோர்க்கு அடையாளம் மரியாதை உடைமை.

2. நல்லோர்க்கு வாழ்வு
நாளும் குறையாமல்
வல்லோர்க்கு நல்லோராய்
வாழ்ந்திருப்பார். -அகிலம். ப. 205.

பெரியவர்களாகிய நல்லார்க்கு நல்வாழ்வில் ஒருநாளும் குறைவு இருக்காது. அவர்கள் வல்லோர்க்கு வல்லோராய் வாழ்ந்திருப்பார்கள்.

நல்லவர்கள் மாசற்றவர்கள்.

''மாசற்ருர் செய்ய வேண்டும் மாதவம் ஒன்றும்இல்லை.'' என்று பிரபோதய சந்திரோதயம் கூறுகின்றது.

நல்லார் மாதவம் செய்வார்க்கு ஒப்பார்.

3. விட்டுப் பிரியாதே
வெட்கமதைக் காணுதே. -அகிலம். ப. 205.

பெரியவர்களை விட்டுப் பிரியக் கூடாது. அவர்களுக்கு வணக்கம் தெரிவிக்க வெட்கப்படக் கூடாது.

பெரியாரை விட்டுப் பிரிபவன் வாழத் தெரியாதவன். பெரியாரை வணங்க வெட்கப் படுபவன் விவேகம் அற்றவன். இந்த வெட்கம் பொய் நாணம். போலித்தனம்.

4. சட்டம் மறவாதே
சரித்திரத்துக்கு உற்றவனே.

அகிலம். ப. 209

சரித்திரத்துக்கு உறவினனே! எப்போதும் நீ சட்டங்களை மறந்துவிடாதே.

பெரியோர் சொற்கள் சட்டங்கள். அவற்றை ஏற்றுக் கடை பிடிப்பவன் சரித்திர புருஷன் ஆவான். வரலாற்றில் இடம் பெற விரும்பும் இலட்சியம் உடையவர்களுக்கு வைகுண்டரின் ஆணை அது.

5. நல்லோரே ஆகவென்றால்
ஞாயமதிலே நில்லும். -அகிலம். ப. 224.

நல்லவர் ஆக வேண்டும் என்று விரும்புகிறவர்கள் எப்போதும நியாயத்தில் நிற்க வேண்டும்

நல்லோர்க்கு அடையாளம் நியாயத்தில் நிற்றல்.

பண்புடையவர்கள் நல்லவர்கள். நியாயத்திலே நிற்பார்கள். அவர்கள் வாழ்வதனால் தான் உலகம் அழியாமல் இருக்கிறது என்பது வள்ளுவர் கோட்பாடு.

o

23. ஆட்சி

ஆட்சியின் மாட்சியிலேயே ஒரு தேச மக்களின் நல் வாழ்வு அடங்கியிருக்கிறது. ஒரு தேசத்தின் புகழ் மேலோங்குகிறது. அதனால்தான் 'இறைவன்' என்ற பெயரைத் தமிழர்கள் கடவுளுக்கும் மன்னனுக்கும் பொதுவாக்கினர். நம்மாழ்வார்,

'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேன்,

என்று கூறினர். வைகுண்டரின் நல்லாட்சிச் சிந்தனைகளை இவ்வதிகாரத்தில் காணலாம்.

1. நீண்ட புகழ்தர்மம்
   நிறுத்தி அரசாள்க. -அகிலம். ப. 3.

அரசை ஆள்பவர்கள் தர்மத்தை நிலைநிறுத்தி ஆள்வார்களாக. அதனால் அழியாத புகழை எய்தலாம்.

அறத்தின் ஆட்சியே புகழினைத் தரும் ஆற்றல் உடையது. அதுவே செங்கோல். மற ஆட்சியில் மக்கள் கண்ணீரே பெருகும். பழந்தமிழ் அறிஞர்களும்

'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'

என்று வற்புறுத்தியுள்ளார்கள்.

2. தராசு நிறையிலும் துல்லியமாய்
   செங்கோல் நடத்து. -அகிலம். ப. 212.

நாட்டை ஆள்பவர்கள் தராசு முனையைவிட நுட்பமாக நீதியை நிலைநிறுத்திச் செங்கோல் ஆட்சி நடத்தவேண்டும்.

தராசுக் கோல் முனை நீதியின் ஒப்பற்ற சின்னம். தராசு முனை பொன்னையும் மண்ணையும் பேதமின்றி நிறுத்துக் காட்டும். ஆள்வோர்கள் ஏழையென்றும் செல்வர் என்றும் பாராமல் தராசு நிறையை விடத் துல்லியமாகச் செங்கோல் செலுத்த ஆணையிடுகிறார் வைகுண்டர்.

3. முறை தப்பி ஆண்ட
   முகடன் வெறுநீசன்
   குறை நோவு கொண்டு
   கூடு இழப்பான். -அகிலம். ப. 204.

நீதிதவறி நாட்டை ஆள்கின்ற மூதேவி பிடித்த நீசன் பெருநோய் பிடித்து உயிரிழப்பான்.

'கருணையில்லா ஆட்சி கடுகி ஒழிக
அருள் நயந்த சன்மார்க்கர் ஆள்க'

என்பார் அருட் பெருஞ்சோதி வள்ளலார்.

'கல்லாத அரசனிலும் காலன் மிக நல்லன்'

என்பது திருமந்திரம். அவர்கள் முகடர்களாக இருப்பர். கருணையில்லாத ஆட்சி புரிவார்கள் தொழு நோய் போலப் பெருநோயால் தண்டிக்கப்படுவார்கள்.

4. நாட்டு முடியிறக்கி நாராயணர்
பதி ஆள வருகிறார்
சமஸ்தானத்தை சுத்தி பண்ணுங்கோ.

அருள். ப. 8.

நாராயணர் வைகுண்டசாமியாக அவதரித்தபின் நாட்டு மன்னர்களின் மணிமுடிகளையெல்லாம் இறக்கி உலகை ஆளவருகிறார். எனவே மன்னர்கள் தங்கள் சமஸ்தானங்களை அவர் வருகைக்காக ஆயத்தப்படுத்தி வையுங்கள்.

இது வைகுண்டர் தீர்க்கதரிசனம். நாராயணர் சார்பில் அவர் அடியார்கள் ஆளவருவார்கள் என்பது கருத்து, அருள் நூலில் வரும்.

'தொழுது பணிந்து நடந்தவர்க்கு
நாடு நமக்கென்று எடுத்துக் கொடுத்து
ஆளவருகிறார் அய்யா'

என்ற திருமொழியால் இதனை உணரலாம்.

5. வாரி மூன்று கோதி
வளைந்திருக்கும் ஒரு தீவை
சாதி ஒருநிரப்பாய்த் தான் ஆள்வாய்.

அகிலம். ப. 204.

மூன்று புறமும் கடலால் சூழப்பட்ட இந்தியத் தீபகற்பத்தை ஆளவருவோர் சாதிகளை ஒரு நிரப்பாய்க் கருதி ஆட்சி புரிய வேண்டும்,

வாரி கடல். தீபகற்பத்தைத் 'தீவு' என்று குறிக்கிறது அகிலம். ஆட்சியில் சாதிச் சாய்வுகள் கூடாது என்கிறார். சாதிகளிடையே சமத்துவம் நிலவ வேண்டும் என்பது வைகுண்டர் அவா.

O

24. அன்பு

'உயிரினமே அன்பின் வழியில் தான் நிலைபெற்றுள்ளது' என்பது திருவள்ளுவம். மண்ணில் மிளிரும் இறைப்பண்பு அன்பே. வாழ்வின் அனைத்துப் பெருமைகளும் அன்பில் தான் நிலை கொண்டுள்ளன. மனிதர் பல்வகை அணிகலன்களை அணிகின்றனர். பூமிக்கு அணிகலன் உண்டா? ஆம்!

'உலகிற்கு அணிகலன் அன்புடை மக்கள்'

என்கிறது. நான்மணிக் கடிகை அந்த அன்பின் திறப்பாட்டை வைகுண்டர் விளக்கக் காணலாம்.

1. நீதான் அன்பாய் இரு மகனே.

அகிலம். ப 2.9.

மகனே! என்றும் நீ அன்பாக இருப்பாயாக.

'அன்பிற் சிறந்த தவம் இல்லை'

என்பது பாரதி வாக்கு. அருளுக்குத் தாய் அன்பு.

'அருள் என்னும் அன்பு ஈன் குழவி'

என்பார் வள்ளுவர். எனவே மக்கள் எப்போதும் அன்பு நிறைந்தவர்களாக இருக்க வேண்டும்.

2. சாகாது இருக்கும்
தர்ம அன்புள்ளோர்.

-அகிலம். ப. 3

தர்மமும் அன்பும் உள்ளவர்கள் அழியமாட்டார்கள்.

தர்மம் அன்பினால் அருளினால் தோன்றுவது அன்பில்லா இடத்தில் தர்மம் இல்லை. எனவே மண்ணில் விண்ணவர் போல சாகாது வாழ விரும்புவோர் தர்மமிட்டு அன்போடு வாழ்க என்கிறார் வைகுண்டர்.

3. அன்பு பார்த்து எடுத்து
ஆள் அடிமை கொள்.

-அகிலம். ப. 3

அன்பின் வலிமையை ஆராய்ந்து பார்த்து அதை வாழ்வில் வெற்றிக் கருவியாக எடுத்துக் கொள்க. எல்லா மனிதரையும் அதன் மூலம் அடிமை கொள்க.

ஆட்களை அடிமை கொள்ள அற்புதமான வழி கூறுகிறார் அய்யா.

'அன்பு எனப்படுவது தன்கிளை செறாமை'

என்பது கலித்தொகைப் பாடல். தன் உறவானவர்களை வெறுக்காமல் இருப்பதே அன்பாகும். உலகின் மக்களையெல்லாம் வெறுக்காமையாக அது வளர்தல் வேண்டும். அப்போது உலகையே அடிமை கொள்ளலாம்.

4. அன்புக்கு நோக்கம்
அடங்கி மிக இருக்கும். -அகிலம். ப. 332.

அன்பு என்ற பண்பின் நோக்கம் எப்போதும் அடக்கமுடன் இருப்பதாகவே இருக்கும்.

அன்பின் இயல்பு அடக்கம் உடைமை. அடங்காமை விரோதத்தின் இயல்பு. அடக்கம் உடையவரிடத்தில்அன்பைக் காணலாம். மக்கள் எப்போதும் அன்பு உள்ளத்தோடு அடங்கி நடக்க வேண்டும்.

5. வம்புக் கூட்டம் வேண்டாம்
அன்புக் கூட்டம் போதும். (வாய் மொழி)

வம்பு செய்யும் கூட்டத்தை யாரும் சேர்க்கவும்வேண்டாம் நம்பவும் வேண்டாம். அன்புக் கூட்டமே வாழ்வுக்கு வேண்டுவதாகும்.

வம்புக் கூட்டம் முதலில் வலிமையானது போலத் தோற்றமளிக்கும். ஆனால் அது இடையில் அழியும். அன்புக் கூட்டம் நிலையான வலிமை உடையது. என்றும் மாறாதது. அழியாதது.

கிறிஸ்து பெருமானும்,

"நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பு கூர
வேண்டும் என்பதே என் கட்டளை"

என்று மக்களினத்துக்கு ஆணையிட்டார்.

O

25. ஒற்றுமை

தனிமனித வாழ்விலும் பொது வாழ்விலும் ஒற்றுமையே நலம் அளிப்பாதாகும். பாரதியும்,

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு''

என்று எச்சரித்துள்ளார்.

1. மனுவோர்கள் எல்லோரும்
ஓ நவிந்துக் கொடிபோல் வாழ்ந்திருப்பீர்.

அகிலம். ப. 10.

மக்கள் எல்லோரும் ஒரு தந்தையின் வழியில் தோன்றிய வர்கள் போல ஒற்றுமையாக வாழுங்கள்.

ஒரு விதையில் தோன்றிய கொடிகள் பலவாகி செழித்து வளர்ந்து பயனளிப்பது போல மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும். மக்கள் யாவரும் ஒரு தாய்க்கு ஒரு தந்தையினுல் தோன்றியவர்களே. காலதேசச் சூழ்நிலைகளால் ஏற்பட்ட இன குலச்சாதிப் பாகுபாடுகளை மறக்க வேண்டும் என்கிருர் வைகுண்டர்.

2. பொய்யரோடு அன்பு
பொருந்தி இருக்காதே
மெய்யரோடு அன்பு
மேவியிரு.

-அகிலம். ப. 198.

பொய்யரோடு அன்பு பொருந்தி இருக்க வேண்டாம். மெய்யரோடு அன்பு மேவி ஒற்றுமையாய் இருங்கள்.

ஒற்றுமையாய் இருக்க வேண்டும் என்ற அறிவுரைக்கு ஒரு விதிவிலக்கும் கூறுகின்ருர். பொய்யரோடு பொருந்த வேண்டாம்.

இறைவன் அதிகாரத்தில் (6)

'இறைவன் மெய்யனுக்கு மெய்யாய் மேவி இருப்பான்' என்ருர் வைகுண்டர். அந்த மெய்யர்களோடேயே ஒற்றுமை யாய் இருக்க வேண்டும் என்று இங்கு தெளிவுபடுத்துகிருர்.

3. பொல்லாதாரோடும்
போதப் பகையாதே. -அகிலம். ப. 201.

பொல்லாதவர்களோடு கூட வெளிப்படையாகப் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

பொய்யரோடு பொருந்தி இருக்க வேண்டாம்என்றவுடன் பகைத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணி விடலாகாது. பொல்லாதவரோடு கூட பகைக்கக் கூடாது' ஒதுக்கமாக நடந்து கொண்டால் போதும்.

4 ஒன்று போல் எல்லோரும்
ஒரு புத்தியாய் இருங்கள்.
அகிலம். ப. 207.

எல்லா மக்களும் ஒரே குலத்தார் போல ஒரே புத்தி உடையவர்களாக வாழுங்கள்.

'ஒரு விந்துக் கொடி போல,

என்று முன்னமும் கூறினர். அவ்வாறு ஒற்றுமையாய் இருங்கள். புத்தியிலும் ஒருமைப்பாடு தோன்ற வாழ்க.

நாட்டில் மொழியால் மதத்தால் இனத்தால் ஒன்று பட்டவர்கள் கூட மனவேறுபாட்டால் புத்தி பலவாகிப் பகை கொண்டு அழிகிறார்கள். இதை விலக்க வேண்டும் என்று ஆணையிடுகிறார்.

5. புத்திரரோடு பேசியிரு மகனே.
அகிலம். ப. 207.

ஒவ்வொருவரும் தத்தம் மக்களோடு மனம் பொருந்தி உறவாடிப் பேசிக் கலந்து வாழ வேண்டும்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்!'

என்றார் பூங்குன்றனார். இந்த உயர்ந்த கொள்கையை யாவர்க்கும் அறிவுறுத்துவோர் தம் சொந்த வாழ்வில் தம் மக்களோடேயே பகை கொண்டு பேச்சுவார்த்தைகூட இல்லாமல் இருக்கக் கூடும்.

முதலில் ஒற்றுமை தம் இல்லத்தில் நிலவ வேண்டும் என்பது வைகுண்டர் ஆணை.

O

26. பகைமை

பகைமை மானிடத்தின் நலமெலாம் அழிக்கும் நோய். பகைமை மிகமிக உள்ளச்சம் மிகுந்து மனிதன் அஞ்சிப் பணிவான். அல்லது ஆவேசத்தால் மோதி மடிவான். பகைமையை வேருடன் பிடுங்குவோர் பாரினில் உயர்ந்தவர். பகைமையின் கேடுகள் பற்றி வைகுண்டர் இவ்வதிகாரத்தில் விளக்குகிறார்.

1. தாக்கிரவான் ஆகிடினும்
சற்றும் பகையாதே. -அகிலம். ப. 201.

நீ பகையைத் தாக்கி அழிப்பதில் வல்லமை பெற்றவனாக இருந்தாலும் மற்றவர்களைச் சற்றும் பகைக்காதே.

வெற்றி தனதே ஆயினும் பகை தீமையானது. அது தலைமுறையாக வளர்ந்து இறுதியில் கேடு செய்து விடும் எனவே எவ்வளவு வலிமை பெற்றவனாயினும் பகையை வளர்க்காதே என்று அறிவுறுத்துகிறார்.

2. ஒருவரோடும் பிணங்கி உரையாதே.
அகிலம். ப. 201.

யாரோடும் பிணங்கக் கூடாது. பிணங்கிப் பேசவும் கூடாது.

பிணக்கம் இணக்கத்துக்கு எதிர் நிலை. இணக்கம் அன்பு. அதன் பேச்சு இன்சொல், பிணக்கம் பகை. அதன் பேச்சு வன்சொல். புன்சொல். இப்பேச்சு பகைக்கு விறகாகிவிடும். எனவே யாரோடும் பிணக்கப் பேச்சு வேண்டாம்.

3. ஓர்ந்து இருக்க வென்றால்
ஒருவர் பகை ஆகாதே. -அகிலம். ப. 206.

ஒற்றுமையோடு வாழவேண்டுமென்றால் ஒருவரோடும் பகை இருத்தல் ஆகாது.

ஓர்மை ஒற்றுமை. ஓர்ந்து இருத்தல் ஒற்றுமையாக இருத்தல். பகை என்பது ஒற்றுமையை அறுக்கும் வாள். அன்பு மலையையும் பகைச்சிற்றுளி பிளந்துவிடும். எனவே பகை ஆகவே ஆகாது என்று வற்புறுத்துகிறார் வைகுண்டர்.

பகை எள்ளின் பாதி அளவினதாக இருந்தாலும் உட் பகையால் குடி அழியும் என்பார் திருவள்ளுவர்.

''எட்பக அன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு''

என்பது திருக்குறள்.

4. போர்க்கு நினைத்தோரைப்
பலிகொடுக்கும் தர்மமது. அகிலம். ப. 207.

தர்மம் பகைகொண்டு போருக்கு நிற்பவர்களைப் பலி கொடுத்துவிடும்.

மனிதன் தான் பலிகொடுப்பான் என்பதல்ல. தருமமும் பலிகொடுக்குமாம்! பகைகொண்ட நினைவு உடையவனைத் தர்மம் பலிகொடுக்கும்.

பகை என்பது பண்பற்ற செயல்.

''பகை என்னும் பண்பு இல்லதனை''

என்பது திருக்குறள்.

எனவே, தான் பலியாக விரும்புவோரே பகைமையை நெஞ்சில் வளர்க்கலாம்.

5. சண்டை போடாதே மகனே. அருள். ப. 30.

மகனே! யாரோடும் எப்போதும் சண்டை போட்டுக் கொண்டிராதே.

சண்டை என்பது பகைமையின் உடல் மோதல்.

''பகையையும் நட்பாகக் கொண்டு ஒழுகும்
பண்புடையவரின் கீழ் உலகம் தங்கும்''

என்பது குறள் நெறி. இவ்வுண்மை உணராத மக்கள் எப்போதும் சண்டையில் காலம் கழிக்கிறார்கள். அதன் தீமையை உணர்த்தி விலக்குகிறார் வைகுண்டசாமி.

O

27. தீநெறி

தீநெறி தீய வழி ஆகும். இது தீக்கு நிகராகும். தீ எதையும் எரிக்கும். தீவினையும் அண்டுவோரை அழித்துவிடும்.

'தீயவை தீயபயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும்'

என்பது திருக்குறள். மக்களைத் தீநெறியிலிருந்து விலக்கி நன்னெறியில் செலுத்தும் அற உள்ளம் கொண்ட அய்யா தீநெறியின் தீங்குகளை விவரிக்கிறார்.

1. ஒருவருக்கு ஒருவர் பொல்லாங்கு
உலகில் மிகவே செய்யாமல்
குருவைக் கண்டு வாழ்ந்திருப்பீர்.

அகிலம். ப. 189.

உலகில் யாரும் யாருக்கும் பொல்லாங்கு செய்யாதீர்கள். குருவின் வாழ்வை அறிந்து அவர் வாழ்ந்தது போல வாழ்வீர்களாக.

குரு வைகுண்டசாமி தமக்குப் பொல்லாங்கு செய்தாரைக் கூட மன்னித்துப் பொறுத்து அருள் பாலித்தார் அய்யா. யாரோடும் பொல்லாங்கு பேசியதுமில்லை.

'பொல்லாங்கு செய்வாரோடு இணங்க வேண்டாம்'

என்பது கொன்றை வேந்தன்.

2. பாவத்தைக் காணாதே
பராக்கிரமம் காட்டாதே.

அகிலம். ப. 201.

பாவச் செயல்களைச் செய்யாதே. அதைப் பராக்கிரமம் என்று எண்ணி நடக்காதே.

பாவம் தீவினை. அதன் பயனை அது கொடுக்காமல் ஒழியாது.

'நிழல் போலத் தொடர்ந்து வந்து அழிக்கும்'

என்பது திருவள்ளுவம். பாவம் செய்வது பராக்கிரமம் என்று நினைப்பது அறியாமை. பராக்கிரமம் வல்லமை. பாவச் செயலில் அதைக் காட்டலாகாது என்று விளக்குகிறார்.

3. தொட்டுப் பிடியாதே
தோர்வை வைத்துக் காணாதே.

அகிலம். ப. 206.

விலைமகளிரைத் தொட்டு உறவு கொள்ளாதே. சூதாட்டத்தில் பந்தயம் வைத்துப் பலனை எதிர்பார்த்து இராதே.

மனிதன் கெட்டழியும் இருவழிகள் பரத்தமையும் சூதும் ஆகும். பரத்தையர் பணத்துக்காக உடல் விற்பவர்கள். காதலிஉறவால் உயிர் வளரும். இவர்கள் உறவால் உயிர் அழியும். அவர்கள் உறவு,

'இருட்டு அறையில் அன்னியப் பிணத்தைத்
தழுவுவது போன்றது'

என்பது தமிழ் மறை. சூது விரும்பிகள் ஒன்று எய்தி நூறு இழப்பவர்கள். அவர்கள் அடையும் வெற்றி மீன் தூண்டிலை விழுங்குவது போன்றது.

4. கொலைகளவு உங்களுக்குக்
கொல்லும் ஆயுதமாய் இருக்குதடா.

அருள். ப. 44.

கொலைச் செயல்களும் களவும் உங்களைக் கொல்கின்ற வேல்களாக உள்ளன.

கொலை நரஉயிர்க் கொலையும் பிற உயிர்க் கொலையுமாம். இறைச்சிக்காக வேட்டையாடுவதும் இறைவனுக்காக உயிர்ப் பலியிடுவதும் கொலைச் செயல்களே. கொல்லாதவனை

'உலகின் எல்லா உயிரும் கைகூப்பித்தொழும்'

என்பார் திருவள்ளுவர். களவு என்பது இருண்ட அறிவு.

'களவென்னும் காரறிவாண்மை'

என்பது குறள்.

இரண்டையும் விலக்க ஆணையிடுகிறார் வைகுண்டசாமி.

5. கொல்லென்ற பேச்சு
கூற நினையாதே. -அகிலம். ப. 208.

கொலை என்ற பேச்சை நாக்கால் கூற நினைக்காதே.

கொலையை நினைக்கவும் கூடாதாம்! செய்யலாமோ? உயிர்க் கொலையைத் தூண்டவும் கூடாது. கொல்லலும் கொல்வித்தலும் பாவச் செயலே என்பது அய்யா நெறி.

O

28. கோபம்

கோபம் அறிவு என்னும் தீபத்தை அணைக்கும் சூறைக் காற்று. இடம் கொடுத்தவரையே எரிக்கும்தீ.

'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி'

என்பது தமிழ் மறை. அன்பு என்னும் அமுதத்தைப் பாழாக்கும் நஞ்சு. அது எங்கு இருக்கின்றதோ அங்கு அழிவைத் தவிர வேறு எதுவும் இருக்காது. கோபம் பற்றிய வைகுண்டர் சிந்தனைகளை இங்கே காணலாம்.

1. கோபமாய் விள்ளாதே
குவியச் சிரிக்காதே — அகிலம். ப. 201.

கோபமாய் எப்போதுமே பேசாதே. கோபம் குவியுமாறு எப்போதுமே சிரிக்கவும் செய்யாதே.

விள்ளுதல் பேசுதல், குவியச் சிரித்தல் மனதில் கோபத்தைக் குவித்துச் சிரித்தல்,

'நகையும் உவகையும் கொல்லும் சினம்'

என்பார் திருவள்ளுவர். எனவே கோபத்தையும் கோபத்தில் சிரிக்கும் கபடச் சிரிப்பையும் கைவிடுக என்கிறார் அய்யா.

2. வல்லாண்மை பேசாதே
மாதிரி போடாதே. — அகிலம். ப. 201.

யாரோடும் வீண் சபதம் செய்யாதே. பந்தயங்கள் போட வேண்டாம்.

வல்லாண்மை வஞ்சினம். சபதம். வீரத்தால் வஞ்சினம் செய்தல் வேறு கோபத்தால் வஞ்சினம் பேசுதல் வேறு. சினத்தால் பேசும வல்லாண்மை தீதாகும். அது போல் கோபத்தில் பந்தயம் கட்டுதலும் தீமையே ஆகும். அது தருமன் சூதாடியது போல் ஆகும்.

'சுருக்குக செல்லா விடத்துச்சினம்'

என்பது நான்மணிக்கடிகை.

3. கோபத்தைக் காட்டாதே
கோளோடு இணங்காதே. அகிலம். ப. 206

யாரிடமும் கோபத்தைக் காட்ட வேண்டாம். கோளோடு இணங்கவும் வேண்டாம்.

கோபமும் கோளும் கூடிப் பிறந்தவை. கோபத்தால் கோள் சொல்லும் புத்திவரும். கோளினால் பகைமை வரும்.

'தன்னைத்தான் காக்கின் சினம் காக்க'

என்பது திருக்குறள். கோளைப் 'புறங்கூறல்' என்பார் திருவள்ளுவர். அது அறத்தை அழித்துப் பாவத்தையும் செய் வதைவிடத் தீமையானது என்பது அவர் கொள்கை.

4. கோபத்தைக் காட்டாதேயுங்கோ
குணமுனிவரே கேளும். -அகிலம். ப. 215.

குணங்களால் மிக்க முனிவர்களே நீங்கள் எந்தச் சூழ் நிலையிலும் கோபத்தைக் காட்டாதீர்கள்.

முனிவர்கள்.

'குணம் என்னும் குன்றேறி நின்றவர்கள்'.

பொறுமை அவர்களின் அணிகலன். அன்பு அவர்களின் அருங்கொள்கை. அவர்களிடம் சினம் தோன்றுவதென்பது' மேகத்தில் தீப்பிடிப்பது போன்றது. அவர்கள் கோபத்தை ஒரு கணம் கூட மற்றவர்களால் தாங்கமுடியாது. கோபம் அவர்கள் தவத்தையும் அழித்துவிடும். எனவே முனிவர்கள் கோபம் விடவேண்டும் என்கிறார் அய்யா.

5. சினம் மறந்து
சடம் முழிக்கும் பேர்மனுக்கள்
நினைவுக்குள்ளே நாம் நிற்போம்.

கோபத்தை மறந்து ஜீவவிழிப்பு அடையும் மக்கள் நினைவில் நான் நீங்காமல் நிற்பேன்.

கோபத்தை யார் விடுகிறார்களோ அவர்கள் இறை ஒளி பெற்றுத் திகழ்வர். சடம் முழித்தல் உயிர் தாங்கி நிற்கும் உடல் இறைஒளியால் விழிப்படைதல் அவர்கள் அழியும்பொருள்களை நாடுவதில்லை. இறை நாட்டம் உடையவர்களாக இருப்பர். அவர்கள் நினைவுக்குள்ளே இறைவன் கோவில் கொள்வான்.

'உள்ளிய எல்லாம் உடன் எய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்'

என்பது தமிழ் மறை. மனிதன் இறைஉறையும் கோவிலாக இருப்பதற்கு உரிய வழியை இத்திருமொழியில் வைகுண்டர் விளக்கியுள்ளார்.

O

29. கயமை

'கயமை என்பது கீழோரது தன்மை'

என்பார் பரிமேலழகர். சேறும் செழியும் மிக்க ஆழநீர்ப் பரப்பு கயம். அதனை ஒத்தவர் கயவர். நயமுடையார் சேரார் கயவரை, அவர் உறவை விலக்கக் கூறுகிறார் வைகுண்டர்.

1. சற்றுலே வாழ்வு
சகடருக்கே வருகில்
கற்றுரை ஆகிடினும்
கண்டறிவேன் போநீ என்பான்.

அகிலம். ப. 205.

கயவருக்குச் சிறிது பொருள் சேர்ந்தால் போதும் எவ்வளவு கற்ற அறிஞரையும்

'உன்னை எனக்குத் தெரியும் போ'

என்று இழித்துப் பேசுவான்.

'நோதக்கச் செய்யும் சிறு பட்டி'

என்பது கலித்தொகை. பட்டிமாடு. கயவரை மாட்டுக்கு உவமை கூறி அவர்கள் மற்றவர் மனம் நோகும்படியே எதனையும் செய்வர் என்கிறது கலித்தொகை.

கயவருக்கு வாழ்வு வராது. வந்தால் அதோடு ஆணவமும் வந்துவிடும் என்று கூறி விளக்குகிறது இத்திருமொழி.

2. முள்முருக்கம் பூவு
மினுக்கு மூன்று நாளைக்குக்
கள்ளருக்கு வாழ்வு
காணும் அதுபோல் மினுக்கு. அகிலம். ப. 205.

முள் முருக்கம் பூ மூன்று நாள்வரைக்கும் புதுமலர் போல மினுக்கும். கள்ளர்கள் வாழ்வும் அதுபோலத்தான்.

கள்ளரும் கயவரே. கொள்ளாதீர் அவர் உறவு. களவுப் பணத்தால் அவர் செய்யும் டாம்பீகம் மூன்று நாளைக்குத்தான் நிற்கும் என்கிறார் அய்யா.

3. தெண்டம் இறை பொய்களவு
செய்யும் வண்டக் குலங்களெல்லாம்
கொண்ட கலி கூட மாளும். அகிலம். ப. 308.

பிறரிடம் தண்டம் வாங்குபவர்களும் அநியாய வரி பிரிப்பவர்களும் பொய்யும் களவும் தொழிலாக உடையவர்களும் கயவர்கள் ஆவர். அவர்களைக் கலிபிடித்துக்கொண்டிருக்கும். அவர்கள் கலியோடுமாள்வர்

கயவர்கள் கூட்டத்தை வண்டக்குலம் என்கிறார். வண்டக்குலம் வம்பு செய்யும் குலம். இவர்கள் பணம் சேர்ப்பதற்குக் கையாளும் நான்கு முறைகள் உள்ளன. அவை தண்டம், வரி பொய், களவு என்பவை.

'அல்ல புரிந்தார்க்கு அறம் தோன்றா'
என்பது நான்மணிக்கடிகை.

4. அரகரா என்ற சொல்லைக்
கரையேறாப் பாவி நீசன்
அறியவே மாட்டான். -அகிலம், ப. 16.

பிறவிக் கடலிலிருந்து கரையேறக் கூடாத நீசப்பாவிகள் 'அரகரா' என்ற மந்திரத்தை அறிய மாட்டார்கள்.

'பிறவிக்கடலைத்தாண்ட உதவும் கலம் இறைவன் பாதங்கள்'

என்பார் திருவள்ளுவர். அந்த கலத்தின் துடுப்புகள் மந்திரங்கள். 'அரகர' மந்திரத்தை அறிந்தவர்க்கு அழிவு இல்லை.

'மந்திரத்தை உண்டவர்க்கு மரணம் ஏதும் இல்லையே'

என்பது சிவவாக்கியர் திருமொழி. கயவர்கள் கரையேறவே மாட்டார்கள்.

5. பித்தலாட்டப் பயல்களெல்லாம்
பெருமை குலைந்து போகும். அருள். ப. 22.

பித்தலாட்டங்கள் செய்கின்ற பயல்களெல்லாம் பெருமை குலைந்து போவார்கள்.

பொய்யின் செயல் வடிவம் பித்தலாட்டம். கயவனுடைய அழிவின் முன்னடையாளம் அது. எனவே அவர்களை விலக்கி வாழ வேண்டும்.

''கீழ்களை நள்ளார் அறிவுடையார்''

என்கிறது நாலடியார்.

வைகுண்டரும் கயமையை விலக்கி கயவர்களை ஒதுக்கி வாழ அறிவுறுத்துகிறார்.

O

30. ஏழ்மை

ஏழ்மை என்பது இல்லாமை. வறுமை. வறுமையை விடத் துன்பமானது எது? என்ற வினாவுக்கு,

'வறுமையே வறுமையை விடத் துன்பமானது'

என்று வள்ளுவர் விடை வழங்கினார். வறுமையை ஈகையால் வெல்லலாம். வைகுண்டர் ஏழ்மை பற்றியும் ஈகைபற்றியும் இவ்வியலில் விளக்குகிறார்.

1. ஏழையாய் இருநீ
   என்னுடைய கண்மணியே — அகிலம். ப. -01.

என் கண்ணின் மணி போன்ற மக்களே நீங்கள் ஏழைகளாக இருங்கள்.

வறுமையில் செம்மை வாழ்வின் இலக்கு. செல்வனை விரும்புவோன் பலர் வறுமைக்குக் காரணமாகிவிடுவான். எனவே மகனே நீ ஏழையாய் இருந்தால் போதும் என்கிறார் வைகுண்டர்.

''எளிய மனத்தோர் பேறு பெற்றோர்!
ஏனெனில் விண்ணரசு அவர்களதே!!'

என்றார் கிறிஸ்து பெருமானும்.

2. எளியோரைக் கண்டு
   ஈந்து இரங்கி இரு. -அகிலம். ப. 206.

மகனே! உன்னைவிட எளியோரைக் காணும் போது அவர்களுக்காக இரக்கம் கொள். ஈந்து உதவுக.

மிகவறுமை அழிவே செய்யும்.

'அன்ன விசாரம் அதுவே விசாரம்'

என்பார் பட்டினத்தார்.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'

என்பது மணிமேகலை. வைகுண்டரும் எளியோர்க்கு இரங்கி அவர்களை உபசரிக்க ஆணையிடுகிறார்.

3. தர்மம் தந்தவனும் நல்லவன் தான்
   தராதவனும் நல்லவன் தான்
   நல்லவனும் பொல்லாதவனும்
   எல்லோரும் நல்லவன் தான்
   என்று சொல்லிவிடு. -அருள். ப. 29.

தர்மம் தந்தவன் தராதவன் நல்லவன் பொல்லாதவன் ஆகிய எல்லோரும் நல்லவர்களே என்று சொல்லுங்கள்.

இல்லாமையில் இருக்கும் ஒருவன் வள்ளலையும் கஞ்சனையும் நல்லவனையும் பொல்லாதவனையும் ஒப்பமதித்து எல்லோரும் நல்லவரே என்று நடக்க வேண்டும். ஏழைக்கு மனச் சமநிலை வேண்டும் என்கிறார் வைகுண்டர்.

4. வறுமையது தான் பெருத்தால்
வழிதப்பிப் போவீர்கள். அருள். ப. 37.

வறுமை அதிகமானால் வாழ்வில் வழிதப்பிப்போகநேரிடும்.

'மறதி புகழைக் கொல்வது போல
நித்திய வறுமை அறிவினைக் கொன்றுவிடும்'

என்பார் திருவள்ளுவர்.

''தாங்கொணா வறுமை வந்தால்,
ஓங்கிய அறிவு குன்றி உலகெலாம் பழிக்கும்''

என்பது விவேகசிந்தாமணி.

எனவே ஏழையாய் இருந்தாலும் ஒன்றும் இல்லாதவர்களாக ஆகிவிடக் கூடாது. வாழ்வுக்குத் தேவையானவற்றை உழைத்துப்பெறவேண்டும் என்கிறார் வள்ளுவர்.

5. வலியவர்களைப் போலக்
காசுக்கு அலவாதே. -அருள். ப. 20.

வலியவர்கள் காசுக்கு அலந்துகிடக்கிறார்கள். நீ அது போல அலந்து கிடக்காதே.

அலப்பு தீராத பேரசை அது பணக்காரர் இயல்பாக உள்ளது. இந்த ஆசை ஒருவன் மானத்தையும் இழக்கச் செய்துவிடும். காசுக்கு அலந்தவன் பஞ்சமா பாதகங்களையும் தயங்காமல் செய்வான். எனவே அலப்புக்கூடாது.

''தான் வருந்தி வாழ்வதே நல் ஆண்மகற்குக் கடன்''

என்று அறிவுறுத்துகிறது நாலடியார். பணத்தின் மேல் அலப்பு இல்லாமல் உழைத்து உயர்க என்பது அய்யாவின் கட்டளை ஆகும்.

O

31. செல்வம்

'பொருள் அல்லது இல்லை பொருள்'

என்பது திருவள்ளுவம். பொருளே இன்பத்தின் பூ. அறத்தின் விதை. பொருள் இல்லார் வாழ்வு இருள். செல்வம் என்பது பணச் செல்வமே. அதன் பெருமையும் இயல்பும் பயனும் இவ்வியலில் விளக்கப்படுகின்றன.

1. செல்வம் பொருந்தி
   சிறந்து இரு என் மகனே! அகிலம். ப. 208.

என் மக்களே நீங்கள் செல்வம் நிறைந்து வாழ்வில் சிறந்து இருங்கள்.

செல்வம் இன்றேல் சிறப்பு இல்லை. எனவே செல்வம் பொருந்தியவர்களாக வாழுங்கள் என்கிறார்.

'பொருள் தனைப் போற்றிவாழ்.'

என்பது ஔவை ஆத்திசூடி.

'பொருள் என்பது பொய்யாத விளக்கு'

அதை ஏற்றி ஒளி பொருந்தி வாழ வழிகூறியுள்ளார் வைகுண்டர் பெருந்தகை.

2. வீணுக்குத் தேடுமுதல்
   விருதாவில் போடாதுங்கோ. அகிலம். ப. 252.

உழைத்துத் தேடிய செல்வத்தை வீணாக வெறிதாகப் போட்டு அழித்துவிடாதீர்கள்.

நான்மணிக்கடிகை,

''நலனும் இளமையும் நல்குரவில் சாம்',

என்று எச்சரிக்கிறது. நல்குரவு வறுமை. செல்வத்தை வெறிதாக வீணாக பயனற்ற முறையில் அழித்து விட்டால் நல்குரவு வந்துவிடும். அதனால் நலங்களும் இளமையும் செத்துவிடும். எனவே பொருளை அழிக்காதீர்கள் என்கிறார் அய்யா.

3. அவனவன் தேடுமுதல்
   அவனவன் வைத்து ஆண்டிடுங்கோ.

அகிலம். ப. 252.

ஒவ்வொருவரும் தாம் தேடும் செல்வத்தைத் தாமே பயன் படுத்தி வாழ்வில் அனுபவித்து ஆளுங்கள்.

முதல் என்பது செல்வம். யாரும் பிறர் செல்வத்தை அபகரிக்கக் கூடாது. தத்தம உழைப்பால் தேடிய பொருளால் தம வாழ்வை அனுபவிக்க வேண்டும்.

''வினையே ஆடவர்க்கு உயிர்''

என்கிறது குறுந்தொகை. வினை வேலை. ஆடவர் வேலை செய்து பொருள் தேட வேண்டும் அபபொருளைப் போற்றவேண்டும்.

'பொருள் ஆட்சி போற்றாதார்க்கு இல்லை'

என்பார் திருவள்ளுவர். போற்றுதல் தாம் வைத்து ஆளுதல். தம் பொருளைத் தாமே ஆள்க எனபது அய்யாவழி.

4. கலியுகம் தனிலே
தேடியே போட்ட நகை
கழன்றோடிப் போகும். -அருள். ப 19.

நகைகளின் மேல் பற்றுக் கொண்டு உடம்பில் போட வேண்டாம். அவை கலியுகத்தில் கழன்று போகும்.

கலியுக இயல்பு கூறுகிறார். நகைப்பித்து கூடாது என்று எச்சரிக்கிறார். கலியுகத்தில் நகைகள் ஒழியும் என்பது அய்யாவின தீர்ககதரிசனம.

'துன்பக்கு உறை பதி பொருள்'

என்பது நாலடியார். அது நகையாக ஆகும் போது துன்பமும் தந்து போகவும் செய்யும்.

5. தர்மம் தான் வாழும்
சக்கரங்கள் அல்ல. -அகிலம். ப. 207.

உலகில் நிலைத்து நிற்பது ஈகையே. பணம் அல்ல.

'செல்வத்தின் பயன் ஈதலே'

என்பார் திருவள்ளுவர்.

'ஈகை உயிர்க்கு ஊதியம் ஆகும்'

என்பது குறள். எனவே பணம் தான் நிலையானது என்று கருதி ஈகையை மறந்துவிடலாகாது. சக்கரம் பணம். அது நிலையில்லாதது. அறம் நிலையானது. நிலையில்லாத பணத்தால் நிலையான அறத்தை மேற் கொள்க என்று ஆணையிடுகிறார் வைகுண்டசாமி.

O

32. அநியாயம்

நியாயம் இறைவனின் சிம்மாசனம். அநியாயம் நரகத்தின் சுரங்கம். அநியாயம் என்பது தீவினைச் செயல்.

'தீயை விட இதற்கே அதிகம் அஞ்ச வேண்டும்'

என்பார் திருவள்ளுவர். அநியாயத்தின் இயல்பையும் அழிவையும் விளக்கும் அய்யா மொழிகள் இவை.

1. அற்பம் இந்த வாழ்வு
அநியாயம் விட்டு விடு. -அகிலம். ப. 22.

இந்த உலக வாழ்வு அற்பக் காலமே இருப்பது. எனவே அநியாயங்களைக் கைவிட்டுவிடு.

வாழ்வு நிலையானது என்று எண்ணி அநியாய வழியில் பொருள் தேடுகிறான் மனிதன்.

'இதையேபுல்லறிவாண்மை'

என்கிறது தமிழ்மறை. மனிதன் நல்லறிவாண்மை பெற்று அநியாயத்தை கைவிட அறிவுறுத்துகிறது இத்திருமொழி.

2. அவரவர்க்கு உள்ளது உண்டு
அநியாயம் செய்யாதே. -அருள். ப. 27.

அவரவர்க்கு உள்ள செல்வம் அவரவர்க்குக் கிடைக்கும். அதற்காக அநியாயம் செய்யாதே.

வாழ்வை வளமாக்க அநியாயம் செய்து பொருள் தேடும் மனிதர் பலர், செல்வம் நல்லூழால் வருவது. ஊழால் தனக்காகிய செல்வத்தைப் புறத்தேகொண்டுதட்டினாலும் அது போகாது. தனக்குக் கிடைக்காத செல்வத்தை வருந்திக்காத்தாலும் நிற்காது என்பார் பரிமேலழகர். எனவே அதற்காக அநியாயம் செய்வதை விலக்குகிறார் அய்யா.

3. கைதட்டும் பொழுதோ கைதட்டும் நேரமோ
கலியன் இருப்பதெல்லாம். அருள். ப. 21.

ஒரு கைதட்டும் பொழுதோ நேரமோ தான் கலியனி இருப்பதெல்லாம்.

கலியன் அநியாயம் செய்பவன். அவனே அநியாய சுக்காரர்களில் முதல்வன். ஒருவன் பிறப்பும் இறப்பும் கண் மூடித்திறக்கும் நேரத்துக்குள் முடிந்து விடும்.

''விழித்திமைக்கும் மாத்திரையன்றோ
ஒருவன் அழித்துப் பிறக்கும் பிறப்பு''

என்பார் நாலடியார் புலவர். இந்நிலையாமையை எண்ணி யாவது அநியாயத்தைக் கைவிடப் பணிக்கிறார் வைகுண்டர்.

4. வம்புக்கு நோக்கம்
வாக்கில் மிகவிருக்கும் -அகிலம். ப. 232.

அநியாயத்தின் நோக்கம் பேச்சில் தெரியும்.

அநியாயம் நெஞ்சில் பிறந்து வாயில் வெளிப்படுகிறது. பேச்சின் மூலமே இதனைத் தெரிந்து கொள்ளலாம். இது குடியை அழித்துவிடும். செய்பவனுக்குக் குற்றமும் ஏற்படும். எனவே வம்புப்பக்கம் சேராமல் நியாயத்தின் பக்கம் நிற்க வேண்டும். நடுவு நிலையில் நிற்க வேண்டும். இதைஉணர்வதே பேரறிவு.

'நடுவு நின்றார்க் கன்றி ஞானமும் இல்லை'

என்பது திருமந்திரம்.

5. வம்புரைக்கக் கூடாது
வம்புரைத்தால் வன்னரகம்.

அகிலம். ப. 179.

பெரிய நரகம் வம்புப் பேச்சால் தான் வருகிறது. எனவே வம்பு பேசக் கூடாது.

வம்புப் பேச்சே அநியாயத்தின் முதல்படி. அதுநரகத்தின் வாயில். பொய், குறளை, வன்சொல், பயனில் சொல் என்பவை வம்பில் அடங்கும், வம்பு ஒருவனை.

'நன்மையின் நீக்கும்'

என்கிறது குறள். நன்மையின் நீங்குவார் வைகுண்டப் பதவி அடையார். நரகமே அவருக்கு கிடைப்பதாகும். பேச்சில் அநியாயம் கூடாது என்கிறது இத்திருமொழி, பயனில் சொல்பவர்.

'மக்களுள் பதர்'

என்பது திருவள்ளுவர் தீர்ப்பு.

O

33. கேடு

'கெடுவான் கேடு நினைப்பான்'

என்பது தமிழ்ப் பழமொழி. கேடு பிறர் தர வருவதல்ல. அறியாமையால் தமக்குத்தாமே ஏற்படுத்திக் கொள்ளும் தீங்காகும்

'கேடும் நன்றும் பிறர் தர வாரா'

என்பது புறநானூறு. எனவே கேடுநீங்கிவாழும் முறைமைகளை இவ்வியலுள் விளக்குகிறார் வைகுண்டசாமி.

1. கோடுபல வாதுகளும்
   கோள் நீசப் பாவிகளும்
   கேடுவரும் காலம். அகிலம். ப. 204

நீதிமன்றங்களும் அங்கு செல்லும் வழக்குகளும் கோளும் பாவிகளின் நீசச் செயல்களும் மக்களுக்கு இக்காலத்தில் கேடு வரக் காரணமாகும்.

கோடு-கோர்ட்-நீதிமன்றம், வாது-வழக்குகள். கோட்டேறியவன் குடிமுடிந்து போவான். கவிமணியின் மருமக்கள் வழி மான்மியத்தில் கோட்டேறி குடிமுடித்த படலம் காணலாம். அறிவுள்ள மக்கள் வழக்குகளைக் கொண்டு கோர்ட்டுகளுக்குப் போகலாகாது. கேடு வரும். கோள் புறங் கூறுதல். அது

'அறத்தை அழித்துப் பாவத்தைச்
செய்வதைவிடவும் தீமையானது'

என்பது திருவள்ளுவம். கோர்ட்டாலும் கோளாலும் கேடு வரும் என்று விளக்குகிறார்.

2. கருதி இருந்திருங்கோ
   கருத்து அயர்ந்து போகாதுங்கோ.
   அகிலம் ப 223

வழக்குகளாலும் கோளாலும் கேடு வரும் என்பதை நினைத்து ஒதுங்கி வாழுங்கள். இக்கருத்தை மறந்து விடாதீர்கள்.

'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்'

என்பது தமிழ்மறை. இக்கருத்தை அயர்த்துவிட்டால் கேடு வரும்.

3. வரம்பு தப்பாதே
   வழிதவறி நில்லாதே. அகிலம். ப. 206.

ஒழுக்க வரம்புகளில் தப்பாதே. வழி தவறிப் போய் விடாதே.

ஒழுக்கமே வாழ்வின் உயர்வரம்பு.

'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்'

என்பார் தெய்வப் புலவர்

'இழுக்கத்தின் மிக்க இழிவு இல்லை'

என்பார் முன்றுறை அரையனார். வழி என்பது நல்வழி. தீவழியில் செல்வதை விலக்குகிறார் அய்யா. ஒழுக்கமின்மையும் தீவழியும் கேடு தரும் என்பது அய்யா கொள்கை.

4. பொல்லாப்புக் காட்ட வேண்டாம்.

அருள். ப. 44,

யார் நேருக்கும் தீமைகளைச் செய்ய வேண்டாம்.

பொல்லாப்பு தீவினை.

'நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம்'

என்பது திருவள்ளுவம். பிறர்க்கு முற்பகலில் செய்யும் கேடு தமக்குப் பிற்பகலில் தாமே வரும் என்று அதனை மேலும் விளக்குகிறது தமிழ் மறை.

'பிறர்க்கின்னா செய்தலின் பேதமை இல்லை'

என்பது அறநெறிச்சாரம் எனவே தமக்குக் கேடு பிறர்க்குத் தாம் செய்யும் தீமையாலேயே வரும் என்பதை அறிவுறுத்து கிறார் அய்யா.

5. விசுவாச மதிலே விரோதம் நினையாதே.

-அகிலம். ப. 305.

நம்பிக்கைக் கொண்ட காரியத்தில் சந்தேகம் கொண்டு பகைமை பாராட்டக் கூடாது.

ஆராய்ந்து நட்புக் கொள்க நட்புக் கொண்டால் முழுவதும் நம்பிச் செயல் படுக. நட்பில் சந்தேகம் கொள்ளக் கூடாது. விரோதம் பாராட்டக் கூடாது. அது தீராத துன்பத்தினை அளிக்கும்.

'தன்னை அறியத் தனக்கொரு கேடு இல்லை'

என்பது திருமந்திரம். தன்னை அறிந்தவன் விசுவாசம் சந்தேகத்துக்கு இடம் கொடுக்காது. அவன் கேடு அடைய மாட்டான்.

O

34. ஆசை

ஆசை நாசத்தின் வித்து. பொய் மான் கரடு. அதனை 'மனத்தின் பசி' என்பார் காண்டேகர். ஆசை இல்லாமை தான் தூய்மை.

''தூய்மை என்பது அவா இன்மை''

என்பது தமிழ் மறை. ''வீடு அவா இன்மை'' என்று விளக்குவார் பரிமேலழகர். ஆசை, வீட்டின் வழி அடைக்கும் கல். எனவே ''ஆசை அறுமின்'' என்பர் சித்தர் பெருமக்கள். வைகுண்டரும் ஆசைகளை விலக்க அறிவுறுத்துகிருர்.

1. சொத்தாதி வஸ்து
சுகமென்று எண்ணுதே
வஸ்துவகை பெண் வகை
என்று எண்ணுதே. -அகிலம். ப. 206.

சொத்து முதலாய செல்வங்கள் சுகம் தரும் என்று எண்ணிவிடாதே, சொத்துத்தான் செல்வம், பெண் தான் செல்வம் என்று எண்ணிவிடாதே.

'சொத்தாதிவஸ்து'

மண், பெண், பொன், வஸ்து நிலபுலன். வகை அவற்றின் பலவகை. இவைகளை சுகமென்று எண்ணிவிடாதே. இவை சுகமல்ல,

''ஆசை விட விட ஆனந்தமாகும்''

என்பது திருமந்திரம். ஆசை விடுவதே சுகம் என்கிருர் வைகுண்டரும்,

2. அவகடம் பேசாதிருங்கோ.

அகிலம். ப. 223.

அவகடம் வஞ்சகம், நன்றியற்ற செயல், ஆசை வயப்பட்டவன் வஞ்சகன் ஆவான். நன்றியற்றவன் ஆவான். இரண்டும் வலையும் தூண்டிலும் போன்றவை.

''ஒருவனை வஞ்சிப்பது அவா''

என்பது திருக்குறள். இந்த வஞ்சனை ஆசைகாட்டி அழிவைத் தரும் என்கிருர் ஐயா.

3. மண்ணில் மூவாசையது
மாற்றாய் இருக்குதப்பா. அருள். ப. 36

மண்ணுலக வாழ்வில் மண், பெண், பொன் ஆசைகள் ஒருவனுக்குப் பகையாய் இருக்கிறது.

''பற்றினுன் ஆகும் பாவம்''

என்பது விளையாபதி. மூவாசையும் பாவத்தின் விளைநிலம் மனிதனுக்கு உண்மையான பகை இவைகளே என்கிருர் வைகுண்டர்.

4. ஆசையது உங்களுக்குத்
தோசமதாய் இருக்குதடா. அருள். ப. 44.

ஒவ்வொருவருக்கும் கேடாய் இருப்பது ஆசையே.

மனிதன் கேடுநீங்கி வாழவேண்டும். கேடு துன்பம் தரும். ஆசை கேடு விளைவிக்கும்.

'அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம்'

என்பார் தெய்வப் புலவர். எனவே தோசம் நீங்க ஆசையை வெல்க என்கிருர் அய்யா.

5 மண்ணுடன் மனைகள் ஆசை
மாடுடன் வீடு ஆசை
பெண்ணுடன் பொருளின் ஆசை
பூதலப் பொன்னின் ஆசை
எண்ணுடன் எழுத்தின் ஆசை
இறகு பொல் லாசை வேசை
ஒன்னுடன் ஆசை நீக்கி
உடையவன் ஆசை கொள்வீர்.
அகிலம். ப 277.

மண்ணாசை, மனைவிஆசை கன்றுகாலிஆசை வீட்டு ஆசை பெண்ணாசை பணத்தின் மேல் ஆசை உலகின் பெருங் கவர்ச்சியான பொன்னாசை கணிதத்தின் மேல உள்ள ஆசை இலக்கியங்களின் மேல உள்ள ஆசை மயில்போல் அழகிய விலைமகளிர் மேல் உள்ள பொல்லாத ஆசை இவை எல்லாவற்றையும் ஒன்றாக விலக்கி இறைவன் மேல் ஆசை கொள்ளுங்கள்.

ஒன்பது வகையான ஆசைகளை இத்திரு விருத்தம் வகைப் படுத்தியுள்ளது. உலகின் ஆசைப் பொருட்கள் எல்லாம் இவற்றுள் அடங்கும்.

ஆசையை அறுப்பதுதான் பெருஞ்செல்வம்

''வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை''

என்பார் திருவள்ளுவர்.

இவ்வாசைகளை நீக்கின் பிறப்பை அறுத்து விடலாம்.

திருக்குறள்

''பற்றற்ற கண்ணே பிறப்பு அறுக்கும்''

என்று உறுதியளிக்கிறது.

இவைகளை நீக்கி இறைவனைப்பற்ற வேண்டும்.

''அற்றது பற்றெனில் உற்றது வீடு''

என்பார் நம்மாழ்வார்.

வைகுண்டப் பேறடைய இத்திருமொழி வழிகாட்டுகிறது.

O

35. அழிவு

அழிவு என்பது பிறர்மேல் தொடங்கித் தன்மேல் முடியும் துயரம். அறிவு உடையார் அறவே நீக்கும் செயல். இது சினத்துக்குப் பிறந்து சாவுக்குப் பலியாகும். எனவே அழிவுக் குணத்தை அகற்ற வேண்டுகிறார் அய்யா.

1. அழிவு என்ற பேச்சு
அனுப் போல் நினையாதே.

பிறரை அழிக்க வேண்டும் என்று கொஞ்சமும் நினைக்காதே, பேசவும் செய்யாதே.

அனு என்பது அற்பம். கொஞ்சம். அழிவு நினைவு என்பது கொஞ்சமும் கூடாது. 'வாள் எடுத்தவன் வாளால் மடிவான்'' என்பது விவிலியத்திருமறை.

2. பெண்ணால் அழிவு பெருகும். அருள். 37.

பெண்ணால்தான் உலகில் அழிவு பெருகுகிறது.

பெண் என்பது பெண்மேல் ஆகும் பெருங்காமத்தினை. காமம் அழிவுக்கு வாயில். எனவே காமத்தில் அலையக் கூடாது என்று எச்சரிக்கிறது இத்திருமொழி. கவியரசர் கம்பர் ''காமம் இல்லெனில் கடும் கேடு எனும் நாமம் இல்லை'' என்பார். எனவே சேமம் வேண்டுவோர் காமம் விடுக.

3. வாழாத மங்கையரை
வைத்திருந்தால் இராச்சியத்தில்
தர்மம் தலைகெடும்காண்
சாத்திரத்துக்கு ஏராது
வறுமை வந்து சிக்கும்
மாரியது பெய்யாது
மானம் வரம்பு கெட்டு
மனுநீதி தானழிந்து
ஊனமடா அக்குடும்பம்
உலகத்துக்கு ஏராது. அகிலம். ப. 41

மங்கையர்க்கு மணவாழ்வு கொடுக்காமல் வைத்திருந்தால் அந்த தேசத்தில் தர்மம் கெடும். வறுமையில் தேசம் சிக்கும். மழை பெய்யாது. மானவரம்புகள் கெடும். மனித தர்மம் அழியும். அவள் இருக்கும் குடும்பத்தை உலகோர் ஏற்கமாட்டார்கள். சாத்திரமும் ஏற்காத கொடுமையாகும் இது.

மங்கையர் மனையறத்தால் தான் மழைபெய்து வறுமை மறைந்து தர்மம் தலையெடுக்கிறது. மானுடம் வரம்புக்குள் நிற்கிறது. மானுட நீதி அழியாமல் நிலைநிற்கிறது. எனவே மங்கையரை வாழாமல் வைக்கக்கூடாது என்கிறது அகிலத் திரட்டு. 'தமியள் மூத்தற்று' - தனியே பெண் இருந்து மூப்படைவது போல என்று இதனை வள்ளுவர் குறிப்பிடுவார். இது அழிவுக்கு உபமார்க்கம்.

4. கடக்கக் கருதாதே

கற்றோரைக் கைவிடாதே அகிலம். ப. 306

கற்றவர்களைக் கடக்கவும் நினைக்கக் கூடாது. கைவிடவும் கூடாது.

கற்றோர் சொல் வழுக்கு நிலத்தில் ஊன்றுகோல் போன்று உதவும் என்பார் திருவள்ளுவர். அவர்கள் துணையாக வாழ்வது 'வன்மையுள் எல்லாம் தலை' என்பார் வேறோரிடத்து. எனவே கற்றோரைத் துணையாகக் கொண்டு வாழ அறிவுறுத்துகிறார் அய்யா.

5. வம்பில் இறவாதே

வாழ்வு இழந்து போகாதே

வம்பில் இறங்காதே. அதனால் வாழ்வை இழப்பாய். இறப்பும் வந்து சேரும்.

'நான்' என்ற ஆணவம் உடையன் வம்பில் இறங்குவான். ஆணவம் ஆசையின் மகவு. அழிவின் தேவதை. 'நண்ணிய பாசத்தில் 'நான்' என்றல் ஆணவம்' என்பது திருமந்திரம். எனவே ஆணவத்தில் - வம்பில் இறங்கி வாழ்வை இழந்து விடாதே என்று எச்சரிக்கிறார் வைகுண்ட சாமி.

○

36. கலி

'கலி' என்பது துன்பத்தின் உருவகம். அநியாயத்தின் மெய்த்தோற்றம். அநியாயம்தான் கலியை உருவாக்குகிறது நியாயம் இருக்கும் இடத்தில் கலி இல்லை. வைகுண்டர் கலிப்பகைவர். கலியின் இயல்பு - அதனை வெல்லும் வகை இவ்வியலில் கூறப்படுகிறது.

1. கலியென்றால்
வலிமாய நினைவு மாய்மாலம்.

அகிலம் ப. 206

கலி என்பது தனக்கு வலிமை இருக்கிறது என்று அநியாயம் செய்ய நினைக்கும் நினைவே ஆகும். அது ஒரு மாய்மாலமே.

''பலஹீனனுக்கு மனிதன் எதுவரை அநியாயம்
செய்கிறானோ அதுவரை கலி இருக்கும்.
அநியாயம் நீங்கினால் கலி இல்லை!'' என்பார்

கவியரசர் பாரதி.

2. பம்மலிலே அகப்படுங்காண் இக்கலி.

அகிலம். ப. 206

கலி பணிவுக்குள் அகப்பட்டு அடங்கிப்போகும். பம்மல் - பணிவு, பணிவுடையாரைக் கலி பிடிக்காது. பணிவுடையார் பக்தி உடையராக இருப்பர். அவர்களுக்குக் கலியுகமே இல்லை. நம்மாழ்வார்

''ஒக்கத் தொழுகிற்றி ராயின்
கலியுகம் ஒன்றுமில்லை'' என்பார்.

3. தர்மத்தால் கலியைத்
தன்னந் தன்னால் கரைக்க அகிலம்.ப. 232

கலியைத் தர்மத்தால் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்து விடுக.

கலி என்பது அழுக்கு. தர்மம் நீர். இந்நீரால் அக் கறையைப் போக்கி விடலாம்.

''நசையில் பெரியதோர் நல்குரவு இல்லை'' என்பார் புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார்.

பொருளாசை இல்லாதவன் தர்மவானாக வாழ்வான், அவன் கலியைக் கரைத்துவிடுவான்.

4. சரியை கிரியை ஞானம் யோகம்
என்ற சொல் தாண்டிய கலி. அருள்.ப. 17

கலி சரியை கிரியை ஞானம் யோகம் என்ற நான்குக்கும் அடங்காமல் தாண்டி நிற்கும்.

இவை ஞான மார்க்கத்தின் நான்கு படிநிலைகள். கலி இவற்றுக்குள் அகப்படாது. துறவு மார்க்கத்தை விடவும் இல்லற மார்க்கமே கலிவெல்ல ஏற்றது.

''கலிக்கண் துறவறம் பொய்
இல்லறம் மெய்'' என்பது சிறுபஞ்சமூலம்.

5. கலிக்குள் அகப்பட்ட சடம்
கலியழிக்கக் கூடாது. அகிலம் ப. 141

கலிக்குள் அகப்பட்ட மானிடன் கலியை அழிக்க முடியாது.

அது மாய்மாலம். யாரிடம் இருக்கிறதோ அவனாலேயே அதை உணர முடியாது. புத்தர் கூறியது போலப் ''பேராசையிலிருந்து சோகம் தோன்றுகிறது.'' சோகம் அநியாயத்தைத் தூண்டுகிறது. அநியாயம் கலியாக உரு மாற்றம் கொள்கிறது. எனவே கலிக்குள் அகப்பட்டவன் கலிமயமாகவே இருப்பான். தர்ம சிந்தனை உடையவனே அதை அழிப்பான் என்கிறார் வைகுண்டர்.

○

37. பேய்

'பேய்' என்பது அச்சம். மெய்யுணர்வு இல்லாதாரின் வழிபாட்டுநிலை. அது சூனியத்தை உண்மைப் பொருளாக மயங்கும் நிலை. இல்லாத பேய்க்கு இவ்வுலகம் அறியாமையால் கொடுக்கும் மதிப்பு அறிவையும் ஆன்மீகத்தையும் அழித்துவிடும் அளவுக்கு வளர்ந்துவிட்டது. எனவே பேய் பற்றிய மெய்மைகளை வைகுண்டர் வையகத்தார்க்கு உணர்த்துகின்றார்.

1. பொய்யில்லை பசாசு இல்லை
பில்லியன் வினைகள் இல்லை
நொய்யில்லை நோவும் இல்லை
நொம்பல துன்பம் இல்லை
தொய்யில்லை இறைகள் இல்லை
சுருட்டுமா ஞாலம் இல்லை
மையில்லை உலகத் தோரே
வாழுமோர் நினைவால்... அகிலம் ப.252

உலகத்தோரே நான் இப்போது கூறுவது பொய்யில்லை! உலகில் பிசாசு பில்லி பில்லியின் தீவினை அதனால் வரும் பேய்பிடி நோவு துன்பம் கறை ஏதும் இல்லை. கடவுளும் பல அல்ல. அவை உலகத்தை ஆள்வதும் இல்லை. பேயினை வசமாக்கும் மையும் இல்லை. இதை நம்புங்கள். இறைவன் ஒருவன். அவனைப்பற்றிய ஒரே நினைவோடு வாழுங்கள்.

பேய்ச் சிந்தனையின் பல துறைகளையும் வகைபடக் கூறி அவற்றின் பொய்மையை இத்திருவிருத்தம் விளக்கியுள்ளது. அறிவுடையோர் மெய்வழி நிற்பாராக.

2. ஏவல் செய்யும் பிசாசாலே என்மக்கள்
ஈடழிந்து போகாதீர். அருள்.ப. 23

'பிசாசினை உங்கள் மேல் ஏவி விடுவேன்' என்பார்கள். என் மக்களே அதை நம்பி செல்வம் அழிந்து போகாதீர்கள். ஈடு செல்வம். மந்திரவாதி பேயினை ஏவுவான் என்று நப்பிச் செல்வம் இழப்பர் அறியா மக்கள். பாரதியும்

''மந்திரவாதி யென்பார் சொன்ன
மந்திரத்தி லேமனக் கிலிபிடிப்பார்'' என்பார்.

3. அந்தந்த தலங்களிலே ஆடும் அந்தப் பேய்களையும்
ஆடிமே லேயிருந்து அறிவுசொல்.

அருள்.ப. 23

பல தலங்களில் பேயாட்டங்கள் நடைபெறுகின்றன. அறிவுடையோர் அவைகளை அடக்கி அறிவு சொல்லுதல் வேண்டும்.

இது சீடர்களுக்கு வைகுண்டர் கட்டளைகளில் ஒன்று.

4. பம்பைப் பரத்தைப் பகட்டுக்கை காட்டெல்லாம்
எம்பரனுக்கேற்ற இயல்பல்ல.

அகிலம்-ப. 227

பேயாட்டம் பகட்டோடு கூடியதாகத் தலை விரித்த பரத்தை ஆட்டமாகிவிட்டது. இது என் பரம்பொருளுக்கு ஏற்றதல்ல.

பம்பை - குலைந்த தலை முடி. பேய்வழிபாட்டின் தன்மையினை இத்திருமொழி விளக்குகிறது. இது தெய்வத்தைத் தாயாக வழிபட்ட தமிழர் மரபின் சிதைவாகிவிட்டது. தெய்வத்தைப் 'பேய்' என்று பிதற்றும் சிறுநெறியாகி விட்டது.

குலசேகராழ்வார் பேய்வினையைச் 'செடி' என இகழ்ந்தார். நம்மாழ்வார் 'புறநெறிக் களை' என்றார். சக்தியைத் தாயாகப் போற்றும் மரபினை வைகுண்டர் போற்றவே செய்வார். வைகுண்ட அவதாரம் திருமகள் வயிற்றிலேயே நிகழ்ந்தது.

5. சாதி பதினெட்டும்
தலையாட்டிப் பேய்களையும்
வாரி மலையதிலும்
வன்னியிலும் தள்ளிவிடு.

அகிலம்-ப. 208

பதினெண் சாதிபேத இழிவையும் பேய்களையும் கடலிலும் மலையிலும் தீயிலும் தள்ளிவிடுங்கள்.

வாரி-கடல், வன்னி-தீ, சாதிகளையும் பேய்வழிபாட்டினையும் அடியோடு ஒழிக்க ஆணையிடுகிறார் அய்யா.

○

38. பலி

பேய் வழிபாட்டின் கொலைத்தொழில் பலி. அது இறை வழிபாட்டினைக் கறையாகி விட்டது. காலங்கள் தோறும் அறிஞர்கள் இதைக்கண்டித்து வந்துள்ளனர். திருவள்ளுவரும் ''அவிசொரிந்து ஆயிரம்வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை நன்று'' என்று அறிவுரைத்தார். வைகுண்டர் பலிபற்றிக் கூறிய மெய்யுரைகளை இவ்வதிகாரத்தில் காணலாம்.

1. ஆடுகிடாய்க் கோழி
   ஆயனுக்கு வேண்டாம் காண். அருள்.ப.43

திருமாலுக்கு ஆடு கிடாய் கோழி முதலியவற்றைப் பலியிட வேண்டாம்.

ஊன் தின்ன ஆசை உடையோர் அதனை இறைவன் மேல் சார்த்திப் பலியிடுகின்றனர். இறைவனுக்கு இவை தேவையில்லை என்கிறார் வைகுண்டசாமி.

2. ஊர்ந்து திரியும் உயிர்ப்பிராணி
   யாதொன்றையும்
   ரத்தவெறி தீபதூப இலைப்பட்டை முதல்
   சற்றும் பலிபாவம் தான்காண ஒட்டாது
   அகிலம்.ப.198

இரத்தவெறி கொண்டு ஊர்ந்து பறந்து திரியும் உயிர்ப் பிராணிகளைப் பலியிட்டு இலையிலும் பட்டையிலும் படைக்கும் பலியை இறைவன் ஏற்கமாட்டான்.

இலை, பட்டை பலியிடும் பாத்திரங்கள். பட்டை பனைஓலைப்பட்டை.

இறைவழிபாட்டில் பலிமுறை தோன்றி அதை மறவழிக்கு இட்டுச் சென்று விட்டது. இவ்வழக்கத்தை வள்ளலார்
''கண்மூடி வழக்கமெல்லாம்
மண்மூடிப் போக'' எனச் சபித்துள்ளார்.

3. குலத்தைக் கெடுக்கின்ற கோடரிக்
   காம்பது போல்
   உங்களுடைய பாவம் உங்களுக்கு
   உள்ளதா இருக்குதடா. அருள்.ப.44

உங்கள் பாவம் உங்களுக்கே உரியது. குலத்தைக் கெடுக்கும் கோடரிக் கம்புபோல் 'பலி' உங்களைப் பற்றிக் கொண்டுள்ளது. இதை உணர்ந்து கைவிடுக.

''அறவினை யாது எனின் கொல்லாமை'' என்றார் திருவள்ளுவர். இன்னா நாற்பதும் இனியவை நாற்பதும்

''ஊனைத் தின்று ஊனைப் பெருக்கல் இன்னா''

''ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை இனிதே''

என்று கூறுகின்றன.

4. எனக்காகும் பேர்கள்...
ஆடுகிடாய்க் கோழி
அறுத்துபலி இடார்கள்
மாடு மண்ணுருவை
வணங்கித் திரியார்கள். அகிலம்-ப. 170

ஆடுகிடாய்க் கோழிகளை அறுத்துப் பலியிடாதவர்களும் மாடு மண்ணுருவை வணங்கித் திரியாதவர்களுமே எனக்கு ஆகும் அன்பர்கள் ஆவர்.

பலியிடலும் அர்த்தமற்ற உருவ வழிபாடும் இத்திரு மொழியால் கண்டிக்கப்படுகின்றன.

'இறைவன் திருப்பெயரைச் சொல்லி யார் வந்தாலும் அன்போடு அவரை ஆதரிப்பவரே மெய்யான இறை பக்தர் ஆவார்' என்று இவ்வறவுரைப் பகுதி தொடர்ந்து செல்கிறது. எனவே மக்கள் பலி உருவ வழிபாடு ஆகியவற்றை விலக்கி அன்புநெறியை வளர்க்க வேண்டும்.

5. நீதி அழியாதே
நீ சாபம் கூறுதே. அகிலம் - ப.207

பலியிடுதல் நீதி அழிப்பதாகும், பலி கேட்டல் சாபம் இடுவதாகும். இவை கூடாது. சிறுபூசாரிகள் பலிகேட்டு நீதி அழிக்கிறார்கள். அவர்களுக்கு அய்யா இட்ட ஆணை இது.

''பலியை அன்று இரக்கத்தையே விரும்புகிறேன்'' என்றார் கிறிஸ்து பெருமானும்.

○

39. ஈகை

''இல்லார்க்கு ஒன்று ஈவதே ஈகை'' என்று விதி வகுத்தார் திருவள்ளுவர். உலகில் உயர்ந்தார் யார்? இழிந்தார் யார்? என்ற வினவுக்கு ஔவை ''இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தார்'' என்று விடை பகர்ந்தார். அந்த ஈகையின் சிறப்பை எம்பெருமான் வைகுண்டர் விளக்குகிறார்.

1. இரப்போர் முகம் பார்த்து
   ஈவதுவே நன்றாகும். அகிலம்-ப. 170

இரப்போர் முகம் கண்டு இரங்கிடுக. அவர்களுக்கு செல்வத்தை ஈந்திடுக. ஈகையே உலகில் நல்லதாகும்.

''ஈரம் உடைமை ஈகையின் அறிப'' என்பது முதுமொழிக்காஞ்சி. ''ஈந்து உண்பான் என்பான் இசைநடுவான்'' என்பது நான்மணிக்கடிகை. எனவே ஈகையே நன்று என்கிறார் அய்யா.

2. ஆர்க்கும் மிகஈந்தால்
   அந்த தர்மமே கொதிக்கும். அகிலம்-ப. 207

யார் என்று பாராமல் இரப்போர்க்கெல்லாம் ஈந்திடுக. அந்த தர்மமே பொங்கிப் பொலியும்.

கொதித்தல் பொங்குதல். ஈபவர் செல்வம் மேன்மேலும் பொங்கும். ''செல்வத்துப் பயனே ஈதல்'' என்பார் புறநானூற்றுப் புலவர். ஈதலே அதிகமாக ஈட்டும் நெறி என்கிறார் வைகுண்டர்.

3. இரப்போர்க்கு அன்னமது ஈந்திடுங்கோ
   கொடுத்தால் அன்னம்
   குறையாமல் கொடுத்திடுங்கோ.
   அருள்.ப. 41

இரப்போர்க்கு அன்னம் வழங்கவேண்டும். அதுவும் குறையாமல் கொடுக்கவேண்டும்.

கும்பி நிறையாமல் கொடுத்துப் பயனில்லை. செல்வத்தைச் சேமிக்கச் சிறந்த இடம் 'பசித்தவன் வயிறு' என்றார் திருவள்ளுவர்.

''தமக்கென்று உணவு சமைப்போர்
பாவத்தை உண்கிறார்கள்'' என்பது கீதாஞானம்.

எனவே ஈந்து உண்க என்கிறார் பகவான்.

4. சொர்ணமது அளித்து சொகுசுபெறு.

அகிலம்-ப. 6

இல்லாதார்க்கு செல்வத்தை வழங்கி வாழ்வில் சுகம் பெறுக.

வறுமையே துன்பங்களில் பெரியது. அதைத் தீர்ப்பவன் இன்பங்களில் பெரிய இன்பம் அடைவான்.

''உயிர்க்கு ஊதியம் புகழ்'' என்பார் திருவள்ளுவர். அந்த ஊதியம் ஈகையால் தான் கிடைக்கிறது.

'ஈந்தவர் அல்லது இருந்தவர் யாரே?' என்று கம்பர் வினவுவார்? எனவே சொர்ணத்தை ஈந்து புகழ் வாழ்வு - சுகவாழ்வு வாழ வைகுண்டர் இத்திருமொழியால் வழிகாட்டுகிறார்.

5. அன்போர்க்கும் ஈயு
ஆகாப்பேர்க்கும் ஈயு
வன்போர்க்கும் ஈயு
வழிப்போவார்க்கும் ஈயு
சகலோர்க்கும் ஈந்து
தானிருநீ என்மகனே.

அகிலம்-ப.207

அன்பர்க்கும் உனக்கு ஆகாதபேர்க்கும் வம்பர்க்கும் வழிப்போவார்க்கும் சகலர்க்கும் ஈக, ஈக என்ற ஆணைமொழி நாட்டு வழக்கில் 'ஈயு' என்று வழங்குகிறது

ஈபவன் தான் உலகில் நிலைபெறுகிறான். எனவே ஈந்து இருந்து வாழ்க என வாழ்த்துகிறார் எம்பெருமான்.

○

ஈ. ஞானஇயல்

40. பக்தி

'உண்மையான பக்தியே அமிர்தம்!' என்றார் பாரதியார். பக்தி நெறியே இறைநெறியில் பழநெறி. பக்தி சகல சக்திக்கும் வித்து. ''பக்தி இல்லார்க்கு முத்தி சித்தி இல்லை'' என்பார் சித்தர் இடைக்காடர். அந்த பக்தியை-மேன்மையைப் பகவான் வைகுண்டர் இவ்வதிகாரத்தில் தெளிவுபடுத்துகிறார்.

1. அன்புள்ள பக்தரை
ஆல்போல் தழைக்க வைப்பேன்.

அருள்.ப.10

அன்புள்ள பக்தர்களை இறைவன் ஆல்போல் தழைக்க வைப்பான்.

அன்பின் முதிர்நிலையே பக்தி. அராக்கதலே பக்தி. பக்தி உள்ளவர்கள் ஆல்போல் தழைப்பார்கள்.

2. நன்மை இனிகாணும்
நாரணன்கண் அல்லாது
தின்மை என்ற சொல் ஆகாது

அகிலம்-ப. 222

நாரணனை வழிபடுபவர்களுக்கு என்றும் நன்மையே காணும். தீமை என்ற சொலலே வராது.

நாரணனை வழிபட்டு உய்யவழிகாட்டும் திருமொழி இது. திருமங்கையாழ்வார்

''நாவினால் உய்ய நான்கண்டு கொண்டேன்
நாரண என்னும் நாமம்'' என்பார். நாமும் நாராயணனை எண்ணிப் பேசி உயர்வு பெற வேண்டும்.

3. முத்தியில் இவரைக் கண்டு
முயன்றவர் பேறு பெற்றார்
பக்தியில் லாதாரெல்லாம்
பாழ்எனச் சொல்லி நின்றார்

அகிலம்-ப. 252

பக்தி உடையவர்கள் இறைஉண்மை கண்டு வழிபட்டு முத்தியடைந்தார். பக்தியில்லாதவர்கள் இறை இல்லை என்று கூறிப் பாழானார்கள்.

இறைவன். ''ஞானத்தின் ஒளி உரு'' என்றார்

திருமங்கையாழ்வார். ''ஈசன் உறவுக்கு எதிர் இல்லை'' என்றார் திருமூலர். ஞான உருவான இறைவனை உறவு கொள்ளவேண்டும். அதுவே ஆத்திக நெறி. நாத்திகம் பாழ் நெறி என்கிறார் அய்யா.

4. வேண்டாம் வேண்டாம் காணிக்கையும்
மிகவே வேண்டாம் கைககூலி
ஆண்டார் நாராயணர் தனக்கு
அனுப்போல் வேண்டாம் காவடியும்

அகிலம்-ப. 197

நாராயணனுக்குக் காணிக்கை கைக்கூலி காவடி எதுவும் வேண்டாம்.

இறைவனுக்கு பக்தர் படைப்பது காணிக்கை. அதைப் படைக்க பூசாரி பெறுகிறான் கைக்கூலி. இவற்றைத் தவிர்க்க வேண்டுகிறார் அய்யா.

பக்திவழிப்பட்டார்க்கு இறைவனை அடைய அதுவே போதும்.

''பக்திப் பட்டார்க்கு
பணி ஒன்றும் இல்லையே!'' என்பார் திருமூலர்.

எனவே ''பற்றற்றான் பற்றினைப் பற்றுக''. சடங்கு முறைகளைக் கைவிடுக என்கிறார் வைகுண்டர்

5. பக்தி மறவாமல் பதறாமல் நீ இருந்தால்
புத்தி சொல்ல நான்வருவேன்.

மக்களே நீங்கள் பக்தி மறவாமல் பயமே இல்லாமல் இருந்து வாழுங்கள். உங்களுக்கு வேண்டிய எல்லா அறிவையும் நான் வழங்குவேன்.

பக்தி உடையவர்களுக்கு வாழ்நெறி தானே புலனாகும். அவர்களுக்குத் தளர்ச்சியும் இல்லை.

''மூப்புன்னைச் சிந்திப்பார்க்கு இல்லை திருமாலே
நின்னடியை வந்திப்பார் காண்பார் வழி''

என்றார் பொய்கையாழ்வார். வைகுண்டம் அடைவதற்கான வழியை பக்தி நெறியே காட்டும், இறைவன் புத்தியும் அருள்வான்.

'விதியின் முடிவுகளைத் தெய்வபக்தி வென்றுவிடும்'. என்பது பாரதிஞானம். தெய்வ அருளே இதற்கு அடிப்படை.

○

41. பணிவு

பணிவு சான்றோர்க்கு அணிகலம். துணிவுடைய வீரர்க்கு அது பேரழகு. 'செல்வர்க்கு அது மேலும்ஒரு செல்வம்'' என்பார் திருவள்ளுவர். பணிவு என்பது உயர்வின் மென்மைப்பண்பு. பணிவின் சிறப்பை இவ்வியலில் வைகுண்டர் விளக்குகிறார்.

1. தாழ்ந்திரு என்மகனே
சட்டைக்குள்ளே பதுங்கி
சார்ந்திரு என்மகனே
தனதில் மிகநினைந்து. அகிலம்-ப. 201

மகனே! எப்போதும் பணிவோடு இருந்து வாழ்வாயாக. தன் சட்டைக்குள் பதுங்கித் தன் இல்லத்தை மிகவும் நினைந்து வாழ்வாயாக.

சட்டை - உடல். உடலுக்குள் மனம் பணிவு கொண்டு அமைதல் வேண்டும். ஒவ்வொருவரும் தம் இல்லவரம்புக்குள் அதனை உயர்வுபெறச் சமைந்து வாழ்தல் வேண்டும்.

2. ஆக்கிரம் எல்லாம்
அடங்கி இருமகனே. அகிலம்-ப. 201

மகனே அகங்காரம் எல்லாம் அடங்கிப் பணிவோடு வாழ்வாயாக.

ஆக்கிரம் - அகங்காரம். கோபமுமாம், அகங்காரம் அடங்குவதே பணிவு. அதுவே பெருமை. வள்ளுவரும் ''பெருமை பெருமிதம் இன்மை'' என்றார்.

3. பதறி இருமகனே
பம்மியிரு கண்மணியே. அகிலம்-ப. 206

என் கண்மணி போன்ற மகனே! நீ தீமைக்குப் பயந்து வாழ்வாயாக. எப்போதும் பணிவோடு வாழ்வாயாக.

பதறுதல் - பயப்படுதல். தீமைக்கு அஞ்சுதல் அறிஞர் இயல்பு. அஞ்சவேண்டியவற்றுக்கு அஞ்சி ஒதுங்கி வாழ்தல் வேண்டும்.

'அஞ்சுவது அஞ்சாமை பேதமை!'' என்றார் தெய்வப் புலவரும்.

தீமைக்கு ஒதுங்கி பணிவோடு வாழ வற்புறுத்துகிறார் வைகுண்டர்.

4. தாழ்ந்திருக்க வென்றால்
சகலத்துக்கும் தாழணுமே. அகிலம்-ப. 206

மகனே! பணிவோடு வாழ்தல் என்றால் எதற்கும் எந்த சந்தர்ப்பத்திலும் அகங்காரம் கொள்ளாமல் தாழ்ந்து வாழ வேண்டும்.

செல்வம் பெருகும்போது பணிவு தவறுதல் உலகியல்பு.

''பெருக்கத்து வேண்டும் பணிவு'' என்று தமிழ் மறை வற்புறுத்தும். பெரியோர் பெருக்கம் வரும்போது 'விளைந்த கதிர்போல பணிவர், என்பர் சீவகசிந்நாமணி ஆசிரியர். வைகுண்டரும் சகலதுக்கும் பணிந்து வாழவேண்டும் என்கிறார்.

5. உன்னருள்தான் என்று
உகந்திடாதே மகனே. அருள்.ப. 25

மகனே! செல்வமும் அறிவும் வீரமும் உன் முயற்சியின் பயனே என்று மகிழ்ந்து ஆணவம்கொண்டுவிடாதே.

வாழ்க்கைப் பேறெல்லாம் வாலறிவன் கொடையே. அருள் மலிந்த செயல்களே ஆக்கம் தருகின்றன. எனவே 'எல்லாம் அவன் செயல்' என்று உணரவேண்டும். அப்போது பணிவு தானேவரும்.

○

42. பொறுமை

'பொறை'யே குணங்களில் உயர்வானது. அது 'மிகுதியால் மிக்கவை செய்தாரைத் தம் தகுதியால் வென்று விடுதல்' என்று குறள் ஆசான் கூறுவார். பொறைஉடையவனே நிறை உடையவன். பொறுமை கோழைத்தனம் அல்ல. வீரத்தின் விழுது, பொறுமையின் சிறப்புகளை இவ்வியல் விளக்குகிறது.

1. பொறுதிதான் மகனே
பெரியோர் ஆகுவது
உறுதிமிக உண்டாகும். அகிலம்-ப. 202

மகனே பொறுமையால்தான் ஒருவன் பெரியோன் ஆகிறான். பொறுமைதான் மனிதனுக்கு மன உறுதியை உண்டாக்குகிறது.

''பிழைத்தல் பொறுத்தல் பெருமை'' என்பது சிறுபஞ்ச மூலம். பிறர் செய்யும் பிழையைப் பொறுப்பவனே பெரியவன். அதற்கு மிக உறுதி வேண்டும்.

2. தர்மமதாய்த் தாரணியில்
தன்னந்தன்னால் வாழ்ந்து
பொறுமைப் பெரியோராய்
பூதலமெல்லாம் வாழ்வார். அகிலம்-ப. 204

பொறுமை உடையவர்கள் பெரியோராய் வாழ்வார்கள். தத்தம் அறத்தைப்பேணி தர்மவான்களாய் உலகில் உயர் வாழ்வு பெறுவார்கள்.

பொறுமை என்பது தன் சுய ஒழுக்கம். அதை ஒவ்வொருவரும் தன்னந்தனியே பேணவேண்டும். அதுவே அற வாழ்வுக்கு அடிப்படை.

3. பொறுமை பெரிது
பெரிய திருமகனே. அகிலம்-ப. 204

பெரியவனே! செல்வம் மிக்க என் மகனே! வாழ்வில் பொறுமையே பெரியவற்றுள் பெரியதாகும்.

''பொறுமையில் தலைசிறந்த பொறுமை பூமிபோல் வாழ்வது, அது தன்னை அகழ்வாரையும் தாங்கி நிற்கிறது'' என்பது வள்ளுவர் ஞானம். வைகுண்டரும் பொறுமையின் பெருமையை எளிய சொற்களால் இனிதே விளக்கியுள்ளார்.

4. பொல்லாதா ரோடும்
பொறுமை உரைமகனே. அகிலம்-ப. 205

மகனே! நீ பொல்லாதவரோடு கூட பொறுமையாகப் பேசி உலகில் வாழ்வை நடத்து.

கலித்தொகை,

''பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்!'' என்று விளக்குகிறது. பொல்லாதார் நம்மைப் போற்ற மாட்டார்கள். அதற்காக மனம் கன்றி - கோபமுற்று பேசி விடலாகாது. அது அவர் இயல்பென உணர்ந்து பொறுமை யாகப் பேசவேண்டும்.

5. அன்பு குடிகொண்ட
அதிகமக்காள் நீங்களெல்லாம்
பொறுத்து இருங்கோ
பூலோகம் ஆளவைப்பேன். அகிலம்-ப. 264

மனத்தில் அதிக அன்பைக் குடிவைத்துள்ள என் மக்களே! நீங்களெல்லாம் பொறுமையோடு வாழுங்கள். இந்த உலகத்தையே ஆளவைப்பேன்.

'பொறுத்தவர் பூமி ஆள்வார்' என்பது பழமொழி. துன்பத்தைத்தாங்கும் ஆற்றல் பெற்றவர்களே பொறுமையைக் கடைபிடிக்க இயலும். முதுமொழிக்காஞ்சி,

''துன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது!'' என்கிறது.

பொறுமை உடைய மக்கள் இன்பமும் அடைவர், இவ்வுலகை ஆளவும் செய்வர் என்கிறார் அய்யா.

○

43. அடக்கம்

அடக்கம் என்பது நன்னெறியில் அமைந்து வாழ்தல். அடங்காமையின் எதிர்நிலை. ''அடக்கம் அமரருள் உய்க்கும்'' என்பது தெய்வப் புலவர் துணிவு. அகங்காரத்தையும் கோபத்தையும் விலக்கி வாழ்தல். அடக்கத்தின் மேன்மையை இவ்வதிகாரம் விளக்குகிறது.

1. அடக்கம் பெரிது
அறிவுள்ள என்மகனே. அகிலம்-ப. 206

என்மகனே! அடக்கமே வாழ்வில் உறுதியளிக்கும் பெரிய குணமாகும். நீ அறிவுள்ளவன். அதைப் போற்றுக.

''நல்லார்கண் தோன்றும் அடக்கம்'' என்பது கலித் தொகை. அறிவுள்ளவர் நல்லார். அவர்கள் அடக்கத்தோடு வாழவேண்டும் என்கிறார் அய்யா.

2. தான் பெரிதென்று தப்புமிகச் செய்யாமல்
வான் பெரிதென்று மகிழ்ந்திரு
அகிலம்-ப. 9

மகனே! அகங்காரத்தால் 'நான் பெரியவன்' என்று தப்புகள் செய்யாதே. 'வான்தான் பெரிது' என்று உணர்ந்து மகிழ்ந்து வாழ்வாயாக.

வான் என்பது இறைவனைச் சுட்டும் நிலை. இறைவனைப் பெரியவன் என்று உணர்வார் இயல்பிலேயே அடங்கி வாழ்வர்.

மெய்யறிவு உடையவரே இவ்வுணர்வு பெறுவர். ''அகத்தில் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்'' என்பார் திருமூலர்.

3. கப்பல் சிறிதெனவும்
கடல்தான் பெரிதெனவும்
கவிழ்ந்து இருக்கலாச்சே. அருள்.ப. 23

கப்பல் சிறிதுதான். கடல் பெரிதுதான். ஆனால் கப்பலால் கடலைக் கடக்கலாம். அடக்கத்தால் எத்துயரையும்

கடக்கலாம். அதற்குக் கவிழ்ந்து இருக்கவேண்டும். இத் திருமொழி பகவான் வைகுண்டரின் சுயவாழ்வின் வெளிப் பாட்டு மொழியாகும்.

அவர் சந்தித்த துயரங்கள் கடல் போன்றவை. அவரோ பொறுமை என்னும் கப்பலால் அதைக் கடந்தார். குனிந்த தலை நிமிராமலே கலியை வெற்றி கொண்டார்.

'மக்கட்கு அணிகலன் ஆவது அடக்கம்?' என்பது நாலடியார். அடக்கத்தால் பொலிந்தவர் அய்யா.

4. முன்வகைக் காரனோடு
மோதிப் பகையாதே. அகிலம்-ப. 206

மகனே! உன் உறவுக்காராகளோடு பகைத்து மோதிக் கொண்டு இராதே.

''கற்று அடங்கினன் அமிர்து'' என்பது சிறுபஞ்சமூலம். அடக்கம்தான் தேவர்நிலையை அளிக்கிறது. அடக்கம் பிறர் காரியத்தில் மட்டுமன்று. உறவுக்காரரோடும் கடைபிடிக்க வேண்டும். முன்வகைக்காரன் - சொக்காரன்.

5. சாபத்தைக் கூறாதே
தன்னளவு வந்தாலும். அகிலம்-ப. 205

மகனே! உன்னளவுக்குப் பிறர் செய்யும் தீங்கு வந்து விட்டாலும நீ சாபம் கூறலாகாது.

கோபம் உடையவன் அடக்கம் இழக்கிறான். அந்நிலையில் சாபம் கொடுக்கிறான். துறவியர் சாபம் பலிக்கும். அதே நேரத்தில் தவம் வீணாகும்.

''அரிதவம் கோபத்தால் அழிந்து போமே'' என்பது விவேகசிந்தாமணி,

அடக்கம் துறவுக்கு இன்றியமையாதது என்பதை இத் திருமொழி விளக்குகிறது.

O

44. வேதம்

வேதம் ஞான விளக்கு. தேசங்கள் தோறும் மொழிகள் தோறும் வேதங்கள் தோன்றியுள்ளன. அவையே மானுடத்தை வாழவைக்கின்றன. ''வேதத்தை விட்ட அறம் இல்லை'' என்பர் சான்றோர். வேதம் பற்றிய வைகுண்டர் கருத்துக்களை இவ்வியலில் காணலாம்.

1. நால் வேதத்திலும் நான் வருவேன்.

அகிலம்-ப. 204

நான்கு வேதங்களிலும் நான்தான் மெய்ப்பொருள் விளக்க யாக வருகிறேன்.

இது 'நானே அது' என்ற தத்துவமசி விளக்கம்.

'வேதமென்னும் நிலத்தில் தளிர்த்துள்ளான்' என்று கிருஷ்ணந்தாதியில் கண்ணதாசன் பாடியுள்ளார்.

'நால் வேதம்' என்பது பொது மரபு எண். ரிக் முதலான வடமொழி வேதங்களைப் பெரும்பான்மை குறித்து நிற்கிறது

2. சட்டம் மறவாதே
தன்னளவு வந்தாலும். அகிலம்-ப. 198

தன்னளவில் எவ்வளவு இக்கட்டுகள் வந்தாலும் வேதச் சட்டங்களை மறவாதே.

சட்டம்-வேதவிதிகள். உபநிஷத்துகளுமாம் நல்வாழ்வுக்கு வழிவகுப்பவை இவை. இவற்றை மறப்பவர்க்கு அறவாழ்வு இல்லை.

3. நான் பெரிது நீபெரிது
நிச்சயங்கள் பார்ப்போமென்று
வான்பெரிது அறியாமல்
மாள்வார்வீண் வேதம் உள்ளார்.

அகிலம்ப 209

பொதுவாழ்வுக்கு வழிகாட்டும் வேதங்களுக்கு சுயநல விளக்கம் அளித்து அவற்றை 'வீண்வேதம்' ஆக்கும் வீணர்கள் அவற்றின் மெய்ப்பொருளை அறியமாட்டார்கள்.

'நான் பெரிது நீ பெரிது' என்று ஆணவம் பேசி அழிவார்கள்.

வேதக் குழப்பங்களால் சமயக்குழப்பங்களும் அவற்றால் அழிவுகளும் நிகழ்வதை இத்திருமொழி விளக்குகிறது

வேதத்தின் சுருக்கமான உபதேசம் என்ன? என்ற வினுவுக்கு, 'மாதவன் பேர் சொல்லுவதே ஓத்தின் சுருக்கு'' என்றார் பூதத்தாழ்வார்.

மாதவனே பெரியவன். இதை உணராத சமயவாதிகள் 'நான் பெரிது நீ பெரிது' என்று மோதி அழிகிறார்கள் என்கிறார் அய்யா.

4. குற்றம் உரைப்பான் கொடுவேதக் காரனவன். அகிலம் ப. 209

கொடுமையையே வாழ்வின் வழியாக ஏற்ற சமயப் புரட்டர்கள் பிறசமய வேதங்களிலும் இறைவழிபாடுகளிலும் குற்றம் உரைத்துக்கொண்டே இருப்பார்கள்.

தம்குறை உணராது பிறர்குறை காண்போர் பேதையர், அவர்கள் சமயநெறியைக்'கொடுவேதநெறி' என்று சுட்டுகிறார் அய்யா.

5. அல்லா நினைத்தபடி ஆகும்.

உலகில் எதுவும் இறைவன் நினைத்தபடியே நடைபெறும்.

வேதங்கள் நிறைமொழி மாந்தர் மொழிகள் இறைவனே அவற்றுக்கு 'ஆவியும் ஆக்கையும் தானேயாக விளங்குகிறான்' என்ற நம்மாழ்வார் அவற்றை ''நாவினுள் நின்று மலரும் ஞானக்கலைகள்'' என்றும் போற்றுகிறார்.

வேதங்களின் இறுதியான சான்றுரை இதுவே எனவே வேதநெறியில் மனிதர் வாழவேண்டும்என்று அறிவுறுத்துகிறார் அய்யா.

○

45. வழிபாடு

'வழிபாடு' என்பது இறைவழியில் செல்லுதல். அது மெய்ப்பொருள் நாட்டத்தில் பிறப்பது. உலகின் பொருள் எல்லாம் பொய். இறைவனே மெய்ப்பொருள். மெய்ப் பொருள் சிந்தனையில் லயித்தலே வழிபாடு ஆகும். வழி பாட்டு முறைகளை இவ்வதிகாரம் விளக்குகிறது.

1. அன்பு மலர்எடுத்து
அனுதினமும் பூசைசெய். அருள் ப. 44

ஒவ்வொருவரும் தினமும் பூசை செய்வீர்களாக. இறைவனுக்கு அன்பு மலரைக் காணிக்கையிடுவீர்களாக.

இறைவனுக்கு ஏற்ற காணிக்கைப் பொருள் அன்பு ஒன்றே என்பதை இத்திருமொழி உறுதிப் படுத்துகிறது. பெரியாழ்வார் இதனை
''ஆர்வம் என்பதோர் பூவிடல்'' என்பார்.

2. காணிக்கை வேண்டாதுங்கோ
கைக்கூலி கேளாதுங்கோ. அகிலம்-ப 222

இறைவழிபாட்டுக்கு வருவோரிடம் காணிக்கை வாங்கா தீர்கள். கைக்கூலி கேளாதீர்கள்.

கோவில் பூசை புரிவோர்க்கு வைகுண்டர் கட்டளை இது. அவர்கள் காணிக்கையிலும் கைக்கூலியிலும் கவனம் கொள்ளும்போது பக்தி போலியாகிவிடுகிறது.

3. கன்னியாட்டு காவடி
கைக்கூலி தான்முதலாய்
நிறுத்தல் செய்ய வேண்டும்.
அகிலம்-ப. 227

திருக்கோவில்களில் கன்னிக்கு ஆட்டம் காவடி கைக்கூலி ஆகியவற்றை நிறுத்திவிடவேண்டும்

'தெய்வம் ஒன்று' என்ற நிலைமாறிப் பல தெய்வ வழிபாடு மலிவதையும் அர்த்தமற்ற சடங்குகள் பெருகுவதையும் வைகுண்டர் கண்டிக்கிறார்.

''உள்ளம் பெருங்கோவில்
ஊனுடம்பு ஆலயம்'' என்றார் திருமூலர். அந்த மெய்ப் பொருளை ஆரவாரம் இன்றி வழிபட்டு உய்யவேண்டும்.

4. மேளதாளம் குரவைதொனி
வேண்டாம்காண் ஈசனுக்கு. அருள். ப. 43

இறைவனுக்கு மேளங்கள் - தாளங்கள் - குரவைகள் - கம்பக்கட்டு போன்றவை தேவையே இல்லை.

வழிபாடு ஆரவாரம் மிக்கதாக ஆவதை இத்திருமொழி கண்டிக்கிறது.

''உடம்புளே உத்தமன் கோவில் கொண்டான்'' என்பார் திருமூலர். அவனைக் காண இந்த ஆரவாரங்களுக்கு என்ன தேவை?

5. கண்ட கோவில் தெய்வமென்று
கையெடுத்தால் பலனுமுண்டோ?
அருள். ப. 44

தெய்வத்தைக் காண்பதற்காக கண்ட கோவில்களில் எல்லாம் கையெடுத்தால் என்ன பயன்?

மெய்யுணர்வு உடையவன் இறைவனைத் தனக்கு உள்ளே தான் தேடுவான். திருமூலர்
''உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்'' என்றார்.

''கண்ட கோவில் தெய்வமென்று
கையெடுப்ப தில்லையே'' என்றார் சிவவாக்கியர்.

எனவே மெய்யான இறைவழிபாட்டை யாவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். போலியான ஆரவாரங்களிலும் புறக்கோலங்களிலும் ஈடுபடத் தேவையில்லை என்கிறார் அய்யா.

○

46. இறைப்பணி

"கோவில் என்பது மிருகநிலையிலிருந்து மனிதரைத் தேவநிலைக்குக் கொண்டு செல்லும் தேவப் பள்ளிக்கூடங்கள்" என்றார் பாரதியார். இறைப்பணி என்பது மனிதர்க்கு ஆற்றும் பணியே. இறைவனுக்கு மனிதர் என்ன பணியை ஆற்றிவிட முடியும்? வைகுண்டர் இறைப்பணியை எவ்வாறு செய்ய வேண்டும்? என்று இவ்வியலில் விளக்குகிறார்.

1. அன்னமிடும் சாலைகள் தோறும்
ஆலயங்கள் வை. அகிலம்-ப. 6

அன்னம் எங்கு இடப்படுகிறதோ அங்கெல்லாம் ஆலயங்கள் வையுங்கள்.

ஆலயங்களில் அன்னதானம் செய்தல் வேண்டும் என்பது இந்துசமய மரபு. அன்னமிடும் சாலைகளில் ஆலயங்கள் வைக்க வற்புறுத்துகிறார் வைகுண்டர். பக்தி பசியில்லாத இடத்தில் தான் வளரும் என்ற உண்மையை இத்திருமொழி விளக்குகிறது.

2. இல்லாத எளியோர்க்கு
எனை நினைத்துத் தர்மமிட்டு
பல்லுயிர்க்கும் உன்னுயிராய்ப்
பாவித்து இரு. அகிலம்-ப. 139

இல்லாத ஏழைகளுக்கு என்னை நினைத்துத் தர்மம் இடுங்கள். பல்லுயிரையும் உங்கள் உயிராகப் பாவித்து வாழுங்கள்.

இறைவனை நினைத்து இடும்தர்மம் இடுபவனையே வளர்க்கும். இது பக்தியின் பெயரால் ஏற்படும் உயரிய வளர்ச்சி.

3. பந்தலிட்டுத் தண்ணீர்
பக்தர் தமக்கு அளி. அகிலம்-ப. 7

தேவையான இடங்களில் தண்ணீர்ப் பந்தல் வைத்து பக்தர்களுக்கு வழங்குங்கள்.

பக்தர்கள் மெய்யான சமூகத் தொண்டர்கள். அவர்கள் செல்லும் இடங்களில் பணி சிறக்கச் சிரமம் சிறிதும் ஏற்படலாகாது. அவர்கள் தாகத்தைக் கூட மற்றவர்கள் போக்க வேண்டும்,

4. அன்ன மடம்வைத்து
ஆகம் களிகூர
என்னேரமும் பிச்சையிடு. அகிலம்-ப. 7

வளம் உள்ளவர்கள் அன்னமடம் வையுங்கள். கொடுப்போர் மனமும் பெறுவோர் மனமும் களிப்பு அடையும் வகையில் எப்போதும் பிச்சையிடுங்கள்.

ஈட்டுவதால் வரும் இன்பத்தைவிட ஈவதால் வரும் இன்பம் பெரிது. பிறர்பசி தீர்த்தலே அறங்களில் பெரியது. இறைவன் பெயரால் அதைக் காலநேரம் பாராமல் செய்க.

5. சராசரத்தைப் போற்றித்
தானதர்மம் செய்திடுங்கோ. அருள்.ப, 29

எப்போதும் இறைவனைப் போற்றித் தானதர்மம் செய்து வாழ்வீர்களாக.

சராசரம் - பரம்பொருள். அவனைப் போற்றுதார் எச் செல்வத்திலும் உயர்வதில்லை. கிருஷ்ணந்தாதி ''அவனைத் தானே போய் சரணடையும் நலமில்லாதார் மீனைப் போல் தான் வாழும் நீரினிலே குழம்பாகி வெந்துபோவார்'' என்று எச்சரிக்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள்

''பொய்யா நாவதனால் புகழ்வார்கள் மனத்துள்ளே
மெய்யே நின்று எரியும் விளக்கு'' என்று மெய்ப் பொருளைப் போற்றினர். அப்பரடிகள்

''புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா நின்னடி
வழுவா திருக்க வரம்தர வேண்டும்'' என்று வேண்டினர். நாமும் அந்த மெய்யடியார்கள் வழியில் இறைவனைப் போற்றி அறம் செய்து வாழவேண்டும் என்கிறார் அய்யா.

○

47. சான்றோர்

உலகில் நல்லவை என்று எவையெல்லாம் உண்டோ அவற்றையெல்லாம் மேற்கொள்பவர்கள் சான்றோர்கள் என்பது திருவள்ளுவர் கோட்பாடு. அவர்கள் அன்பு, நாணம் பயன் எதிர்பாரா உதவி, இரக்கம் ஆகியவற்றினை அடிப்படையாகக்கொண்டு வாழ்பவர்கள். குணநலமே சான்றோர் நலம். சான்றோர் பற்றிய வைகுண்டர் கருத்துக்களை இவ்வியலில் காணலாம்.

1. சான்றோர் குலத்தைத்
   தற்காத்துக் கொள். அகிலம். ப. 3.

ஒவ்வொருவரும் சான்றோர்களையும் அவர்கள் குலத்தையும் காத்து வாழவேண்டும்.

தோன்றுப் பொருளாகிய இறைவனைத் தொடர்ந்து தம் ஆய்வால் கண்டவர்கள் சான்றோர்கள் என்று அகிலத்திரட்டு வேறோரிடத்தில் குறிப்பிடுகிறது.

''நன்றறி உள்ளத்துச் சான்றோர்''

என்று பதிற்றுப்பத்து இவர் மேன்மையைச் சுட்டுகிறது. எனவே அவர்களைக் காக்க வேண்டும்.

2. அண்டின பேரை
   அகற்ற நினையாதே. -அகிலம். ப. 206.

சான்றோர்களாக இருப்பவர்கள் தம்மை வந்து அடைக்கலமாக அடைந்தவர்களை எந்தச் சூழ்நிலையிலும் அகற்ற நினைக்கக் கூடாது.

அடைக்கலம் காத்தல் அறங்களில் சிறந்தது. சான்றோர் இதனைத் தம் உயர்ந்த கடமையாக மேற்கொள்ள வேண்டுகிறார் வைகுண்டர்.

3. ஆபத்தைக் காத்து
   அல்ல நீ தள்ளாதே. -அகிலம். ப. 206.

பிறர்க்கு வரும் ஆபத்தைக் காக்க வேண்டும். மேலும் அவர்க்கு அடைக்கலம் அளிக்க வேண்டும். அகலத் தள்ளக் கூடாது.

''பிறர் நோயும் தம் நோய்போல் போற்றி அறம்காத்தல்
சான்றவர்க்கு எல்லாம் கடன்''

என்று சான்றோர் கடமையைக் கலித்தொகை வரையறை செய்துள்ளது. அய்யாவும் பிறர் ஆபத்துக்காக்கவும் அடைக்கலம் அளிக்கவும் சான்றோர்க்கு அறமுரைத்துள்ளார்.

4. விள்ளாத ஞாயம்
மேல் ஞாயம். அகிலம். ப. 205.

வேறுபடச் சொல்லாத நியாயமே மேலான நியாயம் ஆகும்.

விள்ளுதல் - வேறுபடுத்துதல், சான்றோர்கள் நியாயம் உரைக்கும் கடமை உடையவர்களாக இருப்பர். எந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் வழக்குப்பட்டவர்களை வலிமை செல்வம் பதவி ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபாடு கண்டு ஒருதலை நியாயம் சொல்லக் கூடாது. நடுநிலைமையோடு கூடிய நியாயமே மேலான நியாயம் என்கிறார் அய்யா.

5. சத்துருவோடும் சாந்தமுடனே இரு.
அகிலம். ப. 207.

பகையாளியோடு கூட சாந்தமுடன் நடந்து கொள்ள வேண்டும்.

சாந்தம் சான்றோர் சிறப்பியல்பு. பகையானவர்கள்பால் அது தவறிவிடலாகாது.

''ஒளி உடையவர் ஆகுவர் சான்றோர்''

என்பது நாலடியார். சாந்தமில்லாவிட்டால் ஒளிபோய் விடும்.

O

48. மானம்

''தன் நிலையில் தாழாமையும் தெய்வத்தால் தாழ்வு
வந்தால் உயிர் வாழாமையுமே மானம்''

என்று மானத்தை விளக்கினார் பரிமேலழகர். மானம் மனத்தின் உயர்நிலை. சான்றோர் வானம் இழப்பினும் மானம் இழவார். மானத்தின் மாண்பை இவ்வியல் விளக்குகிறது.

1. மானம் நிறுத்திவை. -அகிலம். ப. 9.

மக்களே! மானத்தை நிலைநிறுத்தி வைத்து உலகில் வாழுங்கள்.

மானம்தான் புகழுக்குக் காரணமானது, சான்றோர்க்கு உயிர் நிற்கும் இடம் மானமே, கவிமணி

''மானமே வாழ்வின் உயிர் நிலையாம்''

என்றார். மானம் நிறுத்தி வாழ்பவனே மனிதன்.

2. மானமாய் வருந்தி மகிழ்ந்திரு.

அகிலம். ப. 201.

வருத்தமான நிலை வாழ்வில் வந்தாலும் அதை ஏற்று மானத்தைக் காத்து மகிழ்வு பெறுக.

வாழ்வில் மகிழ்வதற்குப் பல நேரங்களில் மானத்தை விட்டால் போதும்! அது கயவர் செயல். பழி. சான்றோர்,

''புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளார்''

என்பது புறப்பாட்டுக் கொள்கை. எனவே வருத்தப்பட்டேனும் புகழுக்குக் காரணமான மானத்தைக் காக்க வேண்டுகிறார் வைகுண்டர்.

3. மயங்காதே என் மகனே
மாதவங்கள் செய்தவனே. -அகிலம். ப. 204.

என்மகனே! பெரிய தவங்கள்செய்தவனே!எக்காலத்திலும் மயக்கம் கொள்ளாதே. மானமே வாழ்வில் உயர்வானது என்பதைத் தெளிக.

பழி செல்வம் தரும் மானம் வறுமை தரும் என்ற நிலை வரும் போது யாரும் மயங்குவர். ஆனால்

''இழிவரின் வாழாத மானம் உடையார்
ஒளி தொழுது ஏத்தும் உலகு''

என்ற குறள் நெறியை உணர்ந்து மயங்காமல் மானத்தைக் காத்து வாழ வேண்டும்.

4. ஆசையது உங்களுக்குத்
தோசமதாய் இருக்குதடா. அருள். ப. 44.

ஆசை மானம் காத்துவாழும் வாழ்வுக்குத் தோசம் செய்து விடும்.

பேராசை தோன்றும் உள்ளத்தில் மான உணர்ச்சி மங்கி விடும். மானம் பேணுபவர் பேராசையை அடக்க வேண்டும். என்று எச்சரிக்கிறார் அய்யா.

5. மானமாக இருந்தால்
மாளும்கலி தன்னாலே. அகிலம். ப. 206.

மானமாக வாழ்பவர்களிடம் இருக்கும் கலி தன்னாலேயே மாண்டுவிடும்.

'கலி என்பது வலிமாய நினைவு'

என்றார் முன்னர். மானம் உடையார் பீடு உடையார், அவர்கள் பேராண்மை உடையவர்கள், உயிரினும் மேலாக மானத்தை மதிப்பவர்கள், அவர்கள் வாழ்வில் மாயத்துக்கு இடமில்லை. எனவே அவர்களிடம் கலி அழிந்துவிடும் என்று தெளிவுபடுத்துகிறார் எம்பெருமான்.

O

49. தொண்டு

தொண்டு நெறிதான் பண்டு முதல் கற்கண்டு நெறியாகத் திகழ்ந்து வருகிறது. தொண்டர்களால் வாழ்கிறது தொல்லுலகம்.

''தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே''

என்றூர் ஔவை மூதாட்டியும். அத்தொண்டு-தொண்டர் பெருமை இவ்வியலில் விளக்கப்படுகிறது.

1. தொண்டர் தமக்கு
   சூல்பிறவி ஒன்று. -அகிலம். ப. 172.

பிறர்க்குத் தொண்டு புரிந்து வாழும் தொண்டர்களுக்குப் பிறவி ஒன்று தான் உண்டு.

பிறவி ஆசையால் விளேகிறது.

''இடையருத பிறவியை ஈனும் வித்து ஆசையே''

என்று திருவள்ளுவரும் கூறியுள்ளார்.

தொண்டர்கள் தம் ஆசையைத் துறப்பதாலேயே பிறர் நலத்துக்கு உழைக்கவும் தொண்டர்களாக வாழவும்முடிகிறது. அவர்களுக்குத் தொடர் பிறவி இல்லே. பெற்ற சூல் பிறவி ஒன்றே என்கிறூர் அய்யா.

2. மானமுள்ள தொண்டருக்கு
   இறப்பில்லாப் பேறு. -அகிலம் ப. 172.

தொண்டர்கள் மானம்மிக உடையவர்கள், அவர்களுக்கு இறப்பில்லாப் பேறு வாய்க்கும்.

இறப்பில்லாப்பேறு - நித்திய வைகுண்ட வாசம். தொண்டர்களே வீடுபேறு அடைவார்கள் என்று இத்திருமொழி விளக்குகிறது.

''தொண்டலால் துணேயும் இல்லே''

என்று திருநாவுக்கரசர் இவ்வுண்மைக்குச்சான்றளித்துள்ளார்.

3. அஞ்சுப்பூக் கொண்டு
   ஆசாரம் செய்வோர்க்கு
   வஞ்சக மில்லாத
   வாழ்வு கொடு. -அகிலம். ப, 215.

ஐம்பொறிகளாலும் பிறர்க்குத் தொண்டுபுரிந்து வாழும் மெய்யடியார்களுக்கு இறைவன் நல்வாழ்வு கொடுப்பான்.

'வாழ்வு கொடு' என்றது வைகுண்டர் 'தானே அவன்' ஆனநிலையில் பரம்பொருள் கூறியது.

4. வேலை செய்தால் வினை இல்லை அருள். ப. 37.

பிறருக்குத் தொண்டு வேலை செய்பவர்களுக்குத் தீவினை ஏதும் வருவதில்லை.

இடையருத தொண்டே இன்பவாழ்வுக்கு முதற்படி. தொண்டர்கள் தூய்மையானவர்கள். எனவே துறவுநெறியிலும் தொண்டு நெறியே உயர்ந்தது. பகவான் கிருஷ்ணன் கீதையில்.

''கர்மத் துறவைக் காட்டிலும்
கர்ம யோகம் மேம்பட்டது''

என்றார். வைகுண்டரும் அவ்வுண்மையை வலியுறுத்துகிறார்.

5. ஒருவருக்கொருவர்
ஊழியங்கள் செய்யாமல்
கருதல் சிவன் பேரில்
கருத்தாய் இரு. -அகிலம். ப. 10.

உலகில் யாரும் ஒருவருக்கொருவர் அடிமை வேலை செய்யாதீர். இறைவன் பேரில் கருத்து உள்ளவர்களாக அவனை நினைத்து வாழுங்கள்.

ஊழியம் அடிமை வேலை தொண்டர்கள் அடிமைகளாக இருக்கக் கூடாது. அது தொண்டு நெறி அல்ல. இறைவனைப்

''பத்தர் சித்தம் பரவ இனியான்''

என்றார் சுந்தரர். இறைவனைப் பரவி எல்லார்க்கும் தொண்டராய் வாழ்க என்று வாழ்த்துகிறார் வைகுண்டர்.

O

50. தர்மம்

தர்மம் என்பது இறைவனை நினைந்து யாவர்க்கும் கொடுப்பது, இல்லாதவர்க்கு ஈவது ஈகை. இறைவனை நினைப் பதும் எல்லார்க்கும் கொடுப்பதும் தர்மத்தின் சிறப்பு. தர்மத்தின் தகைமையை இவ்வியல் எடுத்தோதுகிறது.

1. தானதர்மம் செய்து கொண்டு
தழைப்பீர்கள். -அகிலம். ப. 29.

நீங்கள் வாழ்வில் தழைக்க வேண்டுமானல் தானதர்மம் செய்து வாழ்வீர்களாக.

கொடுக்கக் கொடுக்கவே செல்வம் குவியும். எனவே செல்வத்தில் தழைக்கக் கொடுப்பதே மார்க்கம் என்கிருர் அய்யா. திரிகடுகம்

''அறவினையைக் காராண்மை போல ஒழுகு''

என்று கட்டளை இடுகிறது. காராண்மை-பெருமழைப் பொழிவு அது போல் தர்மம் செய்பவர் தழைப்பர்.

2. தான தவங்கள்
தப்பிமிகப் போக விடாதே -அகிலம். ப. 8.

வாழ்வில் தானத்தையும் தவத்தையும் தவற விட்டு விடாதீர்கள்.

வாழ்வில் எத்தனையோ கடமைகள் தப்பிப் போகும், போகலாம். தானமும் தவமும் உயிர்க்கடமை. தானம் பிறர்க்குச் செய்வது, தவம் தனக்குச் செய்வது. இவ்விரண்டும் தப்பிவிடக் கூடாது. ஏலாதி

''தவம் எளிது தானம் அரிது''

என்கிறது. எனவே தவத்திலும் தானத்துக்கு முக்கியத்துவம் அளிக்கிருர் அய்யா.

3. எல்லாம் கடதலைக்கு
இட்ட தர்மமே கொதிக்கும்.
அகிலம். ப. 268.

எல்லாவகையான நற்காரியங்களையும் ஒருவன் செய்து வந்தாலும் இறுதியில் அவன் வாழ்வின் உயர்வுக்கு அவன் இட்டதர்மமே உதவும்.

கடதலே இறுதி. இவ்வுலக வாழ்வில் இறுதி ஏற்படும் போது தர்மமே துணையாக வரும். மற்றவெல்லாம்

''காதற்ற ஊசியும் வாராது காண்''

என்று பட்டினத்தடிகள் கூறியது போல ஒருவனுக்குத் துணையாவதில்லை.

4. தர்மம் பெருகுமடா
தளிர்ப்பாய்நீ மகனே. -அருள். ப. 25.

மகனே வாழ்வில் நீ இட்ட தர்மம் தான் மேன் மேலும் பெருகும். அதனால் வாழ்வில் தளிர்ப்பு அடைவாய்.

தர்மம் செய்பவன் செல்வம் பெருகும். அவன் செல்வத்தில் தளிர்ப்பான்.

''இலவசமாய்ப் பெற்றுக் கொண்டீர்கள்
இலவசமாய்க் கொடுங்கள்''

என்றார் இயேசு. இவ்வுணர்வோடு செல்வர் தர்மம் செய்ய வேண்டும்.

5. கண்டு கொள்ளார்கள்
கலிமாசு கொண்டவர்கள்.

கலிமாசு பிடித்தவர்கள் தர்மத்தின் சிறப்பைக் கண்டு கொள்ளமாட்டார்கள்.

'தர்மத்தால் கலியைத் தன்னந்தன்னால் கரைக்கலாம்'

என்று முன்னர் உரைத்தார். இவ்வுண்மை அறியாதவர்களே தர்மத்தைப் புறக்கணிப்பர்.

வீட்டுலக வாழ்வுக்குத் தர்மமே திறவுகோல் என்பதறிந்து ஒழுக ஆணையிட்டுள்ளார் அய்யா.

O

51. மெய்யுணர்வு

''மெய்யுணர்வு என்பது தத்துவ ஞானம். பிறப்பு வீடு களையும் அவற்றின் காரணங்களையும் இறை அருளால் உணர்தல்'' என்று இதனை விளக்குவார் பரிமேலழகர்.

'தியானத்திலிருந்து ஞானம் உதயமாகிறது'

என்று புத்தர் பெருமான் விளக்குவது தத்துவ ஞானத்தையே. மெய்யுணர்வு பற்றிய வைகுண்டசாமியின் கருத்துக்களை இவ்வியலில் காணலாம்.

1. தோணிக்கச் சிந்தை
துலங்கி வழிகாட்டும். -அகிலம். ப. 174.

இறைஉணர்வு இதயத்தில் தானே தோன்றும். சிந்தனை அதைத் துலக்கி வழிகாட்டி நிற்கும்.

மெய்ஞானம் முயற்சியால் வருவதன்று இறை அருளால் கைகூடுவதாகும். வள்ளல் பெருமான்

''ஓதா துணர்ந்திட ஒளியளித் தெனக்கே
ஆதார மாகிய அருட்பெருஞ் ஜோதி''

என்று இந்நிலையை அனுபவத்தால் விளக்கியுள்ளார்.

2. நல்லார்க்கு ஒரு நினைவே நலமாகும்.
அகிலம். ப. 204.

நல்லார் மெய் ஞானம் பெற வேண்டும். ஒரு நினைவையே பற்றி நிற்க வேண்டும். அது அவர்க்கு நலமாகும்.

''உணர உணரும் உணர்வுடை யாரைப்
புணரப் புணருமாம் இன்பம்''

என்று நாலடியார் கூறுகின்றது. உணர்வு குவிதலே மெய்யுணர்வுக்கு வழியாகும்.

''தத்தம் மனத்தினுல் ஆகும் மதி''

என்று சிறுபஞ்சமூலமும தெளிவுபடுத்துகிறது.

3. கண்ணுல் மனக்கண்ணுல்
காணுமப்பா வழியது தான். -அருள். ப. 35.

அப்பா! மெய்யுணர்வு பெறுவதற்கான வழியை மனக் கண்ணுல் தான் காண வேண்டும்.

பூமியில் வழிகாணக் கண்கள் இருக்கின்றன. இந்த புறக் கண்களால் மெய்யுணர்வுபெறஇயலாது. அகக்கண்வேண்டும். அகக்கண் பெற்ற வரை

''ஓதாதும் ஓதியனையார் உணர்வுடையார்''

என்று நாலடியார் அடையாளம் காட்டுகிறது. வைகுண்டரும் புறத்தை நாடுவதை விடுத்து அகத்தை நாடுமாறு இத்திரு மொழியால் வழிகாட்டுகிறார்.

4. எப்படியும் உள்ளறிவார் எனையறிவார்
அறிந்தோர் அறிவார்
அறியாதார் நீருவார். அகிலம். ப. 168.

மகனே! மெய்யுணர்வு உடையவரே என்னை அறிவார்கள். மற்றவர்கள் நீருகிப் போவார்கள்.

உள்ளறிதல் என்பது நிரம்பிய காட்சி ஆகும்.

''நிரம்பிய காட்சி வரம்பில் பெருமை தரும்''

என்று பழமொழி நானூறு பகர்கிறது. மெய்யறிவுடையவரே மேலாவார். மற்றவர் நீருவார்.

5. காணுவோர் காண்பார்
காணாதார் வீணுவார்.

மெய்யுணர்வு உடையவர் இறைவனைக் காண்பார்கள். காணாதவர்களின் வாழ்வு வீணாகும்.

மெய்யுணர்வினை ஒருவர் மற்றவர்க்கு அளிக்க இயலாது. அது தானே பெறும் தகைமை. இறைவனைத் தரிசிப்பதே பேரின்பம். அதை மற்றவர்க்கு உணர்த்தவும் இயலாது. இதனை

''மகளுக்குத் தாய்தன் மணாளனோடு ஆடிய
சுகத்தைச் சொலலென்றால சொல்லுமாறு எங்ஙனே?''

என்று உவமையால் வினவினார் திருமூலர்.

எனவே ஒவ்வொருவரும் தத்தம் மனத்தை இறைவன் பால் செலுத்தி மெய்யுணர்வுற்று மேலான இறைக்காட்சியைப் பெறுதல் வேண்டும்.

o

51. மெய்யுணர்வு

''மெய்யுணர்வு என்பது தத்துவ ஞானம். பிறப்பு வீடு களையும் அவற்றின் காரணங்களையும் இறை அருளால் உணர் தல்'' என்று இதனை விளக்குவார் பரிமேலழகர்.

'தியானத்திலிருந்து ஞானம் உதயமாகிறது'

என்று புத்தர் பெருமான் விளக்குவது தத்துவ ஞானத்தையே. மெய்யுணர்வு பற்றிய வைகுண்டசாமியின் கருத்துக்களை இவ்வியலில் காணலாம்.

1. தோணிக்கச் சிந்தை
துலங்கி வழிகாட்டும். -அகிலம். ப. 174.

இறைஉணர்வு இதயத்தில் தானே தோன்றும். சிந்தனை அதைத் துலக்கி வழிகாட்டி நிற்கும்.

மெய்ஞானம் முயற்சியால் வருவதன்று இறை அருளால் கைகூடுவதாகும். வள்ளல் பெருமான்

''ஓதா துணர்ந்திட ஒளியளித் தெனக்கே
ஆதார மாகிய அருட்பெருஞ் ஜோதி''

என்று இந்நிலையை அனுபவத்தால் விளக்கியுள்ளார்.

2. நல்லார்க்கு ஒரு நினைவே நலமாகும்.
அகிலம். ப. 204.

நல்லார் மெய் ஞானம் பெற வேண்டும். ஒரு நினைவையே பற்றி நிற்க வேண்டும். அது அவர்க்கு நலமாகும்.

''உணர உணரும் உணர்வுடை யாரைப்
புணரப் புணருமாம் இன்பம்''

என்று நாலடியார் கூறுகின்றது. உணர்வு குவிதலே மெய்யுணர்வுக்கு வழியாகும்.

''தத்தம் மனத்தினால் ஆகும் மதி''

என்று சிறுபஞ்சமூலமும் தெளிவுபடுத்துகிறது.

3. கண்ணால் மனக்கண்ணால்
காணுமப்பா வழியது தான். -அருள். ப. 35.

அப்பா! மெய்யுணர்வு பெறுவதற்கான வழியை மனக் கண்ணால் தான் காண வேண்டும்.

பூமியில் வழிகாணக் கண்கள் இருக்கின்றன. இந்த புறக் கண்களால் மெய்யுணர்வுபெறஇயலாது. அகக்கண்வேண்டும். அகக்கண் பெற்ற வரை

''ஓதாதும் ஓதியனையார் உணர்வுடையார்''

என்று நாலடியார் அடையாளம் காட்டுகிறது. வைகுண்டரும் புறத்தை நாடுவதை விடுத்து அகத்தை நாடுமாறு இத்திரு மொழியால் வழிகாட்டுகிருர்.

4. எப்படியும் உள்ளறிவார் எனையறிவார்
அறிந்தோர் அறிவார்
அறியாதார் நீருவார். அகிலம். ப. 168.

மகனே! மெய்யுணர்வு உடையவரே என்னை அறிவார்கள். மற்றவர்கள் நீருகிப் போவார்கள்.

உள்ளறிதல் என்பது நிரம்பிய காட்சி ஆகும்.

''நிரம்பிய காட்சி வரம்பில் பெருமை தரும்''

என்று பழமொழி நானூறு பகர்கிறது. மெய்யறிவுடையவரே மேலாவார். மற்றவர் நீருவார்.

5. காணுவோர் காண்பார்
காணுதார் வீணுவார்.

மெய்யுணர்வு உடையவர் இறைவனைக் காண்பார்கள். காணுதவர்களின் வாழ்வு வீணுகும்.

மெய்யுணர்வினை ஒருவர் மற்றவர்க்கு அளிக்க இயலாது. அது தானே பெறும் தகைமை. இறைவனைத் தரிசிப்பதே பேரின்பம். அதை மற்றவர்க்கு உணர்த்தவும்இயலாது. இதனை

''மகளுக்குத் தாய்தன் மணாளனேடு ஆடிய
சுகத்தைச் சொலலென்ருல சொல்லுமாறு எங்ஙனே?''

என்று உவமையால் வினவினுர் திருமூலர்.

எனவே ஒவ்வொருவரும் தத்தம் மனத்தை இறைவன் பால் செலுத்தி மெய்யுணர்வுற்று மேலான இறைக்காட்சியைப் பெறுதல் வேண்டும்.

O

52. முனிவர்

பாவத்தையும் கோபத்தையும் விலக்கியவர்கள் முனிவர்கள். அவர்களை நீத்தார் என்றார் திருவள்ளுவர். குணமென்னும் குன்றேறி நிற்பவர்கள் என்று அவரைத் திருவள்ளுவர் போற்றியுள்ளார். ஆக்கவும் அழிக்கவும் வல்லமை பெற்றவர்கள் அவர்கள். அவர்கள் திறம் இவ்வியலில் விளக்கப்படுகிறது.

1. சாபத்தைக் கூறாதுங்கோ
   சுந்தர முனிவர்களே. -அகிலம். ப. 215.

அழகிய முனிவர்களே! நீங்கள் யார் மேலும் சாபம் கூறாதீர்கள்.

தவத்தால் பொலியும் 'தேஜஸ்' இங்கு 'சுந்தரம்' என்று போற்றப்பட்டுள்ளது. தவமுனிவர்களின் குறிக்கோளை.

''தீமை மனத்தினும் வாயினும் சொல்லாமை.
தவத்தின் தருக்கினார் கோள்''

என்று திரிகடுகம் கூறுகின்றது.

2. மெய்கண்ட மணிகளான
   மேன் மக்கள் சான்றோரெல்லாம்
   பொய்கண்ட கலியை விட்டுப்
   பொற்பதம் பெறுவார். -அகிலம். ப. 350.

முனிவர்கள் மேன்மக்கள். சான்றோர்கள். மெய்கண்டவர்கள். அவர்கள் பொய்யில் நிலைத்த கலியைவிட்டு இறைவனின் பொற்பாதங்களைப் பெற்று வாழ்வார்கள்.

துறவிகளைத் திரிகடுகம்
''வழுவின்றி மாண்ட மனத்தார்'' என்றும்
''செய்வகை செய்வான் தவசி'' என்றும் சிறப்பிக்கிறது
தவசிகள் கலியைக் கையகற்றி மெய்ப் பொருளைக் கண்டு வாழ்வார்கள்.

3. பண்டாரத்தோடே
   பழிமொழிகள் பேசாதே. -அகிலம். ப. 298.

துறவிகளிடம் யாரும் பழிமொழிகள் பேசக்கூடாது.
துறவிகள் ''தன்னைத் தன்னாலே உயர்த்திக் கொள்க''
என்ற கீதாசிரியன் அறிவுரைப் படி துறவுபூண்டவர்கள்.

'அடல் வேண்டும ஐந்தன் புலத்தை'

என்ற குறள் நெறிப்படி ஐம்பொறி உணர்வுகளையும் கட்டுப் படுத்தியவர்கள்.

'ஞானத்தின் மிக்க அறநெறி இல்லை'

என்ற திருமந்திரக் கோட்பாட்டின்படி ஞானயோகம் பயின்ற வர்கள். அவர்கள் சாதுக்கள். அதே நேரம தவ வலிமையும் உடையவர்கள். எனவே அவர்கள் நேருக்குயாரும் பழிமொழி கள் பேசலாகாது என்கிருர் வைகுண்டர்.

4. பொல்லாப்புக் காட்ட வேண்டாம்.

அருள். ப. 41.

துறவிகள் யார்நேருக்கும் தீங்குகளைச்செய்ய வேண்டாம்.

முன் மொழியில் துறவிக்குப் பிறர் செய்யும் தீமையை விலக்கி இத்திருமொழியில் துறவிகள் சினம் கொண்டு செய்யத் தகும் தீமையை விலக்குகிருர். துறவிகள் நூல் விதிப்படி வாழ்பவர்கள்,

'தந்திரத்தின் மிக்க தவசிகள் மாண்பு இனிதே'

என்கிறது இனியவைநாற்பது. சினம் கொண்டால் இந்த மாண்பு அழியும்.

5. சாத்திர வேதம் சமயம் வழுவாமல் சூத்திர மாகத்துல்வப்படுத்து.

அகிலம். ப. 8.

துறவிகளே நீங்கள் சாத்திரங்களிலும் வேதங்களிலும் கூறிய நெறிகளில் வழுவாமல் வாழ வேண்டும். சூத்திரம் போல எளிமை, சுருக்கம் உடையவர்களாக வாழ்வை நெறிப் படுத்த வேண்டும்.

''ஞானிக்கு இல்லை இன்பமும் துன்பமும்''

என்பது வெற்றி வேற்கை. எனவே அவர்கள் வாழ்வைத் துல்வப்படுத்த வேண்டும்.

O

53. தவம்

தவம் செய்பவர்களே தம் கருமம் செய்பவர்கள். மற்றவர்களெல்லாம் ஆசையினால் அவம் செய்கிறார்கள் என்பார் திருவள்ளுவர். தவம் என்பது தன்னைக் கட்டுதல், முன்னை வினையெல்லாம் அறுத்தல், பின்னை உயர்கதிக்கு வழிதேடல். தவத்தின் மாண்பினை அய்யா இவ்வியலில் விளக்குகிறார்.

1. தவமே பெரிதெனவே
   தவநிலைகள் செய். -அகிலம். ப. 6.

தவமே வாழ்வில் பெரியநிலை. இதை உணர்ந்து தவநிலைகளைப் பேணிச் செய்வாயாக.

"தலையே தவம் முயன்று வாழ்தல் ஒருவற்கு"

என்று நாலடியார் நவில்கிறது. இதையே 'பெரிது' என்று எம்பெருமான் கூறினார்.

தவநிலைகள் மனிதமனத்தைச் செம்மைப்படுத்தி அவனைத் தீயினில் பொன் போல ஒளிரச்செய்யும். எனவே தவநிலைகளைச் செய்ய ஆணையிட்டார் அய்யா.

2. வல்ல தவசு
   மனம் பிரியாமல் செய். -அகிலம். ப. 104.

தவசு செய்வதே வாழ்வில் வல்லமையான காரியம். அதை மனம் பிரியாமல் செய்க.

மனம் பிரிதல்-இடையில் கைவிட்டு விடுதல், அரைத் தவசு. மன உறுதி இல்லாதவன் இவ்வாறு செய்வான். அதனால் துன்பமும் வரும். இன்னா நாற்பது

"இன்னா நிறையிலான் கொண்ட தவம்"

என்று எச்சரித்துள்ளது. எனவே தவம் மேற்கொண்டால் மனம் பிரியாமல் செய்தல் வேண்டும்.

3. நன்மையொடு தின்மை நற்பேச்சு துர்ப்பேச்சு
   உண்மையொடு தன்னை ஒன்றுமிகப் பாராமல்
   மகாபரனை நெஞ்சில் மறவாமல் எப்போதும்
   கண்டிரு என் மகனே
   கருத்தொன்று தான் நாட்டி. அகிலம். ப. 200.

மகனே! நீ தவம்மேற்கொண்டால் எப்போதும் மகாபரனை நெஞ்சில் மறவாமல் கண்டவண்ணமாக இரு. நன்மை தீமை நற்பேச்சு துர்ப்பேச்சு தன்னை நினைத்தல் ஆகிய எவற்றிலும் மனம் செலுத்தாதே.

'தவத்தையும் உலகத்தையும் தராசில் நிறுத்தால்
உலகம் தவத்துக்கு ஒப்பாகாது'

என்கிறது புறநானூறு.

''தவம் தனக்கு ஒப்பாவது தவமே ஆகும்''

என்கிறது காஞ்சிப் புராணம். எனவே தவம் மேற்கொள்பவர்கள் வேறெதையும் நினைக்கக்கூடாது என்கிறார் அய்யா.

4. தவத்துக்கு உறுதி உண்டு. அகிலம். ப. 289.

தவமே உலகில் உள்ளங்களுக்கு உறுதிதரும் காரியம். தவத்துக்கு மிக உறுதி இருக்கிறது.

இறைவனைத் 'தவமான தன்மையான்' என்று போற்றுகிறார் திருநாவுக்கரசர். திருமூலர்.

''சத்திய ஞானத்தால் தங்கும் தவங்களே''

என்று தெளிவு படுத்துகிறார். எனவே தவத்தில் செல்பவர்கள் உறுதி உள்ளவர்களாக இருக்க வேண்டும். அது அவர்களுக்கு உறுதி அளிக்கும்.

5. பாசம் அறுத்தல்லவோ
பரகதியை நாடுவது. -அகிலம். ப. 163.

பரகதியை விரும்புவது பாசங்களை அறுத்தபின்னே செய்ய வேண்டியகாரியமாகும்.

பாசம் அறுக்காமல் பரகதியை நாடுவோர் 'பக்த நடிகர்கள்' என்பார் மணிவாசகர்.

'நாடகத்தால் உன்னடியார் போல் நடிப்பவர்கள்'

என்பது அவர் கூற்று. நாலடியார்.

''விளக்குப் புகஇருள் மாய்ந்தாங்கு
ஒருவன் தவத்தின் முன் நில்லாது பாவம்''

என்கிறது. எனவே பாசத்தை அறுத்துப் பாவத்தை ஒழிக்க வேண்டும்.

O

54. யோகம்

தவத்தின் செயல்படுநிலை யோகம். பக்தியின் ஊற்றுக் கண் யோகம்.

"யோகம் இல்லார்க்கு பக்தி இல்லை"

என்கிறது பகவத் கீதை. யோகநிலையில் பொறிகளின் ஆசை அடங்கி மனம் சமநிலைப்படும். அந்நிலையில் சமாதி வாய்க்கும். அதனையே பௌத்தம் 'நிர்வாணப்' என்கிறது. யோகம் சித்தர் நெறி. யோகத்தின் நிலைகளை இவ்வியல் விளங்குகிறது.

1. மூக்குச் சுளியும்
முச்சுளியும் முத்தி முத்தி
நோக்குச் சுளியாய் நேர்நில்.

அகிலம். ப. 198.

மூக்குச் சுவாசத்தினையும் மூவணைகளையும் எப்போதும் மோகித்திரு. உன்பார்வையை நேராக அதில் செலுத்தி நோக்கில் உறுதிபடுவாயாக.

மூக்குச்சுளி- இடகலை, பிங்கலை. முச்சுளி-சிவ-சிவ-பர என்னும் துரியங்கள். இதனை 'மூவணை' என்பர். யோகம் செய்பவன் இவற்றில் மனம் ஊன்றிப் பார்வை நிறுத்திப்பயில வேண்டும். பயிற்சி முறையை யோகமறிந்தார் வாய்க்கேட்க.

2. கொண்டை அமுதுண்டு
குவிந்து இரு. -அகிலம். ப. 200.

இடையருத யோகம் செய்து சிரசில் ஊறும் அமுதத்தை உண்டு மனம் குவிந்து இருப்பாயாக.

யோகிகளின் நீண்ட யோகமுயற்சியில் வாயமுது உண்பதில்லை. அவர்கள் பசி தாகம் இன்றி இருக்க சிரசில் ஊறும் அமுதமே காரணம் என்பர் அந்த கொண்டை அமுதைப் பருகி மனம் ஒன்றி இருக்க ஆணையிடுகிறார் அய்யா.

3. மனம் சித்தம் புத்தி ஆங்காரம்
நாலும் அடக்கி மோனத்து இரு.

அருள். ப. 17.

யோகியே! நீ மனம் நினைவு அறிவு அகங்காரம் என்ற நான்கையும் அடக்கி மவுனத்தில் இரு.

'மோனம் என்பது ஞானவரம்பு'

என்பது கொன்றை வேந்தன். யோகி நால்வகை உணர்வையும் அடக்கி மோனத்தில் இருக்க ஆணையிடுகிறார் அய்யா.

4. அண்ட மெல்லாம் பிண்டமதாய்
ஐந்தறைக்குள் அடக்கு. அருள். ப. 35.

ஐம்பூதங்களையும் ஐம்பொறிகளுக்குள் அடக்கி யோகத்தில் நிலைத்திருப்பாயாக.

ஐந்தறை என்பது மனிதனின் ஐம்பொறிகளை, ஐம்பூதங்களின் தன்மையில் ஐம்பொறிகளும் அமைந்துள்ளன. அவற்றை இவற்றுக்குள் அடக்க உத்தரவிட்டுள்ளார் அய்யா. அந்நிலையில் ஒருவன் சமாதியைக் கூடுவான். செயலற்றிருப்பான்.

''செயலற்றிருத்தல் சிவானந்த மாகும்''

என்பது திருமந்திரம்.

5. பரமான பட்டணத்தில்
பார்வை கொண்டே நாட்டி
சிரமானது விரித்து
சிறையே இரு. அகிலம். ப. 198.

யோகியே! உன்பார்வை பரம்பொருள் கோவில்கொண்ட வீட்டுலகில் இருக்கட்டும். சிரம் விரிந்து இருக்கட்டும். சிறைக் கைதி போலநீ இருப்பாயாக.

பரமான பட்டணம் சொர்க்கம். சிரம் விரித்தல் புத்தியை விரிவாக்கி இறைவனைத் தேடுதல். இது யோகத்தின் முதிர்ந்த நிலை. பெரிய யோகிகளுக்கே இயல்வது. நான்மணிக்கடிகை

''பெரிய பெரியரால் எய்தப்படும்''

என்கிறது. இதை அடைபவர் சித்தர்கள், திருமந்திரம்

''யோக சமாதி அமர்ந்தவர் சித்தரே''

என்று இவர் பெருமையை விளக்குகிறது.

O

55. வீடு

''வீடு என்பது சிந்தையும் மனமும் செல்லா உயர்கதி'' என்பார் பரிமேலழகர். சொர்க்கம் என்கிறோம் நாம்.

'தர்மபுவி தோன்றும் நிலை'

என்று இதனை அகிலத்திரட்டு வர்ணிக்கிறது. வீடு இறைவனின் உலகம். அதை அடைவதே மானிட லட்சியம். வீட்டின் சிறப்பை வைகுண்டர் இவ்வியலில் விளக்குகிறார்.

1. பரம் பூமி கண்டு
   பாவித்திரு மகனே. -அகிலம். ப. 206.

மகனே வீட்டு உலகத்தைக் கண்டு அதன் வாழ்வில் ஒன்றியிருப்பாயாக.

வைகுண்டர் வழிச் செல்வோர் பரம்பூமி காண்பர். அதில் சுகம் அனுபவித்திருப்பர். திரிகடுகம்,

''பொய்யின்றி நெஞ்சம் அடங்குதல் வீடு''

என்று கூறுகிறது. பரம்பூமி கண்டு பாவிப்பார் மனம் அடங்குதல் ஒருதலை.

2. மோட்சத்தைத் தேட
   மூர்க்கத்தை விட்டுவிடு.

மூர்க்கர் அடையார் வீடு. எனவே மூர்க்கமதை விட்டு மோட்சத்தைத் தேடுக.

''ஞானத்தால் வீடு ஆகும்''

என்பது சிறுபஞ்சமூலம்.

''மோனம் கைவந்தார்க்கு முத்தியும் கூடும்''

என்பார் திருமூலர். எனவே மூர்க்கத்தை விட்டு மோனத்தைக் கடை பிடிக்கச் சொல்கிறார் அய்யா.

3. தர்மபுவி கண்டு
   தனிருக்கும் மக்களுக்கு
   வர்மமில்லை நோவுமில்லை
   மறலி வினையுமில்லை.

மக்கள் தர்மபுவி கண்டு வாழ வேண்டும். அவ்வாறு காண்பவர்களுக்கு வர்மம் நோவு எமன் செயல் ஏதும் இல்லை.

தர்மபுவி அடைதலே வாழ்வின் இலக்கு. அதை அடைபவர் அடையும் நலன்களை இத்திருமொழி விளக்குகிறது. தர்ம புவிஅடைந்தவர்களுக்கு மரணமும் இல்லை என்கிறார்.

4. மெய்யென்று சொன்னவர்க்கு
மேலோகம் தோன்றும். -அருள் ப 23.

'பரம்பொருளே மெய்யானது'
என்று உணர்ந்து சொல்லக் கூடியவர்களுக்குத் தர்மபுவி காட்சி தோன்றும்.

இது இன்னொருவர் கற்பிக்கும் அறிவன்று.
''தன்னால் தான் ஆகும் மறுமை''
என்பது நாலடிப்புலவர் நன்மொழி. ஒவ்வொருவரும் தாமே உணர்ந்து உரைத்து ஒளி பெறுதல் வேண்டும்.

5. சத்தியமாய் இருக்க வேணும்
தர்மபதி கிடைக்கும். -அருள். ப, 30.

சத்திய நெறியில் வாழ்பவர்கள் தர்மபதி வாழ்வு பெறுவார்கள்.

சத்தியம் தான் தர்மபுவியின் திறவுகோல் என்பதை உணர்தல் வேண்டும். இந்த அறிவு இல்லாதார்க்கு மோட்சம் இல்லை.

'முத்திக்கு வித்து முதல் தன் தன் ஞானமே'
என்பார் திருமூலர். இந்த ஞானம் மோனத்தைத் தரும். அப்போது வீடு வசமாகும். சித்தர் இடைக்காடர்.
''மோன நிலையில் முத்தி உண்டாகும்''
என்று முடிவுரைத்தார்.

இந்நெறிகளைப் பேணி 'தர்மபுவி' என்ற வீட்டுலக வாழ்வை அனைவரும் அடைந்து உய்ய வழி காட்டியுள்ளார் வைகுண்ட பெருமான்.

O

வாழ்த்து

ஆணுடன் பெண்ணும் பெற்று
அதிகமாய்ச் செல்வ மாகித்
தாணுட நினைவும் உற்று
தர்மமும் நெறியும் கற்று
வேணும் நீள் காலம் எல்லாம்
மெல்லியர் உடனே வாழ்ந்து
பூணுதல் கமல நாதன்
பொற்பதம் பெற்று வாழ்வீர்.

அகிலம். ப. 366.

மக்களே நீங்கள் விரும்பும் நீண்ட காலம் வரை மென்மையான துணைவியருடன் வாழ்க! ஆண் பெண் மக்களைப் பெற்று வாழ்க! மிகுந்த செல்வமுடன் வாழ்க! சிவன் நினைவோடு வாழ்க! தர்மத்தையும் நல்வழிகளையும் கற்று வாழ்க! அழகிய ஆபரணங்களை அணிந்த நெற்றியினை உடைய பூமகள் கணவனாகிய திருமாலின் பொன் போன்ற பாதங்களைப்பெற்று வாழ்க!

வைகுண்டர் ஞான மொழிகள் முற்றிற்று.

o

விரைவில் வெளிவருபவை......

உயர்நிலைக் கலையியல் நிறைஞர்

திருக்குறட் செல்வர்

புலவர். கு. பச்சைமால்

M.A. (தமிழ்) *M.A.* (வரலாறு) *A.M.A.*

அவர்களின்

அய்யாவழி நூல்கள்

1. பகவான் வைகுண்டர் வரலாறு
2. வைகுண்டர் திரு அருட்பாடல்கள்
3. வைகுண்டர் பிரபந்தங்கள்
4. அகிலத்திரட்டுக் கதைகள்
5. அய்யா வழி
6. வைகுண்டர் அற்புதங்கள்
7. வைகுண்டர் தீர்க்கதரிசனங்கள்.

★

பூவாணி பதிப்பகம்

சாமிதோப்பு - 629 704,

குமரிமாவட்டம்.



வைகுண்டர் தவச்சாலை
சாமிதோப்பு
வடக்கு வாசல் மண்டபம்